தமிழ்த் தென்றல்

7 3-4

ஜனவரி-பெப்ருவரி, 1953

ஆசிரியர் V.V.
M.L.
226
1.53.

தமிழ்த் தென்றல்

3-4

ஜனவரி-பிப்ரவரி, 1953

மக்களுக்கு மகிழ்ச்சி அளிப்பதே எங்கள் நோக்கம்

தரத்தில் முதன்மை! காட்சியில் பெருமை!

தமிழகத்தின்

தலைசிறந்த தொழிற் நிலையம்

"ஸ்டாண்டர்டு"

பட்டாசு வகைகளில் பலவிதம்

மத்தாப்பு ரகங்கள் அநேகம்

கம்பி மத்தாப்பு..........கலர் மத்தாப்பு

இன்னும்

தீப்பெட்டி வகைகள்

எத்தனை எத்தனையோ

அழகு உதிர்க்கும் அம்சங்கள்.

எல்லாம் கண்கவர் காட்சி! மனத்திற்கு மகிழ்ச்சி!

STANDARD FIRE WORKS, SIVAKASI.

பொதுமக்களுக்கு ஓர் முக்கிய அறிவிப்பு.

மார்க்கெட்டில் மலிவுரக பத்திகள் போலிவேடத்தில் கிளம்பி இருப்பதால், எங்கள் டிரேட் மார்க் நம்பர் பத்திகளை வாங்கும் அன்பர்கள் எமது பெயரையும் நம்பர்களையும் கவனித்து வாங்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

சுகந்த மணமலர் தயாரிப்புகள்

இன்பம் தரும் இனிய மணம் நிறைந்த

31, 301, 3001 ஜவ்வாது பத்திகள்

S.V. முருகேசன் & பிரதர்ஸ்

மதுரை ★ மதறாஸ் ★ பெங்களூர்சிடி.

ரிஜிஸ்டர் No 3010.

மந்தித்தோப்புமணிகட்டிச்சுவாமிகள்



கைமுறை அனுபோக

சர்வரோக சஞ்சீவித் தைலம்

ஸ்நானம் செய்து சுகமடையுங்கள்

எல்லா ஊர்களிலும் எமது ஏஜண்டுகளை தெரிந்து வாங்குங்கள்.

S.P. வடிவேல் நாடார் அன் ஸன்ஸ்,
மாந்தித்தோப்புமணிகட்டிசுவாமிகள் சித்தவைத்தியசாலை, உசிலம்பட்டி

மத்திய காரியாலயம்:- 25, சர்பந்த மூர்த்தி தெரு, மேலமாசி வீதி, மதுரை

ஸ்ரீ மாய்பிள்ளை விநாயகர்

சோடா, கிரஷ் பானங்கள்
குணம், மணம், ருசி நிறைந்தவை

New Arts

மதுரை, திண்டுக்கல் & மணப்பாரை

"ராஜன் பப்ளிசிட்டி"

— தமிழ்த்தென்றல்

1693.

தைத்திருநாளில் தனியாத இன்பம் மலர்க!

மதுரையிலே மக்களின் நன்மதிப்புக்கும் பாத்திரமாகி
அனுதினமும் அமோக ஆதரவுபெற்று வருகிறது

சிட்டி ஆக்ஷன் ஹால்

18, மேலாவணி மூல வீதி, மதுரை.
பிராஞ்ச்: 16, மேலக் கோபுரத் தெரு, மதுரை.

உறுதியான இரும்புப் பெட்டிகள், விதவிதமான தேக்கு, தோதகத்தி, கண்ணாடி, சாதா பீரோக்கள், இன்னும் இதர பான்ஸி சாமான்கள் சரசமான விலையில் வாங்கவும் விற்கவும் நம்பிக்கையான இடம்.

உரிமையாளர்:

எம். எஸ். வீரப்ப பிள்ளை.

'ராஜன்'

தமிழகம் நல்வாழ்வுபெற எமது தைத்திருநாள் வாழ்த்துக்கள்

இன்றைய நாட்டின் உடனடித் தேவை

உணவு, உடை, முதலிய சகல சாமான்களையும் குறித்த நேரத்தில் பொறுப்புடன் பல ஊர்களுக்கும் கொண்டுபோய்ச் சேர்ப்பதுதான்.

அதனையே மக்கள் சேவையாகக் கொண்டுள்ள ஸ்தாபனம்

S. பாலு லாரி சர்வீஸ்

3, தானப்ப முதலி தெரு, மதுரை.

தினசரி மதுரையிலிருந்து ஸ்ரீவில்லிபுத்தூர், ராஜபாளையம், சேத்தூர் வரை எமது சர்வீஸ் ஓடிக்கொண்டிருக்கிறது.

"ராஜன்"

— தமிழ்த்தென்றல்



ஏ. வி. பிஸ்கட்ஸ்

ஓர் சிறந்த உணவு.

எல்லா இடங்களிலும் கிடைக்கும்.

தயாரிப்பாளர்:—

அ. வள்ளிநாயகம் பிள்ளை & சன்ஸ்,

பிஸ்கட்ஸ் கம்பெனி,

தூத்துக்குடி.

— தமிழ்த்தென்றல்

ஆசிரியர்: V. V. இராமசாமி M. L. A.

"வடவேங்கடந் தென்குமரி
ஆயிடைத் தமிழ்கூறும் நல்லுலகம்"

கொடி 7	திருவள்ளுவராண்டு 1983 தைத் திங்கள் 1௨ (14—1—'53)	பூ 3

உள்ளுறை. பக்கம்

தனித்தமிழ் மாநிலம்	... தலையங்கம்	7
வடநாட்டு நேருவும் தென்னாட்டு அனுமாரும்	,,	13
ஆந்திர மாநிலத்தின் பொருளாதார நிலை ...	,,	14
நல்ல அடி!	.... கி. ஆ. பெ. விசுவநாதம்	18
குட்டிக்கரணம்	.... பேராசிரியர் ரா. த. இராசேசுவரி அம்மையார்	21
அழகியின் வேலை	... பி. எஸ். மணியன்	26
சடார் யோசனை	... செல்வராஜ்	29
தைத்திருநாள்	... ச. ஆறுமுகநாதன்	30
தமிழின் ஜதி	.... ரசிகாமணி டி. கே. சி.	32
மோகம் தீர்ந்தது	... ப. ராகவேந்திர	36
காதல் பறந்தது!	.... சேகர்	40
ரசிக சீமானே!	... தேவி	44
கரன்சிச் சுரங்கம்!	... ராஜன்	46
கர்மவீரன் கரிபால்டியின் காதலி	.... ச. மு. பிள்ளை	56
பயனற்ற அழகா?	.... கருப்பு	62
புது வாழ்வு	.... விருதை ந. இராமசாமி	66
வழி பிறந்தது	.... மக்களன்பன்	72
மைத்துனி	... (தொடர் நாவல்) "ஜீவா"	76

கதைகளில் வரும் பெயர்கள் கற்பனையே! கவிதை கட்டுரையாளரின் கருத்துக்களுக்கு ஆசிரியர் பொறுப்பாளியல்லர். தமிழ்த்தென்றலில் வெளிவரும் கட்டுரை, கதை முதலியன ஆசிரியர்க்கே உரியவை. ஆசிரியர் அனுமதியின்றி எவரும் அவைகளைத் திரும்ப வெளியிடும் உரிமையுடையவராகார். ஆசிரியர்.

எதுவும் எழுதலாம்! பேசலாம்!!

ஆனல்?

செயலில் செய்து காட்டுவோர் சிறிதளவே.

இமிடேசனை வைரம் என்றுப்புகழலாம்—அதில் ஏமாறு வோர் வெகு சொற்பம்.

உண்மை அறிய இன்றே விஜயம் செய்யுங்கள்.

"ஸ்ரீ முனியாண்டி விலாஸ் மில்டேரி ஹோட்டல்"

(நாகலிங்கம் ஸ்டோர்ஸ் பக்கம்)

தெற்கு காவல்கூடத்தெரு, மதுரை.

மிகச்சிறந்த மில்டேரி ஹோட்டல்?

"ராஜம்"

உங்கள் தோற்றத்திற்கு தகுந்த ஆடைகள்

அவை மில் துணிகளாயினும் சரி,

கைத்தறி துணிகள், சேலைகளாயினும் சரி

நிரந்தரமான ஸ்தாபனம்

"நாகலிங்கம் ஸ்டோர்ஸ்"

(ரிஜிஸ்டர்டு)

தெற்கு காவல்கூடத்தெரு, மதுரை.

போன்:—447.

—"ராஜம்."

— தமிழ்த்தென்றல்

தனித் தமிழ் மாநிலம்

"வடவேங்கடந் தென்குமரி
ஆயிடைத் தமிழ்கூறும் நல் உலகம்"

இவ்விதழ் மலரும் நாள் தைப்பொங்கல் பெருநாள்.

தமிழ் மக்கள் மகிழ்ச்சியோடு இயற்கையை வழிபட்டு நன்றி செலுத்தும் நன்னாள்.

கதிரவன்காய, வியர்வை சொட்ட, கருமேகம் பொழிய, உடலும்உடையும் நனைய, ஏர்ப்பிடித்துச் சேற்றில் மிதித்து அரும்பாடுபட்டு உழைத்ததன் பலன்களை இல்லத்துக்குக் கொண்டுவந்து உண்டு, உடுத்தி மனைவி மக்கள் உற்றார் உறவினர் களிக்க இன்புற்றிருக்கும் ஈடில்லாநாள்.

ஆனால் இந்த ஆண்டிலே இயற்கைத் தேவி இரக்கங் கொள்ளவில்லை. ஆதலின் மழையும் பொய்த்து விட்டது.

**விண்இன்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து
உள் நின்று உடற்றும்பசி**

என்று தமிழ் மறை கூறியவாறு பசிப்பிணி மிகுந்து நின்று மக்களை வருத்திக் கொண்டிருக்கிறது. ஒருமழை பெய்தால்போதும், நல்ல அறுவடை கிடைக்கும் என்று எதிர்பார்த்திருந்ததெல்லாம் காய்ந்து சாவியாய்ப் போய்விட்டது. மக்கள் மனத்தின் கண் அரும்பிய இன்பம் கருகிவிட்டது. என்ன செய்வது என்று தெரியாமலே மக்கள் அலைந்து மடிகிறார்கள்.

அரசாங்கம், உடனடியாக நிவாரண வேலைகள் ஆரம்பித்துக் கூலி கிடைக்கும்படிசெய்ய வேண்டும். வடநாட்டில்

— தமிழ்த்தென்றல்

கிடைக்கும் சோளம், கம்பு முதலியவற்றை ஒரு விநாடியும் காலம் தாழ்த்தாது கொண்டு வந்து பசியைப்போக்க வேண்டும். ஆபத்தையுணர்ந்து தக்கதை உடனே செய்ய அரசாங்கம் முன் வராவிட்டால், ஒழிந்துவிடுவதேமேல். மனிதத்தன்மை படைத்தவர்களால் இயங்குகின்ற அரசாங்கமாயிருக்குமாகில் இது வெளி வருவதற்குள் நிவாரண வேலைகள் ஆரம்பித்திருக்க வேண்டுமென்று எச்சரித்துக் கொள்கிறோம்.

இந்தச் சூழ்நிலையில் மக்கள் வாழ்வு தைப்பொங்கலில் எப்படி இன்பமாக இருக்க முடியும் என்பதை நினைக்க நெஞ்சம் பதறுகிறது.

ஆயினும் ஒரு நற்செய்தியைக் கேட்டுத் தமிழர்கள் சிறிதளவாவது ஆறுதல் அடையமாட்டார்களா என்று எண்ணுகிறோம். அதாவது ஆந்திர மாகாணம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு விட்டது என்பதைக் குறிக்கிறோம். சென்ற ஐப்பசி இதழில் மொழிவாரி மாகாணப் பிரிவினையைப்பற்றி எழுதியதில்,

> "எல்லாத் தலைவலியும் சென்னை நகரத்தைப் பொறுத்துத்தான் — ஆகவே சென்னை நகரம் தமிழருடையது; புதிய ஆந்திர நாட்டுக்குத் தனியாக ஒரு தலைநகரை உண்டாக்கிக் கொள்ள வேண்டியது — அதற்கு ஏற்படும் செலவினங்களைப் பெரும்பாலும் இல்லி அரசாங்கம் கொடுத்து விடலாம் என்று கூறி விட்டால் பிரச்சினை எளிதில் முடியும்"

என்று குறிப்பிட்டிருந்தோம்.

மேலும் கார்த்திகை இதழில்,

> "இந்திய அரசாங்கத்தார் வீண் காலந்தாழ்த்தாமல் உடனடியாகப் பிரிந்து போகப்பிரியப்படும் ஆந்திரருக்கு மாகாணத்தைக் கொடுத்து விடுவதே அறிவுடைமையாகும்.........பொருளில்லாத சாக்குப் போக்குச் சொல்லிக்கொண்டிருந்தால் அமைதியின்மையும் குழப்பமுந்தான் வளரும்.........வரலாற்று எல்லைக்குட்பட்ட தமிழ் நாடு தனியாகப் பிரிக்கப்பட வேண்டுமென்று தமிழர்களும் கட்சிப் பாகுபாடின்றிக் கிளர்ச்சி செய்தால் விரைவில்
>
> — தமிழ்த்தென்றல்

> பலன் கிட்டுமென்று நம்புகிறோம். ஆதலால் தமிழ் நாட்டவர்கள் விழித்தெழுவார்களா ?"

என்றும் கேட்டிருந்தோம்.

ஆந்திரப் பிரிவினைக்காகத் தன் உயிரையும் பொட்டி ஸ்ரீ ராமுலு தியாகஞ் செய்தார். ஆந்திராவில் குழப்பமும் கொள்ளையும் நடந்தது.

உடனே சென்னையில்லாமல் மறுப்புக்கிடமில்லாத தெலுங்குப்பிரதேசத்தைக்கொண்ட ஆந்திரமாகாணத்தை நிறுவப்போவதாக நேரு அரசாங்கம் கட்டியங் கூறி விட்டது. அதோடு பிரிவினையால் ஏற்படும் நிதி, நிர்வாக அமைப்புப் போன்ற பிரச்சினைகளைப் பற்றியும் தலைநகர் அமைக்கும் பிரச்சினையைப் பற்றியும் ஆய்ந்து தெரிந்து தமக்குத் தெரிவிக்கும்படியும் அரசாங்கம் நீதிபதி K. N. வாஞ்சு என்பவரை நியமித்து அவரும் வேலையைச் சென்னையில் தொடங்கி விட்டார்.

அவர் கொண்ட பணி வெற்றி பெற வாழ்த்துகிறோம்.

இந்நிலையில் தூங்கிக்கொண்டிருந்த தமிழர்களும் விழித்து விட்டார்கள். கருத்து மாறுபாட்டைக் கருதாமலும், கட்சி பேதத்தை நினைக்காமலும் தமிழ், கன்னட, மலையாள மாவட்டங்களைச் சார்ந்த தலைவர்கள் சென்னையில் கூடி ஒரு மனதாகச் சில தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கிறார்கள்.

அதாவது "சென்னை நகரைத் தனி மாகாணமாக்கக் கூடாது. அது தமிழ்நாட்டையே சேர்ந்தது. தற்காலிகமாகக் கூட சென்னை நகரில் ஆந்திரரின் தலைநகருக்கு இடமளிக்கக் கூடாது. ஆந்திர தலைநகர் ஆந்திர நாட்டிலே அமைய வேண்டும். இரு நாடுகளின் எல்லையை நிர்ணயிக்க ஒரு கமிசன் ஏற்படுத்தவேண்டும்" என்று முடிவுசெய்திருக்கிறார்கள்.

— தமிழ்த்தென்றல்

கூடிய தலைவர்களைப் போற்றுகிறோம். வாழ்த்துகிறோம். இக் காரியத்தில் ஒன்றுகூடிய பெருமக்கள், தீர்மானத்தின் எண்ணம் நிறைவேறுவதற்கும் ஒத்துழைத்துவர வேண்டுமென்று ஆசைப்படுகிறோம்.

சென்னை நகரம் தமிழருடையதுதான். எக்காரணத்தைக் கொண்டும் அதில் பங்குகேட்க ஆந்திரருக்கு உரிமை கிடையாது என்று உறுதியாக, வெளிப்படையாக இராஜாஜி வலியுறுத்திப் பேசியதினாற்றான் சென்னை ஆந்திரரிடமிருந்து தப்பியது. இராஜாஜியிடத்தில் வேறு காங்கிரசுக்காரர் யாரிருந்திருந்தாலும் சென்னையைப் பறிகொடுத்திருப்பார்களென்றே அஞ்சுகிறோம்.

ஆயினும் ஆபத்து இன்னம் நீங்கவில்லை. நேரு பேச்சில் சென்னை தமிழருடைய நகரம் என்று திட்டவட்டமாக இன்னம் வரவில்லை.

இந்தக் குறைபாட்டை வைத்துக்கொண்டு எப்படியும் தனி மாகாணமாக்கி விடலாமென்று ஆந்திரர்களும், நகரத்தில் சொத்தும் தொழிலும் வைத்திருக்கின்ற சில கும்பல்களும் கனவு கொண்டிருக்கிறார்கள்.

இந்த வேளையில் "சில அலுவலகங்களுக்கு இடம் வேண்டுமானால், கொடுக்கும்விஷயத்தை ஆலோசிக்கலாம்" என்று நமது நிதி அமைச்சர் சுப்பிரமணியம் பேசியது சஞ்சலத்தையுண்டாக்குகிறது.

தில்லி அரசாங்கத்தின் ஆட்சிக்குட்பட்ட, இரயில், தந்தி தபால், கலால், துறைமுகம், வருமான வரி, இரகசிய போலீசு முதலிய துறைகளின் அலுவலகங்கள் சென்னையில் இருக்கின்றன. "அதேபோன்று, ஆந்திராவுக்கு உடனே தலைநகரை நிர்மாணிக்கமுடியாதபடியால், ஒரு ஊரை முதலில் குறிப்பிட்டுவிட வேண்டியது. அதில்

தலைநகரை எழுப்ப எல்லாத்திட்டத்தையும் ஒப்புக்கொள்ள வேண்டியது; இத்தனை ஆண்டுக்குள் முடித்துவிடவேண்டும் என்றும் நிர்ணயஞ் செய்துகொள்ள வேண்டியது; அது பரியந்தம், ஒரே கவர்னர், ஒரே உயர்நீதி மன்றம், மற்ற அலுவல் இடங்கள் எல்லாமும் சென்னையிலேயே தற்காலிகமாக இருக்கவேண்டியது" என்று ஒரு சமரச உடன்பாட்டுக்கு இரகசியமாக ஏற்பாடாகிறதாம்.

இந்தத் திட்டத்துக்குத் தமிழன் ஒப்புக்கொண்டால் தற்கொலைதான். நேரு அரசாங்கம் அபிப்பிராயப்படுகிறதே, நாட்டுத் துணைத் தலைவர் டாக்டர் ராதாகிருட்டிணன் விரும்புகிறாரே, எப்படியாவது ஆந்திரப் பிரச்சினை ஒழிய வேண்டுமே, என்று விரும்பிக் காங்கிரசுக்காரர் இணங்குமுற்படுவார்களானால் தமிழகத்துக்குத் துரோகஞ் செய்தவர்களாவார்கள் என்று எச்சரிக்கிறோம்.

இவ்வகையில் ஏமாந்துவிட்டால் பின்னால் மீளாக்கேடு விளையும். ஆகவே ஆந்திரா போக எஞ்சிய எல்லைக்குள் இருக்கும் கேரளத்தையும், கன்னடத்தையும் ஒதுக்கிவிட்டு இப்பொழுதே தனித்தமிழ் மாநிலம் ஏற்படுத்தவேண்டுமென்று தலைவர்கள் கூடி வலியுறுத்த வேண்டும்.

இல்லையேல் நிதியும் பஞ்சம், உணவும் பஞ்சம் என்ற நிலைமைக்கு வரவேண்டிய எஞ்சிய சென்னை மாகாணம் தன் வருவாய் எல்லாவற்றையும் மலையாள, கன்னடப்பகுதிகளுக்குச் செலவிட்டு ஏங்கி நிற்க வேண்டியதுதான்.

அந்தப் பகுதிகளில் வரும் வருவாயைவிட ஆண்டொன்றுக்கு ஒரு கோடி ரூபாய் அதிகமாகச் செலவு ஏற்படும். உணவுத்துறையில் 3 லட்சம் டன் அரிசி தமிழ் நாட்டின் தலையில் சுமத்தப்படும்.

அப்பகுதிகளைத் தற்சமயம் ஐக்கிய கேரளம், ஐக்கிய கன்னடம் என்று சேர்க்கமுடியாவிட்டால், தில்லி

அரசாங்கம் குடகு மாநிலத்துடன் தன் நேரடி நிர்வாகத்துக்குள் எடுத்துக்கொள்ளும்படி செய்ய வேண்டும்.

அதுதான் நேர்மையான அரச்செயலாகும்.

நீதிபதி வாஞ்சு தன் ஆய்வுரையை முடிக்குமுன் தமிழர்கள் ஒன்றுகூடித் தனித்தமிழ் மாநிலம் வேண்டுமென்று முடிவு செய்து விடவேண்டும்.

கேரளப் பகுதியையும் கன்னடத்தையும் தில்லி அரசு தனது நேரடி நிர்வாகத்திற்கு எடுத்துக்கொண்டு, நாஞ்சில் நாட்டுப் பகுதியைத் தமிழகத்துடன் சேர்த்துவிடுவதுதான் தூய தனித்தமிழ்மாநிலம் ஏற்படுவதற்கு உரியவழி. இந்தப் பிரிவினையுடன் ஆட்சிமொழியாக தமிழ் இயங்கும்படியான நிலைவந்து தீரவேண்டும். இதுதான் தமிழரின் குறிக்கோள்.

அவ்வாறான தனித்தமிழ் மாநிலத்தில்தான் தமிழர் தம்மொழி, கலை, நாகரிகம், வாழ்வு, யாவும் சிறந்து செழிப்படையும்.

அதற்கான முயற்சிகள் நடைபெறுவதை வரவேற்கிறோம். தமிழகம் மலர்க. தமிழ்மக்கள் வாழ்க.

தமிழ் வெல்க.

— தமிழ்த்தென்றல்

வடநாட்டு நேருவும் தென்னாட்டு அனுமாரும்!

தென்னாட்டாரை, வடநாட்டினர் இழிவாகக் கருதுகிறார்கள் என்று கூறினால் நம்மவர்கள் ஏற்றுக்கொள்வதில்லை.

நமது இந்தியப் பேரவையின் ஒப்பற்ற முதலமைச்சர் நேரு சென்னைக்கு அண்மையில் வந்திருந்தார். ஒரு நாள் ராஜாஜி மாளிகையில் ஒரு அலுவலிருந்தது. அதில் நேரு கலந்து கொள்வதற்காக வந்தவர், தனது சொற்பொழிவை ஆரம்பிக்கும்போது சுவரில் தொங்கவிடப்பட்டிருந்த படங்களைப் பார்த்துவிட்டார்.

அவைகள் பழைய கவர்னர்களின் படங்கள். உடனே நேருவுக்கு ஆத்திரம் பொங்கிவிட்டது. தன்னை அறியாமலேயே ஒரு உணர்ச்சி வந்துவிட்டதென்று புலம்பினார்.

இதே வரிசையில், இதே கட்டடத்தில் தன்னுடைய படமும், ராஜாஜியின் படமும் இருப்பது வியப்பும், தணிக்க முடியாத கனலும் உள்ளத்திலே உண்டாக்கியதாம்!

நாற்றைம்பது ஆண்டுகள் ஆண்டுவிட்டு இறுதியாக இந்தியர்களையும் தலைவர்களையும் வெகுவாக கௌரவப்படுத்தி மகிழ்ச்சியுடனும் அன்புடனும் அமைதியாக நேருவின் கையில் இந்தியாவை ஒப்புக் கொடுத்துவிட்டு வெளியே போனார்கள், ஆங்கிலேயர்கள். அவர்கள் படம் ஒரு பழைய மண்டபத்தில் மௌனமாக இருப்பது நேருவின் உள்ளத்தை பதைபதைக்கச் செய்கிறது.

ராமாயணம் என்பது ராமனின் கதை. ஆதாரமுள்ள வரலாறு என்று யாராலும் அறுதியிட்டுச் சொல்லமுடியவில்லை. கதையின் போக்கும், அடிப்படைக் கருத்துக்களும் எழுதியவர்களின் மனப்பான்மையையும் காலத்தையும் ஒட்டியதாகவே தென்படுகிறது.

எனினும் ராமன் கடவுளின் (அவதாரம்) மானிடப் பிறப்பு என்றுதான் எல்லோரும் எழுதியிருக்கிறார்கள். அதை வைத்துத்தான் ராமர் கோவில்களும், ஆராதனைகளும், வணங்குதலும் நாடெங்கும் இருக்கின்றன.

— தமிழ்த்தென்றல்

ராமர் படம் அநேகமாக எல்லா இந்துக்கள் வீட்டிலுமிருக்கும். அந்தப் படத்தைப் பார்த்தால் ராமனின் காலைப்பிடித்துத் தாங்கிக்கொண்டிருப்பதாக அனுமாரின் சித்திரம் இருக்கும். இந்த அனுமார் யார்?

பண்டிதர் நேருவைக் கேட்டுத் தெரிந்து கொள்வோம்.

நேரு தான் எழுதிய ஒரு தொகுப்பில் (மகளுக்கு எழுதிய கடிதம்) தென்னாட்டில் அந்தக்காலத்தில் வசித்தமக்களை ராமாயணத்தில் குரங்குகள் என்று வரையப்பட்டிருக்கின்றதென்று கூறியிருக்கிறார்.

ராமனோ வடநாட்டு அரசன். அவனைத்தாங்கி (கதைப்படி) மானத்தைக் காப்பாற்றிக்கொடுத்த தென்னாட்டு வீரனோ குரங்கு!

இந்தப் படத்தைக் கண்டவுடனே நமக்கு, அடடா, பக்தி மேலோங்குகிறது. ஆனந்தக் கண்ணீர் சொரிகிறது. கைகளிரண்டும் கன்னத்தில் அறைகின்றன, 'ராம ராம' வென்று.

ஆனால் ஒரு காலத்தில் நாத்திகக் கொள்கை கொண்டவராகக் கருதப்பட்ட நேருவுக்கோ, வெள்ளையன் படத்தைப்பார்த்த மாத்திரத்தில் உண்டாகிற உணர்ச்சியல்லவோ, வீரம்!

ஆனால் நாம் பாதந்தாங்கிகளாகவே பஜகோவிந்தம் பாடிக் கொண்டேயிருக்கிறோம்.

ஆந்திர மாநிலத்தின் பொருளாதார நிலை

ஆந்திர மாநிலம் என்பதே எங்கும் பேச்சாக இருக்கிறது.

நீதிபதி வாஞ்சூம் விசாரணைக்கு சென்னை வந்துள்ளார்.

தமிழர் சிந்தனையும் கிளர்ச்சியுற்றிருக்கின்றது.

இந்த நிலையில் வரப்போகும் ஆந்திர மாநிலத்தின் பொருளாதார நிலை எவ்வாறு அமையும் என்பதைப் பற்றி முதலில் சிந்தனை செய்ய வேண்டும். பிறகு எஞ்சிய மாநிலத்தின் நிலையினைக் காணல் எளிது.

— தமிழ்த்தென்றல்

1949-ல் பிரிவினை பற்றி ஆய்ந்து கொண்டு இருந்த போது எடுத்த கணக்குப்படிஆந்திர மாநிலத்தின் வருமானம் ரூ. 21 கோடியாகவும், செலவுரூ. 25½கோடியாகவும் கணக்கிடப்பட்டது. எனவே துண்டு விழுவது ஆண்டொன்றுக்கு ரூ 4½ கோடியாகும்.

இன்றையநிலைமை இதை விட மோசமாயிருக்குமே தவிர, திருத்தமடைந்திருக்கும் என்று நினைப்பதற்கில்லை, ஏனென்றால் சென்னை மாநில அரசாங்க நிதி நிலைமை 1949-லிருந்ததை விட இன்று செழிப்பானதாயில்லை. வரவு செலவைச் சரிக்கட்டுவதே பெரும் பாடாகி, அதிக வரி விதிக்க வேண்டிய நிலையில் அரசாங்கம் இருக்கிறது. அதோடு ஐந்தாண்டுத் திட்டத்தின் சார்பில் புதுச் செலவினங்களுக்கு வழி காண வேண்டிய பெருங் கவலையும் இருக்கிறது.

இந்த 4½ அல்லது 5 கோடி ரூபாய் ஆண்டாண்டு வரும் பாக்கியைச் சரிக்கட்ட வேண்டுமானால் ஆந்திரர்கள் புது வரிகளை விதித்துத் தானாக வேண்டும்.

மது விலக்கைக் கைவிட்டு, மீண்டும் கலால் வருமானத்தை மேற்கொள்ளத் தயங்காமலிருப்பார்களானால், துண்டு விழுக்காடு இல்லாது வரவும் செலவும் சமன் செய்து கொண்டு போகலாம். அதற்குப்புது ஆந்திர மாநிலத்தார் தயாராக இல்லாது போனால், அதிக நிலவரி என்றும், நீர் வரி என்றும், விவசாய வருமான வரி என்றும், பஸ் பிரயாண வரிஎன்றும் பலவரிகள் விதித்துத்தான் ஆக வேண்டும். அவற்றை யெல்லாம் விதித்தாற்கூட, 2 அல்லது 3 கோடி ரூபாய்க்கு ஆண்டு தோறும் நடு இட அரசாங்கம் மானிய வகையில் வழி செய்தாலல்லது, தன்னக்கட்டிக் கொண்டு போக முடியாது.

இது தவிர, புது மாநிலத்துக்குப் புதுத் தலைநகர் வேண்டும்.

இந்தப் புதுத் தலைநகரத்துக்குக் குறைந்தது ரூ. 10 கோடியாவது வேண்டுமென்று நார் கமிட்டியார் கணக்கிட்டார்கள். மேற்செலவுக்கு ஒரு ஐந்து கோடி வேண்டும். இவை நிரந்தரமான, ஆதாயம் வராத செலவினங்கள். இந்த 15 கோடி ரூபாய் நடுஇட அரசாங்கம் மானியமாகக் கொடுக்க வேண்டும்.

இப்படிக் கொடுக்க முன் வராவிட்டால், ஸ்ரீ பாக் உடன்படிக்கையில் எழுதி வைத்திருக்கிறபடி அபிவிருத்தி வரி போன்றவை விதித்து 10அல்லது 15 கோடி ரூபாய் திரள்வது வரை தற்காலிகமாக சென்னையையே தலைநகராக ஆந்திரரும் வைத்துக் கொள்வது என்ற வழக்கு பிறக்கும். அது

— தமிழ்த்தென்றல்

தமிழர், மலையாளர், கன்னடர் போன்ற எஞ்சிய மக்கள் தொகுதியினருக்கு இசைவுடையதாக இருக்குமா? ஒருக்காலும் இருக்காது.

ஆனால் நடுஇட அரசாங்கத்தார் நியாயமான தொகையை மானிய மாக வழங்குவதற்குக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

அவர்கள் தாம் தனி மாநிலம் வழங்குவதாக வாக்களித்தவர்கள். வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பவர்கள். எனவே அது உருவாகத் திரண்டு வருவதைக்காணும் பொறுப்பும் நடுஇட அரசாங்கத்தாரையே சாரும்.

அதிலும், ஆந்திரர்களுக்கு இந்த மானியத்தைக் கேட்பதற்கும் ஒரு நியாயம் இருக்கிறது.

சென்னை மாநிலத்தில் புகையிலை வரி என்று விதித்து ஏறக்குறைய ஆண்டொன்றுக்கு ரூ. 21 கோடி வரை நடுஇட அரசாங்கம் வசூலித்துக் கொள்கிறார்கள். இதற்கு ஈடாக அவர்கள் சென்னை அரசாங்கத்துக்குக் கொடுப்பது 54 லட்சம் ரூபாய்தான். இந்த ரூ. 21 கோடி வருமானத்தில் ரூ. 19 கோடி ஆந்திர நிலப்பரப்பில் பயிராகும் புகையிலை மூலம்தான் கிடைக்கிறது. அப்படியிருக்க ஆந்திர மாநிலத்துக்குத் தகுந்த மானியம் கொடுப்பது இந்திய அரசாங்கத்தாரின் பொறுப்பும், முறையும் ஆகும்.

இதை ஆந்திரர்கள் தெரிந்து கொண்டு இன்று ஏழையாயிருக்கும் சென்னை அரசாங்கத்தை வீணே பழிகூறாமல், நடுஇட அரசாங்கத்தைக் கேட்டால் நியாயம் பிறக்கும்.

இவை தவிர, ஐந்தாண்டுத் திட்டத்தின் அடிப்படையில், மொத்தம் சென்னை மாநிலம் ரூ. 141 கோடி செலவு செய்ய இருக்கிறது.

ஆந்திரா பிரிவதன் மூலம், அவர்கள் திட்டத்தின் சார்பில் அபிவிருத்திக்காக எவ்வளவு செலவு செய்யவேண்டியது வரும் என்பது இன்னும் தெளிவாகப் பிரித்துக் காணப்படவில்லை.

நீர்ப்பாசனம், மின்சாரம், போன்ற விளக்கமான திட்டங்களுக்கு மட்டுமே 32 கோடி ரூபாய் ஆந்திர மாநிலத்தின் அபிவிருத்திக்கு குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதில் திட்டத்தில் சென்றுவிட்ட இரண்டாண்டுகளுக்குச் செலவும் நடந்திருக்கிறது.

இது போக எஞ்சியதுக்கும், இன்னும் தெளிவாகப் பிரித்துக்காணாத ஏனைய அபிவிருத்திச் செலவினங்களுக்கும், மேல் வரவிருக்கும் கோதாவரி கிருஷ்ணா ஆற்றுப்பெருக்குத் திட்டங்களுக்கும் வேண்டும் செலவையெல்லாம் நடுஇட அரசாங்க உதவியால், வேண்டும் அளவு பெற்று ஆந்திர மாநிலம் வாழ்வு பெறுவதாகுக.

வே. வ. [illegible]

பருத்தி நூல்களுக்குப் பிரதான ஸ்தாபனம்

மதுரை மில்ஸ் கம்பெனி லிமிட்.

மதுரை-தூத்துக்குடி-அம்பாசமுத்திரம்

5,00,000 நூற்கும் கதிர்கள்	நெம்பர் 80 வரை நூல்கள்

நாங்கள் சப்ளை செய்வது

கைத்தறி, இயந்திரத் தறி, பின்னல் தறிகளுக்கு வேண்டிய காரிக்கள் நூல்கள்,
இயந்திர நெசவுக்கேற்ற வார்ப்பு நூல்கள்,
கலந்த வெப்பிங், கான்வாஸ் முதலியவைகளுக்கேற்ற மடக்கு இரட்டை நூல்கள்
மற்றும் பின்னல் இயந்திர நெசவுக்கேற்ற மிருதுவான சன்ன நூல்கள்.

எங்கள் எகிப்திய பருத்தி நூல்கள் இறக்குமதியாகும் நூல்களைப்போல் எல்லா வகையிலும் கீர்த்தி பெற்றவை.

நாங்கள் நூற்பதைத் தவிர நெய்வதில்லை.

மானேஜர்கள்:

ஏ. & எப். ஹார்வி லிமிடெட்,

மதுரை.

போன்: 250 (4 லைன்) தந்தி: "ஹார்வி"

— தமிழ்த்தென்றல்

நல்ல அடி!

[கி. ஆ. பெ. விசுவநாதம்]

கவிஞர் பாரதியார் பல்வேறு துறைகளுக்கு பலவித அடிகளைக் கொடுத்திருக்கிறார். சமூகத் துறைக்கு அவர் கொடுத்த அடிகள் சில. அவற்றுள் ஒன்று கல்லடியினும் சிறந்த சொல்லடியாகக் காட்சியளிக்கிறது.

அது "கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கினால்
கைகொட்டி நகையாரோ!" என்பது.

சித்திரக்கலையைப் பாரதி பெரிதும் போற்றுகிறார். மக்கள் அதனை விரும்பிக் கண்டுகளிக்க வேண்டும் எனவும் ஆசைப்படுகிறார். அது உயர்ந்த விலைமதிப்புடையது போலும் கருதுகிறார். ஆனால், அதற்காகக் கொடுக்கப்படும் விலை கண்ணாக இருத்தல் கூடாது என எச்சரிக்கை செய்கிறார். கண்ணை இழந்து விட்டால் சித்திரத்தைக் கண்டுகளிப்பது எப்படி? என்பதே அவரது கேள்வி.

கண்ணை இழந்த ஒருவன் சித்திரங்களை வாங்கி வைத்துத் தடவிப் பார்த்துக்கொண்டிருப்பது நகைக்கக்கூடிய நிகழ்ச்சியல்ல; அது மிகவும் இரங்கி வருந்தக்கூடிய ஒரு நிகழ்ச்சியாக இருக்கும். பின் வருந்தக்கூடிய நிகழ்ச்சியாதெனில், கண் இருக்கிற ஒருவன் கண்ணையே விலையாகக் கொடுத்து சித்திரத்தை வாங்கும் நிகழ்ச்சியே என்பது கவிஞரின் கருத்து.

— தமிழ்த்தென்றல்

"கண்ணை இழந்து சித்திரம் வாங்குவதா?" என்பது தமிழ்நாட்டுப் பழமொழிகளில் ஒன்று. அதை அப்படியே கூறக் கவிஞரின் உள்ளம் ஒப்பவில்லை. ஒரு கண்ணை விற்றுச் சித்திரம் வாங்கும் செயல் ஒருக்கால் ஒப்பக்கூடியதானாலும் ஆகலாம் எனக் கருதியே, கண் இரண்டும் விற்றுச் சித்திரம் வாங்குவதே நகைக்கக்கூடியது என முடிவுகட்டிக் கூறி விட்டார்.

ஒரு உயர்ந்த சித்திரத்தைப் பார்த்து, மகிழ்ந்து அதற்குத் தன் கண்களையே விலையாகக் கொடுத்து மகிழும் புரட்சி, ஒரு கலைஞரின் உள்ளத்தில் தோன்றினாலும் தோன்றலாம் என எண்ணியே, முதலில் கண்களை விற்றுப் பிறகு சித்திரம் வாங்கும் கொடுமைதான் நகைக்கக் கூடியதென இப்பாடலிற் குறிப்பிடுகிறார் போலும்.

கண்களை விற்றுச் சித்திரம் வாங்கும் செயல், எங்கோ? என்றோ? நடந்ததாகவோ, நடக்கக்கூடியதாகவோ தெரியவில்லை. பின் ஏன் கவிஞர் இவ்வாறு கூறியிருக்கிறார்? என எண்ணிப்பார்க்கும்பொழுது இதனை எதற்கோ உவமையாகக் கூறியிருக்க வேண்டும் என்றே நமக்குத் தோன்றுகிறது.

கவிஞர் பாரதியார் தமிழ் நாட்டை ஒரு 'கண்' ஆகவும் தாய் மொழியை ஒரு 'கண்' ஆகவும் கருதி வாழ்ந்தவர். இவ்வுண்மையை அவரது "செந்தமிழ் நாடு", "தமிழ்த் திருநாடு" என்ற சொற்களே மெய்ப்பிக்கும். இச்சொற்களிற்கூட மொழியும் நாடும், விழியும் இமையும் போல ஒன்றையொன்று தழுவிக் கொண்டிருப்பது பெரிதும் வியக்கக் கூடியது. "எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்" என்பது ஔவையின் கருத்து. "நாடும் மொழியும் நல்ல கண்கள்" என்பது பாரதியின் கருத்து.

சென்னை முதன் மந்திரி பதவி, காங்கிரஸ் கமிட்டி தலைமைப்பதவி, சட்டசபை உறுப்பினர் பதவி, அரசாங்க அகராதிக் கமிட்டிப் பதவி, பல்கலைக்கழக பேராசிரியர் பதவி, தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைமைப் பதவி, கலைக் கழகச் செயலாளர் பதவி, இயக்கத் தலைமைப் பதவி முதலிய பதவிகளையோ, டாக்டர் பட்டத்தையோ, பாடபுத்தக அங்கீகரிப்புச் சலுகையையோ, வியாபாரச் சலுகையையோ, பணமுடிப்பையோ, பரிசுத் தொகையையோ வேறு எதையோ மக்கள் விரும்பிப் பெற்று மகிழ்வதானால் மகிழட்டும். ஆனால், அதற்காகக் கொடுக்கப்படும் விலை தமிழையும், தமிழ்நாட்டையும் காட்டிக்கொடுப்பதாக இருக்கக் கூடாது என்பதே கவிஞரின் கருத்து.

தமிழ் மொழியைப் பிற மொழியாளர்க்கும், தமிழ் நாட்டைப் பிற நாட்டார்க்கும் அடிமைப் படுத்துவதைக் கண்களை விலை கூறி விற்பதற்கும், அதன் மூலம் பட்டம், பதவி, பணம், சலுகை முதலியவைகளைப் பெறுவதை சித்திரம் வாங்கும் செயலுக்கும் கவிஞர் ஒப்பிட்டுக் காட்டியிருப்பது உய்த்துணரத் தக்கது.

கண்கள் இரண்டையும் விற்று சித்திரங்களை வாங்கும் மனிதனும், நாட்டை, மொழியை விற்றுப்பட்டம் பதவி பெறும் மனிதனும் ஒரே இனம் என்றும், அவர்களது அறிவு ஒரே தன்மையுடையது என்றும், அவர்களது செயல் எப்போதும் நகைப்பிற்குரியது என்றும் கவிஞர் தமது பாடலில் நன்கு விளக்கிக் கூறியுள்ளார்.

கண்களை இழந்தவன், தான் பெற்ற சித்திரங்களால் எவ்வாறு பயனடைய மாட்டானோ, அவ்வாறே நாட்டையும் மொழியும் இழந்தவனும் தான் பெற்ற பட்டம் பதவிகளால் பயனடைய மாட்டான் என்பது கவிஞர் கூறுமற்கூறியுள்ள ஒரு உயர்ந்த கருத்து.

"புன்முறுவல் காட்டி நகைத்தால் தான் என்ன? உதட்டைப் பிதுக்கி, பழித்து நகைத்தால் தான் எனக்கென்ன? நான்தான் கண்களை இழந்து விட்டேனே! அது

— தமிழ்த்தென்றல்

எனக்குத் தெரியவா போகிறது?" என்று எவனாவது ஒருவன் கேட்டுவிடுவானும். அதற்காக கவிஞர், "தம்பி! உனக்குக் கண் இல்லாவிட்டாலும் காது இருக்கிறது. அதன் வழியாக வாவது ஓசையைப் புகுத்தி தாம் பழிப்பதை உனக்கு உணர்த்தி விடுவார்கள்" என்ற கருத்தை அமைத்தே "கைகொட்டி நகையாரோ!" என்று கூறியிருக்கின்றார். இன்றேல் "கண்டவர் நகையாரோ!" என்று கூறியிருக்கவும் கூடும்.

கண்களைப் பறி கொடுத்துச் சித்திரம் வாங்கும் தவறும், நாட்டை மொழியைப் பறி கொடுத்து பட்டம் பதவி பெறும் தவறும் மன்னிக்க முடியாத தவறுகளாகும். இத்தகைய மலை போன்ற தவறுகளைச் செய்யும் மக்களை அடித்து, உதைத்துத் திருத்த எண்ணாமல், நகைத்துப் பழித்துத் திருத்த எண்ணிய கவிஞர் கூறியுள்ள இச்சொற்கள், அவரது பண்பட்ட உள்ளத்தைப் பெரிதும் உயர்த்திக் காட்டுகின்றன.

தமிழ் நாட்டில் வாழ்ந்து கொண்டே, தமிழ் மொழியை பேசிக் கொண்டே, பெற்ற நாட்டையும், வளர்த்த மொழியையும் பிற மக்களுக்கு விலை கூறி அதன் மூலம் வாழ வழி வகுத்து, வழி நடை நடக்க எண்ணும் மக்களுக்கு கவிஞன் பாரதியின் சொல்லடி ஒரு கல்லடியாக அமைந்திருப்பது, எண்ணி, எண்ணி மகிழக் கூடிய ஒன்றாகும்.

உயர்ந்த அறிஞர்களால் நகைக்கத் தகுந்த இழிந்த மக்கள் இன்றைய தமிழகத்தில் இருந்தாலும், பாரதியின் அடிகளால் நல்லுணர்ச்சி பெறுவதன் மூலம் எதிர் காலத் தமிழகத்தில் எவரும் இருக்கமாட்டார்கள் என்றே எண்ணுகிறேன். இதைக் கண்ணுறும் அன்பர்கள் நாட்டை ஒரு கண்ணாகவும், மொழியை ஒரு கண்ணாகவும் கருதும் நல்ல தமிழர்கள் அடங்கிய எதிர்காலத் தமிழகத்தை விரைவாய் காண ஆசைப்பட வேண்டும் எனவும் வேண்டிக் கொள்ளுகிறேன்.

வாழ்க தமிழ் மொழி! வாழ்க தமிழ் மக்கள்!
வாழ்க தமிழ்த் திருநாடு!

— தமிழ்த்தென்றல்

குட்டிக் கரணம்

[பேராசிரியர் சு. த. இராசேசுவரி அம்மையார்]

ஓயா மண்டலம்

கருவினைச் சுற்றி எதிர் மின்னிகள் சுழல்கின்றன வன்றோ? அவ்வாறு சுழலும் போது எந்தப் பொருளும் ஆற்றலை இழப்பதே இயல்பாகும்! சுற்றும் பொருள் ஆற்றலை இழந்தால் என்ன ஆகும்? ஓய்ந்து விழ வேண்டியது தான். "குந்தினையா குரங்கே சந்தடி அடங்க" என்பதன்றோ பழமொழி!

ஆற்றல் இழந்த பின் சுழல மாட்டாது ஓய்ந்த எதிர் மின்னியும் நேர் இயல் மின்னியிலே போய் விழ வேண்டும் அன்றோ விழும். பையன் சுற்றி ஓடிக் கொண்டே இருக்கின்றான். புறமுக ஆற்றலால் உள்முகமாக விழாது ஓடினாலும், ஓடுவதன் பயனாக ஆற்றலை இழந்து கொண்டே வருகின்றான். ஓய்ந்து பின் ஓட முடியாது நிற்கின்றான். அதுபோல எதிர் மின்னியும் ஆற்றலைக் கதிராக வீசி ஓய்ந்து அவிதல் வேண்டும். ஆனால், நாம் என்ன காண்கிறோம்? முன்னர் குறித்த மண்டலங்களில் எதிர் மின்னி சுற்றி வரும் போது ஒரு கதிரையும் வீசி வரக்காணோம். இவ்வாறு கதிர் வீசாத நிலைகளை எதிர் மின்னி சுழலுகிற நிலையான மண்டலங்கள் என வழங்கலாம். இங்குத் தான் எதிர் மின்னி மாறாத நிலைமையில் (Stationary State) இருக்கின்றது.

பழையபாடத்தில் புதியகதை

நிறமாலை ஆராய்ச்சியின் பயனாக இந்த மண்டலங்களிலுள்ள ஆற்றலின் அளவு தனித்தனி இவ்வளவு இவ்வளவு எனநன்கு விளங்கியுள்ளது. இந்த நிலை மண்டலத்தைப் பற்றி ஒன்று கூறலாம். கருவினுக்கு எவ்வளவு அருகில் இருக்க முடியுமோ, அவ்வளவு அருகிலே தான் இது இருக்கின்றது. மாறாத நிலையில் உள்ள எதிர்மின்னி மாறும் நிலைக்கும் வரும். தன் மண்டலத்திலேயே போவதை விட்டு மற்றொரு மண்டலத்திற்குள் ஏறிக்குதிக்கும்; பின் கீழே இறங்கும். அப்போது கதிரை வீசும்.

இத்தகைய கதிர் வீச்சுக்களை ஒளிர், வரி நிலை மாலையாக நூறு ஆண்டுகளாகப் படம் பிடித்து அறிஞர்கள் ஆராய்ந்து வருகிறார்கள். கதிர் வீசுவது என்றால் ஆற்றலை வீசுவது தானே. எனவே ஆற்றல் அளவில் மாறும் என்பதாயிற்று. எதிர் மின்னிகளின் ஆற்றல் எவ்வளவு எவ்வளவு அளவில் மாறி வரும் என்பதனை அறிஞர்கள் பிடித்த படங்கள் விளக்கி வைக்கின்றன.

— தமிழ்த்தென்றல்

"மேலே போ! கீழே வா!"

நகரத்தில் இருக்கும் பூங்காவனங்களுக்குத் தெரு வழியாகப் போகலாமே அன்றி, தெரு வழியே இருக்கும் புல் தரையில் வண்டி ஓட்டிப் போகக் கூடாது. இது சட்டம். இது போல அணு உலகிலும் சட்டம் இருக்கின்றது போலும். எதிர் மின்னிகள் நிலையான மண்டலங்கள் வழியாகப் போகலாமே அன்றி இடையிலுள்ள வெட்ட வெளியில் (Forbidden Orbits) செல்லலாகாது. ஆற்றல் அணு அணுவாகத் தவளைக் குதிப்பது போல் விட்டு விட்டு ஓடுகிற இயல்பினை இந்தச் சட்டம் விளக்குகிறது. உள்ளிருக்கும் நிலைமண்டலத்தின் ஆற்றல் [அ] என்ற அளவு என வைத்துக் கொள்ளலாம். அதற்குப் புறத்தே உயர இருக்கும் நிலை மண்டலத்தின் ஆற்றல் [இ] என்ற அளவாம். முதல் மண்டலத்திலிருந்து உயர இருக்கும் மண்டலத்திற்குள் எதிர் மின்னியைத் தள்ளப் புதிய ஆற்றல் வேண்டும் அன்றோ? எவ்வளவு ஆற்றல் வேண்டும்? 6 குதிரை ஓட்டம் ஓடுகிற எந்திரம், 8 குதிரை ஓட்டம் ஓட இன்னும் எவ்வளவு புதிய ஆற்றல் வேண்டும் என்பது போன்ற கேள்வியே இது. சிறுவனும் 8-இல் இருந்து 6 ஐக் கழித்து 2 எந்திர ஓட்டம் என்று தன் கணக்கறிவை எளிதில் வெளிப்படுத்தி விடுவான். [இ] இல் இருந்து [அ] என்பதனைக் கழித்தால் எவ்வளவு வருமோ அவ்வளவு ஆற்றல் எதிர் மின்னிக்குப் புதிதாக வேண்டும். அப்போது தான் எதிர் மின்னி மேலே ஏற முடியும்.

ஆனால் மேலே வீசிய கல் இருந்த இடத்திற்கே திரும்ப வரும் அன்றோ? அதே போல உயர இடத்தைப் பெற்ற எதிர் மின்னி திரும்பப் பழைய இடத்திற்கே வந்து சேரும். அப்படிச் சேரும் போது பெற்ற ஆற்றலைக் கக்க வேண்டும் அன்றோ? அப்படித்தான் செய்கிறது. கதிர் வீச்சாக வீசி எறிகிறது. எனவே எதிர் மின்னி ஆற்றலைப் பெற்று மேலே ஏறுகிறது. ஆற்றலைக் கதிராக வீசிக் கீழே இறங்குகிறது என்பதாயிற்று.

தவளைக் கணக்கு

ஆற்றலோ ஆற்றொழுக்காக ஓடுகின்றதில்லை. அணு அணுவாக விட்டு விட்டுக் கிடக்கின்றது. ஆதலின் அதன் ஓட்டம் தவளை குதிப்பது போலத் தோன்றுகிறது. ஆற்றல் மாற்றங்களை நிறமாலைப் படங்கள் காட்டுகின்றன என்றோம். இந்த

— தமிழ்த்தென்றல்

மாற்றங்களும் ஆற்றலணு, ஆற்றலணுவாகவே எழுகின்றதை அங்குக் காண்கின்றோம். இங்கே அறிஞர்கள் ஆற்றல் கணக்கை எழுதுகின்ற வகையைச் சிறிது அறிந்து கொள்ளுதல் வேண்டும்.

'பிளாங்' (Planck) என்ற பேராசிரியர் இந்த ஒரு மாறா எண்ணினைக் கண்டார் அன்றோ? அதனை h என்று எழுதுவது வழக்கம். கதிர் வீச்சு ஆற்றல் என்றால் அலை தானே! அலையைப் பற்றி ஆராயும் போது விநாடிக்கு இத்தனை முறை அலைகின்றது என்று அளந்து காணக் கூட வேண்டும். அதனை அலையின் அதிர்வெண் (Frequency) என்று வழங்குகின்றார்கள். இதனை r (நியூ) என எழுதிக் காட்டுவதே வழக்கம். பிளாங்க் எண்ணினை அதிர்ச்சி எண்ணால் பெருக்கினால் வரும் தொகையே ஆற்றலணு (Quantum) என முன் கூறியதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். E = hr. இரண்டு மண்டலங்களின் ஆற்றலையும் அறிந்தவுடன் அவற்றின் வேற்றுமையைக் கழித்தல் கணக்கு வழியே காண்பது எளிது. இவ்வளவு ஆற்றல் மாற்றம் தான் எதிர் மின்னி இடையே எழும். இது தானே கதிர் வீச்சாக வரக் கூடும். எத்தகைய கதிர் வீச்சு என்று எப்படி அறிவது?

முன் கூறியபடி கதிர் வீச்சும் அலையாதலின் அதன் சிறப்பியல்பு அதன் அதிர்ச்சி எண்ணேயாம். இந்த அதிர்ச்சி எண்ணை எப்படி அறிவது? கழித்தல் கணக்கில் நாம்

— தமிழ்த்தென்றல்

ஆற்றல் வேற்றுமையைக் கண்டு பிடித்தோமன்றோ. அதனை h (6,5 × 10 27) என்பதனால் வகுக்க வேண்டும். வகுத்தவுடன் வரும் ஈவே கதிர் வீச்சின் சிறப்பு இயல்பாம் அதிர்ச்சி எண்ணாகும்.

மோதல் கணக்கு

கதிர் வீச்சு எழுகின்ற ஒளிகளின் நிறமாலைகளைக் கொண்டு இந்த மண்டலங்களில் விளங்கும் ஆற்றல்களை இவ்வளவு என அறுதியிட்டுக் கூறி விடலாம். ஒரு பையன் அசையாது நிற்கின்றான். அருகில் நிற்கின்ற பையனை மோதித் தள்ளுகின்றான். இதே பையன் ஒரு மைல் வேகத்தில் ஓடி வந்து அடுத்த பையன் மேல் மோதுகிறான். இரண்டு மைல் வேகத்தில் வந்து மோதுகிறான். ஒரே பையன் தான் மோதினாலும் மோதப்பாடு அவனுடைய வேகத்திற்கு ஏற்ப மாறிக் கொண்டே வருகின்றதன்றோ!

எதிர் மின்னிகளும் இவ்வாறு மோதுகின்றன. ஆதலின் இந்த மோதல் கணக்கை அளந்து அறிய வேண்டும். ஒரு பொருளினை ஒரு வீசை இரண்டு வீசை என்று எடை போடுகிறோம். இங்கு எதனை அளக்கின்றோம். அதன் பொருண்மையை (Mass) அளக்கின்றோம். இந்தப் பொருண்மையோடு வேகத்தையும் அறிந்தால் தான் மோதல் கணக்கு விளங்கும். பொருண்மையையும் வேகத்தினையும் பெருக்கி வரும் தொகையை (M = mv) விஞ்ஞானிகள்

ஊற்ற நிலை (Momentum—M) என வழங்கி வருகிறார்கள்.

இதனை அறிந்தால் தான் மோதப்பாட்டின் வேற்றுமை எல்லாம் தெரியும். முட்டிய பொருள் எவ்வளவு வேகத்தில் விழும் என்று தெரியும். முட்டப்பட்ட பொருள் எவ்வாறு எல்லாம் ஆகும் என்றும் கூற முடியும்.

ஆனால் ஒன்று. நேர்க்கோடாக ஓடும் போது மட்டும் தான் இந்தக் கணக்குச் சரியாக வரும். வட்டமாகச் சுழலும் போது வேறு பல சிக்கல்கள் வருகின்றன. இது ஒரு கோணக் கணக்கு. அங்கு எழுகின்ற ஊற்ற நிலையைக் கோண ஊற்ற நிலை (Angular Momentum) என்கிறார்கள். எதிர் மின்னி வட்டமாகச் சுழல்வதால் அதன் கணக்கும் கோணக் கணக்கேயாம். இதனைக் கணக்கிடவும் ஓர் எளிய வழி உண்டு. வட்டம் என்றால் அதன் சிறப்பியல்பு அதனுடைய ஆரை தானே. [Radius] இந்த ஆரையால் முன் கூறிய நேர் ஊற்ற நிலையை [mv] வகுத்து வரும் தொகையே கோண ஊற்றமாம்.

கோண ஆற்றல்

எதிர் மின்னிகள் குறித்த ஓர் ஆற்றல் உள்ள குறித்ததோர் மண்டலத்தில் சுழன்று வருவன. ஆதலின் இவற்றின் கோண ஊற்றமும் குறித்ததோர் நிலையில் இருத்தல் வேண்டும். எந்த அளவில் அது இருத்தல் வேண்டும்? நிறமாலை ஆராய்ச்சி இதனை நன்கு விளக்குகின்றது.

இங்கு ஒரு அளவு தனியனாக [Unit] வருகின்றது. $\frac{h}{2\pi}$ என்பதே அத்தனியன். எதிர் மின்னியின் கோண ஊற்றம் ஒரு தனியன், இரண்டு தனியன், மூன்று தனியன், என்று $\left\{\frac{h}{2\pi}, 2\frac{h}{2\pi}, 3\frac{h}{2\pi} \text{ etc}\right\}$ வளர்ந்து வருவதாகவே காண்கிறோம். இவ்வாறு பின்னமில்லாமல் முழுது முழுதாக அமைதல் வேண்டும் என்பதும் தெரிகிறது. $E = hr$ என்று கூறினோம்.

ஆதலின் கோண ஆற்றலை h என்பதால் வகுத்தும், கதிர் வீச்சின் அதிர்ச்சி எண் r எளிதில் விளங்கி விடும் அன்றோ?

— தமிழ்த்தென்றல்

— தமிழ்த்தென்றல்

அழகியின் வேலை

பி. எஸ். மணியன், மதுரை.

நான்கு வீதிகளும் இணையுமிடம்..................இந் நாட்டு மன்னர்களுக்கெல்லாம் அது தானே 'பிர்லா மாளிகை.' வீதி விளக்குகள் கூட அந்த பிச்சைக்கார உலகைப் பார்க்கக் கூடாதென்பதால் தான் போலும் மின்சாரம் கூட அந்த இடத்தில் இடக்கு பண்ணிக்கொண்டிருந்தது.

இதைப் பற்றி யார் கவலைப்பட்டாலும் சரி, அவளுக்கு அதுபற்றிய சிந்தனையே கிடையாது. இருட்டிலே அவள் அரசி. விடிந்தாலோ அடாவாதி வாலிபர்களின் அகராதிப்படி!

சினிமா இரண்டாம் ஆட்டம் முடிந்தவுடன் அரட்டையடித்துச் செல்லும் கூட்டத்தைக் கவனிப்பாள். தம்பதிகள் செல்வர் படவிமர்சனம் செய்தவாறே! காதலர்கள் தங்கள் வாழ்வுக்கும் சினிமாவுக்கும் பொருத்தம் பார்த்தவாறே போவார்கள்......சினிமாவில் கிளறி விடப்பட்ட உணர்ச்சி வெள்ளத்துக்குத் "தூக்கம்" கொடுக்க நினைக்கும் அப்பாவிகள் முணு முணுத்தவாறே செல்வர், ஏதாவதொரு சினிமாபாட்டை. வளைத்து வளைத்து — திரும்பித்திரும்பி — இவர்கள் அவளைப் பார்க்கும் பார்வை!

இப்படி இவர்களெல்லாம் செய்யும் ஆனந்தக் களியாட்டங்களுக்கு மட்டும் சமுதாயம் ஒப்புக்கொடுக்கிறதே........என் தன்னை மட்டும் தாறுமாறாகத் திட்டுகிறது? பணமில்லா விட்டால் தான் என்ன? தானும் ஒரு குடும்பம் நடத்தினால்...............!

அவளது ஆசை மனம் அலைமோதி கொந்தளித்தது, பற்பல கோணங்களை நோக்கி. "நாசமாய் போச்சு!" வாய் விட்டு அவளே கூறிக் கொண்டாள். வேதனை உள்ளத்தில் பிறிட்டுக் கிளம்பிய வெடிச் சிரிப்பு, நடபாதை முழுக்கவும் எதிரொலித்தது. படர்ந்து மறைந்தது.

இரண்டு வருட வாழ்க்கை ஏட்டை புரட்டினாள அழகி. அங்கே புன்னகை — புளகாங்கிதம் — புதுமை எண்ணம் —இதற்கிடையே நின்றிருந்தான் அரசு

"உன் அம்புக் கண்கள் என் இதயக் கலியைக் குத்திக் குத்தி

— தமிழ்த்தென்றல்

கொடுமை செய்கிறதே! கதுப்புக் கன்னங்கள் கண்ணாடியைக் கண்டு கேலி செய்கிறதே! மல்லிகைச் சரப் பற்களின் மினுமினுப்பு முத்தை மூகம்நோகச் செய்கிறதே! கண்ணே! கற்கண்டே!..............."

அழகிக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை!

தெருக்கூத்து நாடகங்களில் இப்படி ராஜா வேடம் போட்டவன் பேச அவள் கேட்டிருக்கிறாள். அப்பொழுதெல்லாம் பொங்கி வந்த வெட்கத்தைச்சிரிப்புத்திரை போட்டு மறைத்துயிருக்கிறாள். இப்போது உண்மை வாழ்விலும் இப்படியா.... ....? காகிதத்தில் எழுதிக் கிழுதி வைத்து வாசிக்கிறானா என்ற சந்தேகம். பார்த்தாள், அப்படி எதும் கையில் காணோம். மருண்டாள் முதலில். உயர்ந்த இடங்களில் உல்லாச வருணனை தான் உயிரெழுத்தாக ஆட்சி செய்கிறது என்பதை அப்பிஞ்சு உள்ளத்தால் உணர முடியவில்லை அன்று.

வார்த்தையோடு நிறுத்தி வைக்கவில்லை அவன். வண்ணமிகும் வதனத்தைத் தடவினான். அப்படியும் அங்கொருமாதிரி ஊறுகிறது என்று அவளை என்ன முறையிட்டு செய்தானா? அதுவுமில்லை. கிறுக்கனைப் போல கிள்ளிக் கூட வைத்தான். 'கிசு கிசு' மூட்டினான். கிட்ட இழுத்தான்...............!

இப்படியாக எத்தனை எத்தனையோ இன்பங்களை ஊட்டிய இனிய கட்டங்கள்.

"எனக்கு நாளைக்கு கலியாணம். நீயும் வா அழகி. கலியாணம் செய்த பிறகு உன்னை மறப்பேன்னு நினைக்காதே. எப்போதும்போல."

அழகிக்கு சுளீரென்றது. சிந்தனை சுழன்றது.

"தன்னை ஆசைக்கு வைத்துக் கொள்வார் போலும்" என்று நம்பியது அவளது பேதை உள்ளம்.

மஞ்சக்கிழங்காட்டம் மனைவி கிடைத்த பின் அரசு இப்பக்கம் திரும்பவே இல்லை. என்னென்னமோ சமாதானங்கள். நொண்டிக் காரணங்கள்.

அப்பறும் போனான். ஆத்தாளும் போனாள். அதோடு வாழ்வும் போனது, இவளை விரிந்த பெருமை பேசுகிற தமிழகத்தில் அநாதி வர்க்கத்தில் மறுஒருரு ஆயுட்சந்தாதாராக சேர்த்து வைந்து விட்டு.

— தமிழ்த்தென்றல்

ஏடுகளைப்பற்றி:

சில புத்தகங்கள் சுவைப்பதற்கும், மற்றவை விழுங்குவதற்கும், ஒரு சில மென்று செமிப்பதற்கும்.

— "பேக்கன்"

ஒழுங்கானவை, ஒழுக்கக் கேடானவை என்று புத்தகங்கள் இல்லை. நன்றாக எழுதப்பட்டதா இல்லையா என்பது தான்.

— ஆஸ்கார் ஒயில்ட்.

மக்கள் குரலே நல்ல புத்தகமாகும்.

— மார்க்சிம் கார்க்கி.

திருடப் போய் தப்பியோடி வந்தவன் இதை திரும்பயாரிடமாவது செல்வானு? அல்லது அந்த திசைத் தான் திரும்பிப் பார்ப்பானு?

அழகியின் கதையும் அவ்வாறே முடிந்தது.

ஆனால் அழகிக்கு மட்டும் ஒரு ஆசை இருந்தது. இன்னுமிருக்கிறது. தான் அவன் கண் முன்னுலே குடும்பம் போட்டு காட்டி விட வேண்டு மென்று.

வீங்கி நொசு நொசுத்த புண்ணில் ஊசியை விட்டுக் கிளறுவது போல வேதனைப்படுத்தியது, இந்த சென்று போன வரலாற்று ஏடுகள். நீர்வீழ்ச்சியென அருவி பாய்ந்தது கண்ணீர் வெள்ளம்.

உருண்டோடும் ரதத்திற்கு எசப்புக் கட்டை போடுவது போல "அழகி!" என்று கூப்பிட்டது அவளை சிந்தனைப் பாதையிலிருந்து திருப்பியது.

ஏறிட்டுப் பார்த்தாள். எதிரே "சொக்கன்."

"என்ன அழகி அழுதுக்கிட்டுயிருக்கே..............?"

"ஆமா சொக்கா..............என் வாழ்க்கையைநினைச்சேன். அழுகை வந்தது..........."

"அட நீஒண்ணு எல்லாந்தான் கஷ்டப்படுருங்க நல்லதும் கெட்டதும சேத்து தான் வாழ்வுன்னு பெரியவங்க சொல்லலியா?"

தேறுதலுக்காகப் பேசினுன் சொக்கன்.

இத்துப்போன தகரக்குவளை பரயபரை தான் அவன் சேற்று முடியு. சத்தற்ற நடைபிணங்களின் ஓட்டுரிமையைப் பெற முழு முழு தகுதி பெற்றவன் தான் இன்று காலே வரை.

"இன்று எனக்கு சுருட்டுக் கம்பெனியில் அந்தக் கூலி வேலை கிடைத்து விட்டது" மகிழ்ச்சிப் பெருக்கால் பெருமை பேசினுன்.

"குடும்பம்". இதன் மீது ஆசை அவளுக்கு.

பொக்கை வாய்ப் பிள்ளையின் பொன்னுன சிரிப்பைக் காண அவளுக்கு ஆவல். பேசினர் வியப்பு மட்டும்.

தாளமும் மேளமுமில்லாமல் இருட்டு "கைதட்ட" இருவரும் குடும்பமாயினர்.

வானம் கருந்திரைக்குள் உறங்கிக் கிடந்தது. குடிசையின் வாயிலே நின்றவாறு வேலையினின்று திரும்பும்..............! நாளை தைத்திரு நாள் அல்லவா? இல்லத்தை அலங்கரித்து அலங்கரித்து அழகு பார்த்தாள். வேலையிலிருந்து திரும்பும் கணவனை வரவேற்று எல்லா வகையாலும் மகிழ்ச்சிப் பெருக்கில் திளைக்க வைப்பது தானே அழகியின் வேலே.

கிராமங்களைப்பற்றி :

"கிராமம் இசை. நகரம் நாடகம். இரண்டும் சேர்ந்தால் பூர்த்தியான இசை நாடகம்."

— லாங் பெல்லோ.

"நகரங்களில் கிடைக்கும் எல்லா வசதிகளும் கிராமங்களுக்கும் கிடைக்கிற போது தான், நாட்டில் பரி பூரண முன்னேற்றம் ஏற்பட்டதாகக் கருத முடியும்."

— ஓர் அரசியல் அறிஞர்.

"நாட்டின் முதுக்கெலும்பே சிற்றூர்கள்."

—காந்தியடிகள்.

— தமிழ்த்தென்றல்

நுண்ணறிவு : சடார் யோசனை!

கனி: "காரவான்"　　　　சாறு: "செல்வராஜ்"

இனிய முகம். இன் சொல். இங்கிதக் சிகிச்சை. இவைகளுக்கு இருப்பிடம் டாக்ட தாமஸ் ஆலிவர்.

புறு தலைமை மருந்துவ மனையின் பணியாளர். பிறர் நலம் பேணும் பண்பாளர்.

அன்று ஆஸ்பத்திரிக்கு வந்தவும் வராததுமாய் அவரை வரவேற்கக் காத்துக் கொண்டிருந்தது ஓர் அற்புதமான கேஸ். அடுக்கு அடுக்காக பற்பல மருத்துவ முறைகளைக் கற்ற வல்லுநரைக் கூட இச் சிக்கல் பெரும் பாடுபடுத்துவதாகவே இருந்தது.

யுவதி. பூரணக்கர்ப்பவதி. பேறு காலத்தின் யோசனைக்காகப் பிரசவ விடுதிக்குப் போய்க் கொண்டிருந்தாள். ரிக்சாவாலா வேகமாகச் சென்றுன். கதிரவன் எதிர்ஒளியைமறைக்க குடையை விரித்து..............பின்னுல் வந்த ரிக்சாவில் பெற்றவள்.

கருப்பைக் கண்ட மாட்டிற்கு தரையில் எப்படிகால் பாவும்? வெறித்துக் கொண்ட மிருகம் ரிக்சாவை மட்டித் தூக்கி எறிந்து விட்டது. ஒரே வேகத்தில் அதனது கொம்பு யுவதியின் வயிற்றில் ஏறி விட்டது......ஒரே குருதி வெள்ளம்......மயக்கமுற்றுள் யுவதி.

இப்போது ஆஸ்பத்திரிப்படுக்கையில் அவள். எதிரே டாக்டர்.

கொம்பு குத்திய ரணத்துவாரத்தில் குடல் வெளிக் கிளம்ப முயன்று கொண்டிருந்தது. அதிலே மற்றொரு ஆச்சரியம்........! அத் துவாரத்தின் வெளியே கர்ப்பத்திலிருக்கும் குழந்தை தன் கையின் ஆள் காட்டி விரல் இலேசாக வெளியே வந்திருந்தது.

யுவதி மயக்கத்திலிருக்கிருள். குழந்தைக்கும் உயிரோட்டம் இருப்பதாகவே தெரிகிறது. இருவரும் பிழைக்க வேண்டும். எந்த வழியில் சிகிச்சையை ஆரம்பம் செய்வது?

டாக்டரின் நீண்ட விரல்களுக்கிடையே "சிகரெட்" புகைந்து கொண்டிருந்தது. வாயினின்று புகையோ சுருள் சுருளாக மேல் நோக்கி...............

யோசித்தார். யோசித்தார்...............யோசித்துக் கொண்டிருந்தார் டாக்டர்! ஏதோ சடார்என்று சிந்தனையில் ஓட்டம்.

புகையும் சிகரெட் முனையில் கோர்த்து நின்ற சாம்பலை தட்டி விட்டு சிகரெட் நெருப்பை வெளியேதெரிந்த குழந்தையின் விரலில் வைத்தார்!

ஆகா! என்னே அற்புதம்! கையை சடக்கென்று இழுக்க அதைத் தொடர்ந்து குடல் பகுதியும் இணைந்துசென்றது உள்ளே. இழை மூட்டினுர். சிகிச்சை சிறப்பானது.

மறு நாள் பிரசவம். பையன் பிறந்தான். தாயார் பிழைத்தாள்.

டாக்டர் தம் நுண்ணறிவு சடார் எனகாட்டிய இந்த சரியான வழியை யார் தான் புகழாமல் இருக்க முடியும்?

— தமிழ்த்தென்றல்

தைத்திருநாள்

[ச. ஆறுமுகநாதன்]

1. தோன்மை மிகுந்தத மிழ்த்திரு நாள்மனத்
தூய்மைத ருந்திரு நாள் — தொழில்
இன்பத்திற் கண்டவை உண்டும கிழ்ந்திடும்
ஏற்றம் தருந்திரு நாள் — தோன்

2. தைப்பிறந் தாலே வழிபிறக்கும் மொழி
தாங்கும்பெ ருந்திரு நாள் — ஆவின்
நெய்யோடு சர்க்கரை சேர்த்துப்படைத்துண்ண
நீண்மகிழ்-தந்திடு நாள் — தோன்

3. தங்கநிறக் கதிரோடு பல்தானி யம்
தாங்கிய தைத்திரு நாள் — பேறச்
செங்கதி ரோன் செய்த சீர்மைக்கு நன்றி
செலுத்தும்பெ ருந்திரு நாள் — தோன்

4. மஞ்சி விரட்டுப் புரிந்திட மள்ளர்கள்
மார்தட்டி நின்றிடும் நாள் — தாயை
நெஞ்சிற் பரவவும் நீண்மொழி பாடவும்
நேர்மைகோ ழுந்திடு நாள் — தோன்

வெண்பா

அன்பும் அறவாழ்வும் ஆர்த்தெழுந்த உள்நெகிழ்வும்
இன்பம் பயக்க இசைகூட்டித் — தென்தமிழர்
பண்பிற் கடைபிடித்துப் பால்பொங்குந் தைத்திருநாள்
உண்பீர் உவந்துவகை ஓர்ந்து.

— தமிழ்த்தென்றல்

முகப்பரு, சேத்துப்புண், சொரிசிரங்கு, கரப்பான் முதலியவைகளுக்கு
கைகண்ட நிவாரணி
"சோனல்"
சகல சருமரோக களிம்பு
* * * * * *
குழந்தைகளுக்கு ஏற்படும் மாந்தம், அஜீர்ணம், வயிற்ரேட்டம் முதலிய
வைகளைப் போக்கி ஆகாரத்தை சமநிலைப்படுத்தி குழந்தைகளை
ஆரோக்கியத்துடன் வளர்க்கும்
ஆரென்ஸ்
கிரைப்-டில்-வாட்டர்
தயாரிப்பாளர்கள்:
"ராஜம்" பாரத் டிரக்ஹவுஸ், மதுரை.

போட்டோ மார்க்
சந்தனாதித் தைலம்
எங்களிடம் அநேகவித மூலிகையினால் தயார்செய்யப்பட்ட சந்தனாதி, அரைக்கீரைதைலமும், ஹேர் ஆயில்களும், வாரம் இருமுறை ஸ்நானம் செய்தால் ! கண் எரிச்சல், கண் மங்கல், கண்ணீர் வடிதல், சரீரத்தில் உஷ்ணம் முதலிய வியாதிகளை நீக்கி கூந்தலை வளரச்செய்யும்.
பொன்னு விலாஸ் சீயக்காய்பவுடரை உபயோகியுங்கள்.
Pro: V. M. சேர்மச்சாமி நாடார்,
எண்ணெக் கடை,
M. S. பட்டணம் பொடி ஏஜண்டு,
ஷாப் வியாபாரம், தெப்பத்திற்கு மேல்புறம், விருதுநகர்.

— தமிழ்த்தென்றல்

தமிழின் ஜதி

[ரசிகமணி: டி. கே. சி.]

ஒரு ஊரில் ஒரு சப்-ரிஜிஸ்தார் இருந்தார். அந்த ஊருக்கு அவர் தான் பெரிய அதிகாரி. அவர் இட்டதே சட்டமென்றால் குற்றமில்லை.

அவர் ரொம்ப நல்லவர். பக்திமான். பக்திசிரத்தையோடு சிவபூஜை செய்கிறவர். விரதாதிகளினால் தேகம் ரொம்பவும் ஒட்டிப் போனவர்.

அவரிடத்தில் யாரோ ஒருவர் சொல்லி விட்டார், "நீங்கள் வேப்பங்குழை எடுத்துப் பார்வை பார்த்து விட்டால் எந்த விஷமும் நீங்கிவிடும். தேள்க்கடி விஷம் நிச்சயமாய் இறங்கி விடும். க்ஷணத்தில் இறங்கி விடும்" என்று அடிச்சு விட்டார் சப்ரிஜிஸ்தாரிடம்.

சப்ரிஜிஸ்தாரும் நம்பிக்கொண்டார். நம்பிக்கை ஆழமாய்ப் பதிந்து விட்டது மனசில். எதுவும் அதை அசைக்க முடியவில்லை.

X X X

யாரையாவது தேள் கொட்டிவிடும். சப்ரிஜிஸ்தாரிடம் போய்ச் சொல்லுவார்கள். வேப்பங் குழையோடு விடு விடு என்று ஓடி வருவார் சப்ரிஜிஸ்தார். வேப்பங்குழையைக் கொண்டு கொட்டினவன் முகத்தில் வேகமாய் வீசிப்பார்வை பார்ப்பார். இரண்டு நிமிஷம் வீசி அடித்த பின் "வலி போய் விட்டதா" என்று கேட்பார்.

"இல்லையே" என்று கூறுவான் அவன்.

இன்னும் ஒரு நிமிஷம் பார்வை பார்ப்பார் அதிக வேகமாக வேப்பங் குழையை வீசி. "வலி போய் விட்டதா" என்று கேட்பார்.

"இல்லையே" என்று சொல்லுவான் அவன்.

"போய் விட்டது" என்று சொல் என்பார் சப்ரிஜிஸ்தார்.

"வலிபோகவில்லையே, எப்படிச் சொல்ல" என்பான் அவன்.

"போய் விட்டது என்று சொன்னால் தான் வலி போகும்" என்று அதிகார தோரணையோடு சொல்லுவார் சப்ரிஜிஸ்தார்.

அப்பாவி என்ன செய்வான். "போய் விட்டது" என்று அழுது கொண்டே சொல்லுவான்.

"சரி, போய் விட்டது. போய் விட்டது பார்த்தாயா; பார்த்தீர்களா எல்லாரும்." என்று சொல்லி விட்டு வேப்பங் குழையை அங்கேயே போட்டு விட்டு கம்பியை நீட்டி விடுவார்.

— தமிழ்த்தென்றல்

வலி போய் விட்டதாக அவருடைய மனசில் எண்ணம். ஆள் துடியாய்த் துடித்துக் கொண்டிருப்பான். அந்தக் காரியம் அவருக்குத் தெரியாது.

இந்த மாதிரி சம்பவங்கள் அடிக்கடி நடக்கும்.

X X X

தமிழ் வகுப்பில் நாங்கள் பட்ட கஷ்டங்கள் அனேகமாய்த் தேள்க்கடி பார்வை மாதிரி தான்.

சங்கடமான நூல் ஒன்றைப் பாடமாக வைத்திருக்கும். தமிழாகவே இராது. வாசிக்கக் கேட்டால் ஹாட்டெண்டாட், காமட்சட்கா பாஷையோ என்று தான் சொல்லத் தோன்றும். அப்பேர்ப்பட்ட கரடு முரடான நூல்களைப் பாடமாக வைத்து எங்களைச் சித்ரவதை செய்தார்கள். வருஷக் கணக்கில் சித்திரவதை செய்தார்கள்.

தமிழாசிரியர், "பாட்டு நன்றாக தானே இருக்கிறது" என்று சாதித்துக் கொண்டே இருப்பார். எங்களுக்கோ பிராண வேதனையாக இருக்கும்.

ஆசிரியர் "நன்றாக இருக்கிறது. நன்றாக இருக்கிறது" என்று சொல்லுவதில் பின் வாங்குகிறது கிடையாது.

"சங்கநூல், சங்கநூல்" என்று பல்லவி போட்டுக் கொண்டிருப்பார். 'தமிழென்றால் இனிமை என்று அர்த்தம்' என்று சொல்லிக் கொள்ளுகிற ஆடம்பரம் வேறு. இப்படி எல்லாம் வருகிற தலைவலி ஒருநாளும் எங்களை விட்டு அகலாது. எங்கள் ஜாதகம் அப்படித் தொலைந்தது.

உதாரணத்துக்கு ஒரு பாடம். புறநானூற்றில் நூற்றி அறுபத்தைந்தாவது பாட்டு. 'இது தமிழா ஹாட்டெண்டாட் அல்லது காமட்சட்கர் பாஷையா?' கொஞ்சம் பார்த்துச் சொல்லுங்கள்.

"ஆடுநனி மறந்த
கோடுயர் அடுப்பின்
ஆம்பி பூப்பத்
தேம்புபசி உழவாப்
பாஅல் இன்மையின்
தோலொடு திரங்கி
இல்லி தூர்ந்த
பொல்லா வறுமுலை
சுவைத்தோ(று) அழூஉம்தன்
மகத்துமுகம் நோக்கி
நீரொடு நிறைந்த
ஈரிதழ் மழைக்கண்என்
மனையோள் எவ்வம்
நோக்கி நினைஇ
நிற்படர்ந் திசினே
நற்போர்க் குமண!"

விஷயம் ஏதோ எப்படியோ இருக்கிறது. ஆனால் தமிழ் பாஷைக்குரிய ஜதியோ பண்போ ஒன்றும் இல்லை. எல்லாம் முட்டிக்கால்த் தட்டுகிற காரியம் தான்.

இதில் சந்தேகம் ஏதாவது இருந்தால் மறுபடியும் செய்யுளை வாசித்துப் பார்க்கும்படியாகக் கேட்டுக் கொள்ளுகிறேன். போகட்டும்; இனி.

தமிழ்ப் பண்பு தமிழ் ஜதி என்பது இன்னதென்று தெரிய வேண்டாமா.

— தமிழ்த்தென்றல்

மேலே சொன்ன விஷயத்தையே ஒப்பிலாமணிப் புலவர் அழகான தமிழ் உருவம் கொடுத்துப் பாடி இருக்கிறார். அதைப் பார்க்கலாம்.

ஒரு நாடகம் தான்:—

குமணன் என்ற ஒரு பெரிய வள்ளல் இருந்தான். அவனைக் காட்டுக்குத் துரத்தி விட்டான் தம்பி அமணன். காட்டில்த் தனியாய் இருக்கிறான் குமணன். அவனிடத்தில் புலமை வாய்ந்தவர் ஒருவர் வந்தார்.

புலவர் மிக்க செல்வவானாய் இருந்தவர் தான். ஆனாலும் கால தோஷத்தினால் தரித்திரனாய்ப் போய் விட்டார்.

வளமாக விருந்தோம்பி வந்தவர். பெரிய உயர்ந்த அடுப்பில் தகதக என்று எரிந்து கொண்டிருக்கும். சமையல் ஆய்க் கொண்டே இருக்கும். விருந்தாளிகள் வந்து சாப்பிட்டுக் கொண்டே இருப்பார்கள்.

அப்படி எரிந்த அடுப்பு அணைந்து போய் விட்டது, தரித்திரத்தின் கொடுமையால். ஆகாரம் இல்லாமல் மனைவி நெக்கு நெக்காய் மெலிந்து போனாள்.

"ஆடெரி படர்ந்த
    கோடுயர் அடுப்பில்
ஆம்பி பூப்பத்
    தேம்புபசி யுழன்று
இல்லி தூர்ந்த
    பொல்லா வறுமுலை —
சுவைத்தொறும் சுவைத்தொறும்
    பால்கா ணாமல்
குழவி தாய்முகம்
    நோக்க, மனைவி
என்முகம் நோக்க
    யானும்
நின்முகம் நோக்கி
    வந்தனன் குமணா!"

[கோடுயர் அடுப்பில்: விளிம்பு உயர்ந்த அடுப்பில்; ஆம்பி பூப்ப: காளான் முளைத்திருக்க; தேம்புபசி உழன்று: தேட்டத்தோடுபசியினால் கஷ்டப்பட்டு; இல்லி தூர்ந்த: துவாரம் அடைத்துப் போன.]

அருமையான பாடல். தமிழ்ப் பண்பைப் பார்க்கிறோம். தமிழின் அழகானஜதியை அனுபவிக்கிறோம். துன்பத்தைச் சொல்லுவதிலேயே சுகங்காண்கிறோம். ஆனால் சங்க நூல் அல்ல.

சப் ரிஜிஸ்தார் அவர்களே! போதும் போதும் வேப்பங்குழை பார்வை!

— தமிழ்த்தென்றல்

பிரமிக்கத்தக்க முன்னேற்றம்

மதுரையிலேயே மிகப்பெரிய ஹோட்டல்

ஒரே சமயத்தில்

500 பேர்கள் சாப்பிட இடவசதி அமைந்தது. பெண்களுக்கும், குடும்பத்துடன் வருபவர்களுக்கும் மாடியில் வசதியான இடம் உள்ளது. சுத்தம், நாவிற்கு ருசியுள்ள சிற்றுண்டிகள், சாப்பாடு, காபி இவைகளுக்கு இன்று பிரசித்திபெற்று

விளங்குவது.

"நாகலக்ஷ்மி பவான்"

(REGD)

பிராமணாள் காபி & சாப்பாடு ஹோட்டல்

மீனாட்சி கோவில் தெரு,

மதுரை.

N. B:- 100 மைலுக்குள்பட்ட வெளியூர்களில் டீபார்ட்டியும், குளிர்ந்தபானங்களும் அதன்தன்மை குறையாமல் நல்லவிதமாகச் சப்ளை செய்கிறோம்.

"ராஜம்"

— தமிழ்த்தென்றல்

மோகம் தீர்ந்தது

[ப. புகழேந்தி, கடையநல்லூர்.]

எதனையும் தன் பக்கம் ஈர்க்கும் தனிக்காந்தம் அழகு. குருடர்களையும் பைத்தியக்காரர்களையும் தவிர அழகைப் போற்றுதார் யாருமில்லை.

அப்படிப் பட்ட பிறர் கண்டு மயங்கும் பேரழகு படைத்தவள் கமலம்.

முல்லைச் சிரிப்பு. வில்லை நினைவுறுத்தும் வளைந்த புருவம். எழில் முகம். எண்ணங்களைப் பற்பல கோணங்களில் எழுப்பிவிட்டு வேடிக்கைப் பார்க்கும் எடுப்பானத் தோற்றம். துயரை விரட்டும் தூய கண்கள். துடியிடை. தொட்டால் துவண்டுவிடும் உடல் வளம்.

ரோசாவைச் சுற்றி முட்கள் இருப்பது போல, பல இடங்களில் அழகோடு அகம்பாவமும் சேர்ந்தே இருந்துவிடுகிறது. கமலம் மட்டும் இதற்குஎப்படிவிதிவிலக்காக இருந்துவிடமுடியும்? பிறர் அவளது அழகினை மதித்துப் பேசும்போதெல்லாம் அவளை மெய்மறக்கவைத்து, மேலும் ஒருபடி அதிகமாகத் தலைதூக்கி நிற்கும் அது !

எதும், யாரும் அழகை விரும்புவது இயற்கை. ஆனால் அழகு அழகை விரும்புவது அதைக் காட்டிலும் இயல்பு. சாத்தியம். சுலபம். பற்றிப் படரத் தயாராகயிருக்கும் கொடி பக்கத்திலிருக்கும் கழியை உடனேயே தழுவிக் கொள்ளுகிறது அது தனக்கு உற்றதுணைவன் என்ற எண்ணத்துடன். அந்தக் கழியின் உறுதியற்ற நிலையை உணருவதே யில்லை கொடி.

சந்திரனது அழகில் யாரும் குறை கண்டுவிட முடியாது. பணமும் அழகும் ஒருங்கே யிருந்த காரணத்ினால், மற்றவர்களை மதிப்பது தனக்கு இழிவு எனக் கருதினான்.

பாசம் அவனை நெருங்க பயந்து சாகும். பரிவு அவன் கண்டறியாத — உணர்ந்து தெரியாத — பொருள். "கன்றுக் கணிகலம் கண்ணோட்டம்" என்ற வரியை "இதய கீதமாக"க் கொண்டவன் அவன். தெருவில் நடந்து செல்லும் போது "குடைராட்டினமாகும்" அவனது கண்கள்.

சிலந்திக் கூட்டின் அழகில் தன்னை மறந்து சிக்கி சீரழிந்த சில 'பவுடர் பூச்சிகள்' — 'அவனை நாடி அநேகர் தவியாய் தவிக்கிறார்கள்' என்ற தவறான எண்ணத்தை

— தமிழ்த்தென்றல்

நினைவுமண்டலம்:

காமன்வெல்த் நாடுகளின் பொருளாதார உயர்வு

"தன் கையே தனக்கு உதவி. எல்லா நாடுகளின் ஒத்துழைப்பு" என்ற இரட்டைக் கோட்பாடுகள் அண்மையில் லண்டனில் நடந்த காமன் வெல்த் நாடுகளின் பொருளாதார மகா நாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

உலக பொருளாதாரத்திற்கு ஒத்துழைப்பாக இருக்கும் வண்ணம் தங்களை வலுப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதே உறுப்பு நாடுகளின் கொள்கையாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. உலக வர்த்தக அபிவிருத்திக்கு ஸ்டாலிங் செலாவணி மாற்றம் மீண்டும் ஏற்பட வேண்டுமானால், இரண்டு நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

முதலாவதாக உலகத்தின் இதர நாடுகளும் செலாவணி கட்டுப்பாடு, தீர்வைத் தடைகள் ஆகியவற்றை அகற்றுவது மூலமாக உலக வர்த்தக விரிப்பிற்கு பாடு பட வேண்டும். இரண்டாவது உலக செலாவணி நிதி நிலையம் மூலமோ அல்லது இதர நிலையங்களின் வழியோ போதுமான நிதி ஆதரவு இருக்க வேண்டும். ஆரம்பக் கட்டம் தானே ! அமெரிக்காவுடனும், ஐரோப்பிய பொருளாதார ஒத்துழைப்பு நாடுகளுடனும் இனி மேல் தான் பரந்த அளவில் பேச்சு வார்த்தைகள் நடை பெற வேண்டும். புது வருட ஆரம்பத்தில் நடக்க விருக்கும் பேச்சு வார்த்தைகளில் இவைகள் மிக மிகக் கவனத்துடன் ஆராயப் படும்.

— தமிழ்த்தென்றல்

அவனது உள்ளத்தே ஊன்றிப்போயின.

எப்படியாவது வளைத்து விட வேண்டுமென்று திட்டமிட்டிருந்த அவனை முந்துகிறாள் அவள் என்றால் தடையா சொல்லப் போகிறான் அவன் !

அழைக்காமல் கலந்து கொள்கிற விருந்தைவிட அமைதியோடு கலந்துகொள்கிற — விரும்பி வேண்டிக் கொள்கிற — விருந்தில்த்தானே "மதிப்பும் நாகரீகமும்" இருக்கின்றன. முதலில் 'பிகு' செய்து பின்னர் 'பிரிய மாட்டேன்' என்று கூறினால் தனது தந்திரம் வெளிவந்து விடாது என அவன் முடிவுகொண்டான்.

படிப்பது வெவ்வேறு இடமென்றாலும் பார்க்கில் சந்தித்து பழக்கம். ஒரு நாள் இரவு திரைப்பட நிலைய சந்திப்பு அவர்கள் இருவரையும் இணைத்து வைத்தது. 'பிரேமையில் யாவும் மறந்தோமே" என்று மனதிற்குள்ளேயே பாடி மகிழ்ந்தாள் அவள். "கோரஸ்" இல்லாத 'பம்மை' பாட்டு அது !

ஆனால் அவனோ?........காதல் இலக்கியங்களில்வரும் கதைத்தலைவிகளுக்கு ஒப்பிட்டான் அவளை வெளிப்பேச்சில். உள்ளுக்குள்ளே 'உள்ளத்து அரசியாக' அவளை உயர்த்தி வைக்க அவன் விரும்பவில்லை. அவளது அழகு எனும் வாடை மீதும் இன்பம் என்ற தேன் மீதும் வலம்வந்து உறிஞ்சி மயங்கும் வண்டானான்.

x x x x

மூங்கில் இலைமேல் தூங்கும் பனிநீர் கதிரவன் வந்ததும் காணாமல் போய்விடும் என்பதை நன்றாக அறிந்தவன் அருணன்.

கமலத்தின் சொந்த அத்தான் அவன். மணல் வீடு கட்டி விளையாடிய மழலைப்பருவத்திலேயே அவளை தன் "மன ராணியாக" ஏற்றுக் கொண்டவன். அலுவலகப் பொறுப்பாளரான அருணனது தந்தை அடிக்கடி வெளியூர்களுக்கு மாறவேண்டிய அவசியம் இருந்ததால் மாமா வீட்டிலேயே தங்கி வளர்ந்துவிட்டவன். அவளது உள்ளம் தன் உள்ளத்தின் 'மறு பதிப்பாக' வேண்டுமென்பது அவனது தணியாத ஆசை.

ஆனால் அவளோ தன்னை 'கிளியோபாட்ரா'வாக எண்ணிநடந்தாள் அவனிடம். அவன் வந்து தனக்கு 'அன்டனி'யோ, 'சீசரோ' அல்ல என்பது அவளது அபிப்பிராயம்.

சந்திரனையே மையமாக வைத்து அவள் மாறி மாறி சுற்றுவது தெரிந்தும் அருணன் அதற்காகத் தன்னைப்போட்டு அதிகமாக அலட்டிக்கொள்ளவில்லை. உண்மை அன்பு உன்னதம்பெறும் என்று நம்பினான்.

X X X X

ஊரெங்கும் கடுமையான வைசூரி நோய் பரவியது. வீட்டிற்கு வீடு தவறாமல் கோரத் தாண்டவம் ஆடியது. பட்டுப் படாமல் வந்தது கமலத்திற்கு இலேசாகப் பரவி மறைந்துவிடும் என்று எதிர்பார்த்தனர். அது அப்படி நடக்கவில்லை.

கொப்பளங்களின் காந்தல் பொறுக்கமாட்டாமல் அவள் கதறிய கோரம்! அருணனே அண்டையிலிருந்தவாறு அன்புமொழியாலும் ஆதரவு தரும் வழிகளாலும் அவளைத் தேற்றினான். ஆனால் அவளோ சந்திரன் இந்தப்பக்கம் வரமாட்டானா என்றே ஏங்கிக் கிடந்தாள். இரண்டு மூன்று முறைகள் வேலைக்காரப்பையனைச்சொல்லியும் அனுப்பினாள். பகலும் இரவும் பற்பல அலுவல்களில் மாட்டிக் கொண்ட அவனுக்கு இதற்கு ஓய்வேது? ஒழிச்சல் ஏது?

X X X

மூன்று மாதப் படுக்கைக்குப் பின் அன்றுதான் வெளிக்கிளம்பினாள். பார்க்கில் சந்திரனைப் பார்த்து பேச்சுப்பேச்சென்றுப்பேசி அவனைத் திணறவைக்க வேண்டுமென்று ஒரே துடிப்பு.

அவள் வந்தும் வெகு நேரமாகிவிட்டது. பூங்காவிலும் கூட்டம் வரவரக் குறைந்து கொண்டே போயிற்று. வீதிவிளக்குகள் எரியத் தொடங்கின. அந்த வெளிச்சத்தில் அங்கொருவர் இங்கொருவராகச் சிலர்மட்டுமே இருந்தது தெரிந்தது.

"இன்னும் வரக்காணமே...... ......?" என்ற ஏக்கம் அவளது சிந்தனையை சோகத்திடலில்போட்டு புரட்டி எடுத்தது.

பின்புறம் கனைக்கும் குரல் கேட்டுத் திரும்பினாள்.

"வா சந்திரா..........! அடேயப்பா! உன்னைப் பார்த்து

— தமிழ்த்தென்றல்

எவ்வளவு நாளாச்சு......" என்று கூறியபடி எழுந்துநின்றாள் கமலம்.

"வர—பேச—உட்கார—எனக்கு நேரம் போதாது கமல்!........வேறு வேலை இருக்கிறது........"

"அப்படி என்னவேலை சந்திரா! என்னை விட்டுவிட்டு........?" பேசியவள் அலைமோதும் ஆசை மனதினால் அவனது இடக்கையை வலக் கையால் பின்னிக் கோர்த்தாள்.

சந்திரன் மெதுவாக அவளது கையை விலக்கினான்.

திடுக்கிட்டாள்!

"எனக்கு ஒன்றும் புரியவில்லையே........!" சோகம் தொனியில் கரகரத்தது.

"எல்லாம் புரியும் கொஞ்ச நேரத்தில். உனக்கு வைசூரி என்றவுடன் உன் அழகு இனி காலிதான் என்பதை அன்றே முடிவு கட்டி விட்டேன்...........இனி என்னை நினைத்து........?"

"அப்போ நான் வந்து அழகில்லையா..............?"

"ஆமாம்! இனி உன் அழகை கடவுள் தான் ரசிக்க வேண்டும்..... ....!"

பேசினவன் சடக்கென்று திரும்பி நடந்தான்.

சிந்தனை சுழன்றது. கண்கள் பஞ்சடைத்து..............

வேதனையோடு நடந்தவள் வெடுக்கென கல்தட்டி விழுந்தாள். ஆனால் கீழே விழாதபடி...........!பிடித்துத் தூக்கி அமைதிப் படுத்தினான் அருணன்.

"அத்தான் — நீங்களா.....?"

"நானே தான் கமலம்.....!"

எதுவும் கூற முடியாமல் விசித்து விசித்து அழுதாள்.

"எல்லாம் எனக்குத் தெரியும் கமலம்! வீணாக மனதை அலட்டிக் கொள்ளாதே. நீ எப்படியிருந்தாலும் என்றைக்கும் உரியவன் நான் தான்........." பேச்சின் குரல் தளதளத்தது.

"ஆமாம் அத்தான்! வெளிமய்க்கு வெறும் வேடம் தான்! அந்த மோகம் தீர்ந்தது இன்றோடு. உண்மை அன்பின் உன்னதம் அறிந்தேன்."

இப்படிக் கூறினவள் உள்ளத்திலும் உடலிலும் பரவிய தளர்ச்சியால் அருணன் மார்பகத்தில் சாய்ந்தாள்.

காளிமார்க் சோடாக்கள்

விருதுநகர்: திருநெல்வேலி: மதுரை.

— தமிழ்த்தென்றல்

வரலாறு :

காதல் பறந்தது!

மலர் : "உமர்கய்யாம்"　　　　மணம் : "சேகர்"

உருண்ட முகம். ஒளிவீசும் கண்கள். ஆனால்......மருண்ட பார்வை அவைகளில்!

திரண்ட தசை. திரளை திரளையாக திண்டுகள். ஆனால்........... விரிந்து படர்ந்த மார்பகம்!

இரவும் பகலும் ஒன்று. வெயிலும் நிழலும் ஒன்று. மழையும் பனியும் ஒன்று. புயலும் தென்றலும் ஒன்று.

உழைப்பின் ஊரும் பெயரும் அவனேதான்.

பரந்த வெளியில் திறந்த உடலோடு பாடுபட்டான். பகலில் மேய்ச்சல். இரவில் காவல்.

கொட்டும் பனி என்றாலும்—விரட்டும் மழை என்றாலும்—மருட்டும் புயல் என்றாலும்—ஒரே ஒரு கம்பளிப்போர்வையுடன் உலகத்தில் உழைத்தான். வாழ்ந்தான். வளர்ந்தான்.

முரடன் — முன்கோபி — ஆனால் உழைப்பாளி—திடசாலி இவைகளுக்கு அம்மலைப்பகுதியில் மாறுபெயர் 'நூரலி'.

அறுபத்தாறு செம்மறிகள் அவன் பார்வையில். அவைகளை ஊட்டி வளர்க்கும் உழைப்பாளி—ஆட்டிப்படைக்கும் அய்யன் — கட்டிக்காக்கும் கர்த்தன்—அவனே!

x　　　x　　　x

ஆப்கானிஸ்தானின் —(அசுவகினி)— அணிகலம் —'மசிகம்'. மலைக்கோட்டை. மன்னன் மகள் 'அயோசா'.

கற்கண்டிற்கு தாயார் கரும்பு! கணுவில்லாதகரும்பு அயோசா!'

அழகி—அல்லிமலர்-அருஞ்சுவை விருந்து-அந்தப்புரப்பேழை.

காட்டுப்பாதை. கனகமணிப் பல்லாக்கில் போம்போது, வரும்போது 'கோசா'விற்கு என்ன அவசியம்?

— தமிழ்த்தென்றல்

பரபரக்கவுமில்லை. பயப்படவுமில்லை. கருத்திற்கினியதைக் கண்டாள். அவனும் அவ்வழியே.

அவளே இப்படி மறுக்க மறுக்க பார்க்கிற பொழுது, இவனுக்கென்ன கண்ணில்லையா? இல்லை. கருத்தில் தான் உணர்வில்லையா?

காந்தச்சிலை பசக்கென்று பற்றிக் கவ்வியது, இந்தக்கரடுமுரடான "எஃகை!"

சிந்தனையில் ஊறிய உணர்ச்சி உடலெங்கும் ஊர்ந்தது. உவகை வெள்ளத்தில் படகோட்டியது. இதற்கு இரை இவர்கள் இருவரும்!

x　　　x　　　x

வினாடிகளை ஓட்டி — நாழிகைகளை விரட்டி — நாட்களை உருட்டி — மாதங்களைத் தள்ளி — வருடங்களை நகட்டி காலம் முன்னேறியது உலக நிகழ்ச்சிகளில் பற்பல வர்ண கோலங்களை தீட்டி அலங்கரித்தவாறு.

வரலாற்று ஏடுகளிலே என்றைக்கும் மாற்றானுக்கு வளைந்து கொடுக்காத 'மசிகம்' இன்று தலை தாழ்ந்ததே. "ஜின்" மலைக் கோட்டை வீரர்கள் தம் கையில் "தன்மானம்" பறி போனது.

கொற்றவன் "ஜாபர்" கொலையுண்டான்.

இளவரசி சிறை பிடிக்கப்பட்டாள்.

பூனையின் கால் இடுக்கியில் சிக்கிக் கொண்ட பின்.........?

x　　　x　　　x

பட்டாலான பளபளத்த 'டேரா' — பஞ்சணையால் — பரவிக் கிடந்த மலர் வகையால் — குறுகுறுத்த மஞ்சளை — பலத்தால் பரிசு பெற்ற வீரன் — பக்கத்தில் மதுரசம் — படர்ந்து பரவிய நறுமண தூபத்தின் 'நெடி'.

கைதியை கொண்டு வந்தனர் காவலாளிகள்.

"அயோசா! என் அன்பே............!"

ஏறிட்டுப் பார்த்தாள். வில்லைப் பழித்த அப்புருவங்கள் அப்படி ஏன் ஏறி ஏறி எகிறிக்குதிக்கின்றன?

"ஆ! நீயா..............?"

"ஆமாம் அயோசா! அதே ஆட்டிடையன் தான்!"

— தமிழ்த்தென்றல்

"போர் அணி கண்டேன்! போர்க்களம் கண்டேன்! போர் வெற்றி கண்டேன்! போர்க்கைதியாக என் காதல் கனியையும் கண்டேன்!............."

"உண்மையில் நீங்கள்..............வைராக்கிய........!"

"அடடா! அப்படியெல்லாம் வேண்டாம் அயோசா! உன்னை பொறுத்தவரை அன்றைக்குப் போல் இன்றைக்கும் என்னை "நீ" என்றே கூப்பிடு. அதுவே மணக்கும். அதுவே இனிக்கும். என் ராணி எனக்கு பற்பல மலரினம் கொண்ட "பூந்நடலை!" திகட்டாமல் தித்திக்கும் "தீந்தீவி!"

x z x

கைதிக்கு விடுதலை!

ஏகபோக உபசாரம் — ஏவலுக்கு ஆட்கள் — எல்லா உத்திரவுகளும் நிறைவேற்றப்பட்டன உடனுக்குடன்.

உடையாலும் — உன்னத அணியாலும் — உடலெங்கும் அலங்காரம் — ஒயில் ததும்பும் நடை — ஒய்யாரப்பார்வை.

ஆமாம்! முதல்இரவு காணப்போகும் 'முழுநிலா' அல்லவா அவள்!

கால்கள் தான் கடுகடுத்து இருக்குமோ என்னமோ? வளைய வளைய அந்த டேராவிற்குள் சுற்றிச்சுற்றி வந்த 'புறாக் குஞ்சு' படக்கென்று வாரி எடுத்துப் போட்டுக் கொண்டது இந்த வடிவழகுப் பேழையை விரிந்து கிடந்த தனது மார்பகத்தினிடை வெளியில்.

மாறி மாறி மதுக்கிண்ணங்கள் காலியாகின. காதல் வெறி கொண்டவன் கனிரசப் போதையில் எங்கெங்கோ கனவு லோகத்தில் பவனி வந்தான்.

கிள்ளை மொழி பேசிய அவளோ இன்னும் அவனை விட்டு விடவில்லை. கிண்ணம் கிண்ணமாக...........போதை தலையின் உச்சி முகட்டைத் தொட்டு முத்தமிட்டது.

"இன்பக்கனவை ஏனோ கலைக்கிறாய்?" என்ற தோரணையில் என்னென்னமோ உளறிக்கொட்டியது வீரத்தின் மமதை!

அவள் பேசினாள். ஆனால் அவனுக்கோ எங்கோ எறும்பு ஊறுவதைப் போல பட்டுப்படாமல்........!

— தமிழ்த்தென்றல்

"ஊரைமறந்து — நாட்டை மறந்து—பரம்பரை பண்பாட்டை மறந்து — சொந்தத்திற்காக — சுயநலத்திற்காக என்னை அடைவதற்காக — நாட்டின் துரோகியானாய். நல்லவருக்கு நச்சானாய். அப்பாவை அலற அலற கொன்றாய்..............."

பேசினவள் கையில் 'பிச்சுவா' மினுமினுத்தது. மீண்டும்மீண்டும் சொருகினாள். இறுதியாக ஒரேயடியாக புதைத்தே விட்டாள் அவனது விரிந்த உளளத்திடலில்.

குருதி வெள்ளத்தில் புரண்டான். குற்றுயிராகத் தத்தளித்தான்.

ஏதோ சிற்சில விநாடிகள் தன்னை உணர்ந்தான். பரிதாபமாக மிரள மிரளப் பார்த்தான். முக்கி முணங்கினான்.

பலி கொண்டாள் — படபடத்த கோபமும் சடசடத்து ஓய்ந்தது சற்றே நேரத்தில்.

x x x

அமைதி கண்டாள். ஆனால் இப்பொது ஏனோ இப்படி அழ ஆரம்பித்து விட்டாள்!

"முழுக்க உன்னை என் உயிர்மணியாகக் கருதினேன். அந்த மலைச்சாரல் பக்கம் உன்னை காண முடியாமல் போகவே அப்பாவிடஞ் சொல்லி விசாரிக்கச் சொன்னேனே. அரண்மனையில் வேலைக்குச் சேர்த்து விரனாக்கி..........! எப்படி எப்படியோ ஆசைப்பட்டேன். ஆனால் நீ என்னவென்றால் நாட்டையே மாற்றானுக்குக் காட்டிக் கொடுத்து விட்டாய். இப்பொழுதும் கூட உன் அழகு என்னை என்ன மயக்கு மயக்கிறது! நீ என் காதலன் தான்! ஆனால் என் காதலன் துரோகியாக இருக்க நான் எப்படி விரும்புவேன்? நாட்டிற்கு — அப்பாவிற்கு — நான் செய்ய வேண்டிய கடமை என்னவது? கடமைக்காக பலி கொண்டேன்! காதலுக்காக—'காதலன்' போனபின் —சாவை வரவேற்கிறேன்..........."

அதே பிச்சுவாவைப் பிடுங்கி தனது வயிற்றிற்குள் சொருகிக் கொண்டாள். துடிதுடித்தாள். உருண்டு நகர்ந்தாள்.

உயிர் மன்னனை இறுக அணைத்துக் கொண்டாள். 'இச்' என்ற இனிமை ஒலி எதிரொலித்தது அந்த டேரா முழுக்கவும்.

கடமைக்காக 'துரோகி'யைக் கொன்று 'காதலுக்காக' — காதலன் மாண்டபின் வாழ்வு வேண்டாம் என்ற '**பதிபக்திக்காக**' — தன்னையே மாய்த்துக் கொண்ட இந்த பெண் இனத்தின் வீரமாணிக்கத்தை கவிதையில் புகழ்ந்து உரைக்கின்ற "**உமர்கய்யூம்**" முடிவு இது தான்:— "**கடமையின் முன் காதல் பறந்தது!**"

— தமிழ்த்தென்றல்

நாடக நினைவு: ரசிக சீமானே!

தரம் பார்த்து தரம் சேர்த்து — ஒழுங்காக ஒன்றுபடுத்தி — ஒத்திகையில் உயிரை விட்டு— கதைகளை ஓட்டுவதே இன்றைய நாடக திரைப் படபிடிப்பு முறை.

ஆனால் அன்றைய நாடக அரங்கிலே.........!

உதிரியாக — ஒவ்வொரு துறையிலும் தனித்தனியாக – பெயரும் புகழும் கொண்ட நடிகர்களை அன்றைக்கென்று ஒன்று சேர்த்து நாடகம் அமைத்தனர். இதில் பெரிய பெரிய தலைகளை இழுத்துக் கட்டி சேர்ப்பதில் தான் கண்ட்ராக்டர் திறமை இருக்கும். அப்பொழுது தான் கேட் வசூலும் ஏககெடுபிடியாக குவிந்து பொங்கும்.

நடிகர்களுக்குள் மோதுதல் — லடாய் — ஏற்பட்டால் தான் நாடகம் நல்ல ரசிப்பிற்கு வந்த மாதிரி.

கோவலன் நாடகம். எம். ஆர். கோவிந்தசாமி கோவலன். அனந்த நாராயணன் மாதவி.

"எங்கென்னை அழைக்கிறாய் இயம்பு மங்கையே!"

"என் வீட்டுக்கு..............."

"உன் வீடு......நீ......யார்?"

எம். ஆர். சண்டைக்கு ஒரு கிளப்புகிளப்பி விட்டார். ரசிகர்களோ கைதட்டி.........!

"இது தெரியாதா.........நான் தாசி!"

"அப்படியென்றால்விபரம்என்ன?" இது எம். ஆர். போட்ட கேள்வி.

"இன்பம் அளிப்பவள். இனிமை தருபவள். இரவுபகலும் எந்நேரமும் உடன் இருந்து........." இப்படி என்னென்னமோ விளக்கங்கள்.

ஆனால் எம். ஆர். ஒப்பவில்லை. "இது சரியில்லை. எந்தப் பெண்ணும் இதைக் கொடுப்பாளே! என் மனைவி தரமாட்டாளா என்ன?"

அனந்தநாராயணன் அசந்துபோனார் விளக்கம் கூறிக்கூறி.

"எங்கே கோவலனே விளக்கம் கூறட்டும்" என்றனர் ரசிகர்கள்.

"தா.........தா........." என்று சுயமாகப் பாட்டை ஆரம்பித்தார் எம். ஆர். இது உடனடி பாடல்தான். பொருள் இருந்தது. பொருத்தமும் இருந்தது.

கொடுக்ககொடுக்க இனிமைகாட்டி 'இதைத்தா, உதைத்தா' என்று வாங்குவாய். கையில் பசை இல்லை என்றவுடன் "சீ.........சீ" என்று தள்ளுவாய்.

ஆகவேதான் 'தாசி'.

ரசிகசீமான்களை மகிழ்ச்சிப்பெருக்கில் தள்ள — நுண்ணறிவால் — விவாதம் கட்டிப்பொருத்தமாகப் பொருளும் கூறிய எம். ஆர். தம் திறமைதான் என்னே!

"தேனீ".

— தமிழ்த்தென்றல்

ரெஜினா
மூட்டைப் பூச்சி
பவுடர்



நித்திரைக்குப் பாதுகாப்பு கொடுக்கிறது. ரெஜினா மூட்டைப்பூச்சிப் பவுடர் எங்கும் ஏராளமாக விற்பனையாகிறது.

தயாரிப்பவர்:

G. பழனியப்ப முதலியார், மதுரை.

எலெக்டிரிக் மிஷினில் தயார் செய்த பியூர் காபியும், சிக்கரி கலந்த காபியும் 1, 3, 5, 7, 20 பவுண்டு டின்களில் சகாயமான விலைக்குக் கிடைக்கும்.

எட்வர்ட் காபி ஒர்க்ஸ், காளியம்மன் கோவில்தெரு, விருதுநகர்.

கரன்சிச் சுரங்கம்!

ஆதாரம்: "சேர்லாக் ஹோம்ஸ்"

கதை: "ராஜன்"

"இப்ப வந்து விட்டுப் போன ஆளுக்கு நம்மால் முடிந்த உதவி செய்யத் தான் வேண்டும்! ஆனால் உன் முகம் ஏதோ ஆழ்ந்த சிந்தனையிலிருப்பதாக.........................."

"காட்டுகிறது என்பதை நீ கண்டுவிட்டாயாக்கும். இருக்கட்டும்! சேகர் இருக்கட்டும். இருந்தாலும் கொலை—கொள்ளை—மோசடிக்கலை - இப்படிப்பட்ட துறைகளில் மட்டும் அரசாங்கத்திற்கும் ஏதோ அண்டி வந்தவர்களுக்கும் துப்புத்துலங்குவதில் என்னமோ நமக்குக் கொஞ்சம் அனுபவமிருக்கிறது என்பதற்காக..............."

"அடடா அப்படி எதுவும் 'ரெகடிவ்வாக' முடிவு கிடிவு கட்டி விடாதே துரை. பாவம்! அந்த மனுசன் அப்படி துடியாய்த்துடித்ததைப் பார்த்தபிறகு நீ வந்து இப்படி நினைத்தால்........"

"நான்வந்து மானிட வர்க்கமில்லை — எனக்கு இரக்கச்சித்தமே இல்லை. சமுதாயத்தில் வாழ தகுதியில்லை" என்று இப்படியெல்லாம் முடிவுகட்டி விடுவாய் போலும்."

"சுற்றிச் சுற்றி எனது "அனுமான அறிவு"த்திறனை சோதிப்பதாகத்தான் உனது பேச்சு சுற்றுகிறது. வெறும் அடிதடா காரியங்களில் ஈடுபட்டுப்பட்டு எனக்கென்னமோ ஒரே சலிப்பாகத்தான் இருக்கு. இது வந்து உண்மையாக ஒருவருக்கு மட்டுமல்ல, எதிர்பாராத மற்றுமிருவருக்கு உதவியாகிறது. சிந்தனையின் சிறப்பிற்கு நல்ல வழியாகவுமிருக்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக இது நல்ல ரசிப்பான பொழுது போக்காகவும் இருக்கிறது."

"ஆனால் முழுசா 'சிவில் மேட்டர்' என்பதினால்தான்........."

"அதனால்தான் நாம் அவசியம் ஈடுபடவேண்டுமென்று நானும் கூறுகிறேன். நாமெல்லாம் இந்த கிரிமினல் இழவுகளில் மாட்டி மாட்டி எனக்கென்னமோ ஒரே அலுப்பாய்தான் போச்சு. நமக்கொரு மாற்றமாகவும் இது இருக்கட்டும் என்றுதான் பார்க்கிறேன்........."

"நல்லா பார்........பார்த்துப் பகுத்துப் பதனமாய் செயலாற்று. இதுதானே துப்பறியும் துறையின் பாலபாடம். ஆனால் ஒன்று. எதையும் 'சடசட'வென்று பொரிந்து

— தமிழ்த்தென்றல்

தள்ளும் சுபாவம் ஆந்திரர்களுக்கு உண்டு. பிறரிடம் ஏதாவது உதவி வேண்டி போகிறபொழுது தமிழனுக்கு கூச்சம் கூடவே இருக்கும். இது தமிழன் பண்பு. ஆனால் இந்த ஆந்திரவாடு எவ்வளவு சரளமாக நம்மிடம்பேசினாலும் இடையிடையே கூச்சப்பட்ட மாதிரியாகவே பேசினான். இதுதான் எனக்கு........"

"ஒரு மாதிரியில்லை, இரண்டு மாதிரியாகக்கூட உனக்குப் படும். துப்பறியும் இலாகாவின் உயிர்நாடியாக எதையும் சந்தேகம் என்னும் தராசில் எடைபோட்டுஎடைபோட்டு பழக்கப்படுகிறதொந்தரவுதான் இப்படி..........அவனது சொந்த ஊர் ஏழுமலையான் குடியிருக்கிற 'திருப்பதி' என்றுதானே சொன்னான். நிலப்பரப்பை முன்வைத்துபார்க்கிற பொழுது அதுவும் தமிழகம்தானே. ஆகவே அங்கிருக்கிற ஆந்திரர்களுக்கும் இந்தப் பண்பு வந்திருப்பது குற்றமா என்ன........?"

"சபாஷ் சேகர்! அரசியல் அறிவைக் கொண்டு அருமையான சமாதானம் கூறிவிட்டாயே. இருந்தாலும் அவனுக்குநாம் உதவிசெய்ய வேண்டுமென்றால், முதலில் அவன் குறிப்பிட்ட 'சங்கரிதுர்க்கத்திற்கு' போக வேண்டும். இறந்துபோன 'ரெங்ககிரி'யின் உயிலைச் சரிபார்க்க வேண்டும். "மிட்டாதாருக்கு குழந்தைகுட்டி, உற்றார் உறவினர் யாருமில்லை. ரொக்கம் நிலம்புலன் பத்து லட்சத்திற்கு தேறும். சென்ற மாதம் அவர் இறக்கிற பொழுது வயது 30. இந்த வருடம் இதே

— தமிழ்த்தென்றல்

வயதுள்ள அவரது "எஸ்.ரெங்ககிரி" என்ற பெயருள்ள மூவர் இருந்து அவர்கள் மூவரும் ஒன்றுபட்டால் சொத்தை மூன்று பாகங்களாக எடுத்துக் கொள்ளலாம். அப்படியில்லா விட்டால் சொத்து பூராவும் ஏழுமலையான் உண்டியலைச்சேரும்" இந்த உயில் ஒரு போட்டி பந்தயம் போல தான் இருக்கின்றது."

"அவன் போட்டியில் ஜெயிப்பதை லட்சியமாக பேசவில்லையே துரை. "இப்போது உண்டியலில் சேருகிறது போதாதா? இதுமா சேர வேண்டும். இது கிடைத்தால் ஆந்திராவில் செட்டி நாட்டில் ஏற்பட்டிருக்கிற விஞ்ஞான கல்லூரியைப் போல ஏற்படுத்த பாதியைக்கொடுக்கப் போகிறேன்" என்றெல்லவா கூறுகிறான். நல்ல சிந்தனை. அவனும் கஷ்டப்பட்டு எல்லா பத்திரிகைகளிலும் விளம்பரம் செய்திருக்கிறான். ஒவ்வொரு நகரிலும் நகராண்மை கழகங்களை பிறப்பு, இறப்பு ரிஜிஸ்தார் அலுவலகங்களை முற்றுகையிட்டு விபரம் கேட்டிருக்கிறான். நல்லவேளையாக இவனது பெயரும் வயதும் அதுவாக சரியாக இருந்ததால் இந்த ஆசை அதிகமாவது இயல்புதானே. மேலும் இங்கு புரபசர் எஸ். ரெங்ககிரி இருப்பதையும் அவருக்கும் அதே வயது என்பதையும் கண்டுபிடித்து விட்டான். அவரையும் பார்த்திருக்கிறான். இனி நம் உதவியை நாடுவதெல்லாம் மூன்றாவது மனிதனைக் கண்டுபிடிக்கத்தானே. கஷ்டம்தான் என்று உனக்கு உள்ளூர பயம

இருக்கிறது. அப்படியில்லையா துரை ....?"

"அதில்லை சேகர்! ஆந்திரப் பத்திரிக்கைகளிலும் விளம்பரம் செய்திருக்கிறான். எல்லா முனிசிபல், தாலுகா ஆபீசுகளுக்கும் எழுதிக் கேட்டிருக்கிறான். இதைவிட நாம் என்னசெய்ய முடியும்? அதுதானே தலைவலியாயிருக்கிறது......!"

"இப்படி நாம் தட்டிக்கழித்துப் பேசினால் நாம் துப்பறிகிறோம்—மக்களுக்குச் சேவை செய்கிறோம் — என்று கூறுவது எப்படிப் பொருந்தும்? புரபசரைக் கண்டு பேசி அவர் மனதையும் ஆவலையும் தெரிந்துகொண்டு பின்னால் யோசித்தால் வழி தெரியும் என்றுதான் நினைக்கிறேன்.'

"அதுவும் சரி தானப்பா! அந்த டைரியில் தான் அவன் கூறிய விபரத்தை எழுதினேன். எடுத்துப் பாரப்பா........"

"என்னத்தைப் பார்க்க? எனக்குத் தான் நல்லா நினைவிருக்கிறதே அந்த விலாசம். "நெம்பர் III வெங்கிடகிரி மெயின் லையன். புரசபாக்கம்" சரி. இப்படியே கிளம்ப வேண்டியது தான்......டிரைவர்... ...."

X X X

புரசபாக்கத்தை நோக்கி "செவர்லெட்" சிறகடிக்காமல் பறந்தது.

X X X

துரையும் சேகரும் முதலெடுப்பிலே நல்ல வரவேற்பை எதிர் கொண்டனர். புரபசர் எஸ். ரெங்ககிரி இந்த அபூர்வ போட்டியில் ஆழ்ந்த அக்கரை கொண்டவராகக் காணப்படாவிடினும், கல்லூரி நிதிக்கு அப்பணம் உதவப்போகிறதால் தனக்கும் இதில் பரிபூரண சம்மதமாகவே இருந்தார்.

மூன்று மாதங்களுக்கு முன்பு வரை அவர் கிறிஸ்துவக் கல்லூரிப் பேராசிரியராகத்தான் பணியாற்றினார். விஞ்ஞானத்துறையில் நல்ல தேர்ச்சியும் அக்கறையும் மிக்கவர். தற்பொழுது கல்லூரி வேலையை விட்டுவிட்டு கலைஉள்ளம் கொண்டவராக இருந்ததால், நாள்முழுக்க விஞ்ஞான நுட்பங்களை ஆராய்வதிலும் கலைப்பொருள்களை சேகரித்து பாதுகாப்பதிலும் தனது வாழ்நாட்களைக் கழித்து வருகின்றார்.

அசல் புஷ்பராகங்கள் கிடைக்குமிடம்:—

சிவ. ப. ராஜரத்தின நாடார் & பிரதர்ஸ்,
இரத்தின வியாபாரம், விருதுநகர்.

பிராஞ்சுகள்:— மதுரை & தூத்துக்குடி.

ஆர்டருக்கு கியாரண்டியுடன் நகைகள் செய்து தரக்கூடும்.

— தமிழ்த்தென்றல்

இந்த விபரங்களை மிகமிக பெருமையோடு கூறிக்கொண்டதுடன் தான் சேகரித்து வைத்துள்ள கலைப்பொருள்களை அவர்கள் பார்க்கும்படியும் கேட்டுக்கொண்டார்.

இதுசமயம் அவர்கள் யாரும் எதிர்பாராதவிதமாக அபூர்வ நிகழ்ச்சி ஒன்று அங்கே நடந்து விட்டது.

இந்தப் போட்டிப் பந்தயத்தின் சூத்திரதாரி—பிரதம நடிகன் எஸ். ரெங்ககிரி விடுவிடுவென்று வந்தான். ஆனால் அங்கே துப்பறியும் துரையும் அவனது தோழனும் இருந்தது அவனுக்கு மகிழ்ச்சியாகவே இருந்தது. இது அவனது முகபாவனையில் தெரிந்தது.

தனது வேண்டுதலை நிறைவேற்ற இவ்வளவு விரைவாக அவர்கள் நடவடிக்கை எடுத்திருப்பதைக் கண்டு அவன் மகிழ்ச்சியடையாமல் எப்படி இருக்க முடியும்?

"சற்று முன்புதான் எனக்கு இந்த நல்ல செய்தி வந்தது" என்று பரபரக்கக் கூறிக்கொண்டே கடிதத்தை துரையிடம் கொடுத்தான்.

விசாகப்பட்டணத்திலுள்ள பிரபல தொழில் அதிபராக அதே வயதில் மற்றொரு 'ரெங்ககிரி' இருப்பதை அவ்வூர் பிறப்பு-இறப்பு ரிஜிஸ்தார் தெரிவித்திருந்தார் அதில்.

ஆக முயற்சி திருவினையாகி விட்டது அல்லவா?

— தமிழ்த்தென்றல்

சிற்பக்கலையின் சிறப்பு:

"ரேமாண்ட் பாலியர்" என்ற சுவிசு நாட்டு போட்டோ கிராப்பரின் சேகரிப்பான இந்தியநாட்டு ஆலயங்களிலுள்ள சிற்பங்களைப் பற்றிய நூறு புகைப்படங்களைக் கொண்டகண்காட்சி "ஆபர்தீன் ஆர்ட் காலரியில்" புதுவருட ஆரம்பவாரத்தில் நடைபெற்றது.

ரசிகர்கள்கூட்டம் இப்பகுதியில் ஏராளமாக ஒவ்வொரு நாளும் குழுமி இருந்தது!

நண்பர்கள் இந்தநடிகசாலியைப் பாராட்டினர் அவனது வெற்றிக்காக.

ஆனால் அவனோ மற்றொரு கடிதத்தைக் காட்டி தனக்கு அவர்களது உதவி அவசியமென்று கேட்டுக் கொண்டான். அவனது சொந்த ஊரில் 'தம்பிக்கு சரியில்லை' என்று தெரிவித்து 'உடனே புறப்பட்டுவரும்படி' கேட்டுக்கொண்டிருந்தது அப்பா எழுதிய அன்றைய தபாலில் வந்த அந்தக் கடிதம். ஆகவேதான் அன்றே ஊர் போகவேண்டியதிருக்கிறதென்றும், மூன்றாவது நபர் பிரபல தொழில் அதிபராக செல்வம் மிக்கவராக இருக்கிறதால் தோழர்களில் யாராவது ஒருவர் போய் அவரது சம்மதம் பெற்றுவர வேண்டுமென்றும் வேண்டிக்கொண்டான்.

"ஏன்? எப்படியோ காரியம் முடிந்துவிட்டது. பத்து நாள் முன் பின்னடக்கட்டுமே. ஊருக்குப் போய் விட்டு பின்னால் அங்கு போகிறது தானே."

துரை சர்வ சாதாரணமாகப் பேசினார் இப்படி.

"மிஸ்டர் தாங்கள் கூறுவது ஒருவகையில் பொருத்தமாகத்தான் இருக்கிறது. என்றாலும் விசாக் அன்பர் பெரிய தொழில் அதிபராக இருப்பதால், போய் பேசுகிறவரும் தகுதியுடையவராக இருக்கவேண்டாமா? உலகம் வெளிமயக்கில் தானே சிரத்தை காட்டுகிறது......"

"ஆமாம் ஆமாம்! புரபசர் போனால் மிகவும் பொருத்தமாக இருக்கும். இதுதான் நல்லது என்று ...." சேகர் முதல் 'ரெங்ககிரி' யின் பிரரேபணைக்கு உருவம் கொடுத்தான்.

"என்றாலும் இதைவிட தங்கள் நண்பர் துரை போனாலும் சரியாகத் தான் இருக்கும்."

ஆனால் இதை துரை ஆதரிப்பதாக இல்லை. "எப்படியும் அன்பர் புரபசர் போய்வரட்டும்" என்றான்.

எல்லோரும் வலியுறுத்துகிற பொழுது புரபசர் ஒரேயடியாக தட்டிக்கழித்துவிட முடியுமாஎன்ன? அவரும் அன்றே விசாகப்பட்டணம் கிளம்புவதாக ஒப்பிக்கொண்டார்.

ஒருவருக்கொருவர் அன்பு மொழிகளால் வழியனுப்பிக்கொண்டனர்.

தனது சேகரிப்பான கலைப் பொருள்களையும் விஞ்ஞானப்பொறிகளையும் ஓய்வு நேரத்தில் வந்து பார்த்து ரசிக்கும்படியும் அவர்களது கருத்துரைகளை தெரிவித்து தன்னை உற்சாகப் படுத்தும்படியும் புரபசர் துப்பறியும் அன்பர்கள் துரையையும் சேகரையும் கேட்டுக் கொண்டார்.

X X X

அந்தி நேரத்தின் செவ்வொளி மெல்ல மெல்ல வெளிறி வானத்தே அதுபூத்தயிடமே தெரியாமல்மறைய தொடங்கியது. சேகருக்கு அன்று என்னமோ ஒரே சோம்பல் பொழுதாகவே இருந்ததாகநினைப்பு. ஆனால் துரையைப் பொறுத்தவரை அப்படிச் சொல்லி விட முடியாது.

ஏதோ கோமாளித்தனமாக அந்த ஆந்திரவாடு வந்தாலும் ஒரு வகையில் காரியம் முடிந்தது பற்றி மகிழ்ச்சி தான் என்றாலும், அவன் ஏன் அப்படி ஏதோ பெரிய சிக்கலை ஆராய்வது போல் 'உம்' என்று

> **புகழைப் பற்றி :**
>
> புகழ் வீரச்செயல்களின் நறுமணம். —சாக்ரட்டீஸ்.
>
> தன்னலமற்ற செயலே புகழுக்கு முதற்படி.
> —பிளாட்டோ.
>
> புகழ் நீ எடுத்துக்கொண்டது. பண்பு நீ கொடுப்பது.
> —பயார்டு டெயிலர்.

— தமிழ்த்தென்றல்

இருக்கிறான் என்பதுசேகருக்குவிளங்காமல் இருந்தது.

எந்த பேச்சையாவது இழுத்துப் போட்டுக் கொண்டு நச்சரித்து விடும் துரை இப்படி ஒரே மௌன மேதையாக இருந்தால் இன்னும் குறைப் பொழுது என்றாவது?

"அது சரி துரை! இப்படி வெத்து பொழுது போக்குவதற்கு அப்படியே புரபசர் வீட்டுப் பக்கம் போய் வந்தால் என்ன? கலைப் பொருள்களை பார்த்த மாதிரியாகவுமிருக்குமில்லையா?" என்றான். "நானும் அதைத் தான் யோசித்துக் கொண்டிருக்கிறேன். சரி. கிளம்பலாம்" இப்படிக் கூறிய துரை மேலும் தாமதிக்கவில்லை.

அவர்கள் இருவரும் புரபசர் வீட்டை நெருங்குகிற பொழுது வேலையாள் கடை வீதிக்குக்கிளம்பி கொண்டிருந்தான்.

கலைப்பொருள்களையும் விஞ்ஞானப் பொறிகளையும் காண இவர்கள் வந்திருப்பதைக் கேட்டவுடன் எல்லாவற்றையும் சுற்றிப் பார்க்கும்படிக் கேட்டுக் கொண்டான். அவனும் தங்கி விட்டான் அங்கேயே.

சிற்பப் பகுதி, புத்தக அரங்கம், சித்திரச்சாலை, இப்படியாக ஒவ்வொரு பகுதியாகப் பார்த்து வந்தனர்.

விஞ்ஞானப் பொறிகள் உள்ள பகுதி தான் மிக மிக பிரமிக்கத்தக்கதாய் அமைக்கப்பட்டிருந்தது.

"மிகமிக அபாரமான........" பேசிய சேகரின் [illegible]ாய் வார்த்தை முடியவில்லை. கா[illegible]யில் ஏதோ நறுக்கென்ற ஓசை கிளம்பி எதிரொலித்தது. அதேசமயம் அவர்களுக்கு வலது பக்கத்தில் கண்ணாடி பீரோவிற்குள் நிறுத்தப்பட்டிருந்த முழு மனித எலும்புக்கூடு 'மடமட' வென்று ஆடியது.

வேலையாள் 'கீச்' என ஒரே கத்துக் கத்திவிட்டான். சேகருக்கு வியர்த்துக் கொட்டியது. பின்னிட்டு நகர்த்தான். மீண்டும் அதே ஓசை. எலும்புக்கூடு இத்தடவைஏகப்பட்ட ஆட்டம் போட்டு விட்டது.

துரை ஏதோ நினைத்தவனாய் விருட்டென்று சேகரை நின்ற இடத்திலிருந்து நகர்த்தி விட்டு தரையில் காலை வைத்தான்.

தரையோடு தரையாக அங்கே ஓர் பொத்தான். இங்கே பொத்தான் அழுக்கப்பட்டவுடன் எலும்புக்கூடு ஆடுகிறது.

ஏதோ மர்மம்! எச்சரிக்கை செய்வதற்காக இந்த ஏற்பாடு!

"களவாணித்தனம் இருக்கிறது. புரபசர் ஊருக்குப் போகவில்லை. ஏதோ சூது. துரை நாம் நன்றாகச் சிக்கிக்கொண்டோம்" கதறிவிட்டான் சேகர்.

துரையோ தனது இடும்பைத் தடவிப்பார்த்துக் கொண்டான். வேலைக்காரனை விழித்துநோக்கினான் "உள்ளதைச் சொல்கிறாயா? இல்லை ...."

— தமிழ்த்தென்றல்

நடுநடுங்கிய அவனே "சார் இந்த வீட்டில் பத்து வருடங்களுக்கு மேல் பழம் தின்று கொட்டை போட்ட வன்தான். என்றாலும் இதுவரை நான் எதனையும் இப்படிப் பார்க்க வில்லை. ஏதாவது வேடிக்கைக் கென்று இதை எல்லாம் எஜமான் செய்திருந்தாலும் செய்திருப்பார். உங்களுக்குச் சந்தேகம் என்றால் சோதித்துப் பாருங்கள்."

வஞ்சகமற்றவனாய் தைரியமாய் பேசினான்.

பீரோச் சாவிக்கு எங்கே போவது? துரை இதற்காக சும்மாவு மிருக்கவில்லை. கண்ணாடியை உடைத்து விட்டு எலும்புக்கூட்டைச் சோதித்தான்.

ஒவ்வொரு அங்கமாக ஆட்டி அசைத்துச் சோதித்தான். தலையைப் பிடித்துத் திருப்பத்திருப்ப பீரோ சுவரோடு பதிந்திருந்தது, உள் வாங்கி நகர்ந்தது. என்ன ஆச்சரி யம்! ஒரே விநாடியில் மறுபுறத்திற்கு வழி.

உள்ளே புகுந்தான் துரை. பின்னே சேகர்.

அங்கே நடு ஹாலில் முதுகுப் புறம் இப்பக்கம் தெரியும்படியாக அச்சு யந்திரத்தில் ஒருவன்........!

துரை இடுப்பிலிருந்த ரிவால்வரை எடுத்து ஒரு வெத்து வேட்டைக் கிளப்பினான். ஆசாமி திரும்பினான்.

"ஆ! சாமிலிங்கமா.......?" துப் பறியும் சிங்கம் துரை வாய் விட்டு கூவினான்.

சுதாரித்து அவன் எதும் செய் யக் கூட யோசிக்க விடாமல் முழங்

ஸ்தாபிதம் "1938" ரிஜிஸ்டர் நம்பர்: 85686 தந்தி: "சில்வர்"

காபி மிகவும் உணர்ச்சிகரமாக இருக்கிறதென்றால்
அது "கிருஷ்ணா" காபி பவுடரில் தயாரித்ததாகத்
தான் இருக்கும்.

நீங்கள் உபயோகிக்கிறீர்களா?

இன்றே உங்கள் வியாபாரிகளிடம் கேளுங்கள்

"கிருஷ்ணா காபி பவுடர்"

என்று.

தயாரிப்பாளர்கள்:—

கிருஷ்ணா காபி & டீ ஒர்க்ஸ்,
டவுன்ஹால் ரோடு, மதுரை.
கிளை:- புதுக்கோட்டை.

— "ராஜம்."

— தமிழ்த்தென்றல்

காலுக்கு கீழே இரண்டு முறை சுட்டு விட்டான்.

புலி வீழ்ந்து விட்டது. கைதி யானான் பிரபல பயங்கர மர்ம மனிதன்!

கட்டுக்கட்டாக நூறு ரூபாய் பத்து ரூபாய் கரன்சி நோட்டுகள் வரிசை வரிசையாக........!

பிரமிக்கத்தக்க கரன்சிச் சுரங் கமா என்ன?

கண்களை கசக்கி விட்டுக்கொண்டு பார்த்தான் சேகர்! புரபசர் வந்து இப்படிப் பசுந்தோல் போர்த்திய ....!

நன்றாகப் பார்த்தான். இருந்தி அழுந்திப் பார்த்தான். ஆமாம் என்ன அற்புதம். புரபசர் இல்லை. போட்டிப் பந்தய கதா நாயகன் முதலாவதாக வந்த போலி "ரெங்க கிரி!"

இனி என்ன?

குற்றவாளி—விசாரணை—தீர்ப்பு. இவைகள் முறைப்படி ஒன்றன்பின் ஒன்று தொடர்ந்தன.

ஆயுட்தண்டனையடைந்த அவ னது ஒப்புதல் வாக்குமூலம் இது தான்:—

"பணக்காரர்களை அரட்டி மிரட்டி பணம் பார்ப்பதே எனக்கு வேலையாக இருந்தது. மர்மங்களைத் தோண்டி அவைகளில் சம்மந்தப் பட்டவர்களை என் கைப்பாவையாக ஆட்டிப் படைத்தேன்.

— தமிழ்த்தென்றல்

"இதில் புரபசரின் தாய்மாம னார் 'சிங்காரவேலர்' சிக்கினார். அடிக் கடி பம்பாய், ஹைதராபாத் நகர்க ளுக்குப் போய் உடனுக்குடன் அவர் திரும்பியது எனக்குச் சந்தேகமா யிருந்தது. பின்தொடர்ந்து பார்த் தால், ஏராளமாக ஆயிரக்கணக்கில் கரன்சிகளைமாற்றிக்கொண்டுமொத் தப் பணத்துடன் திரும்புவது தெரிந் தது. பம்பாயில் அவர் தங்கியிருந்த அறையில் நுழைந்து மிரட்டிப்பார்த் தேன். 'போன்' செய்து என்னைப் போலீசில் பிடித்துக்கொடுக்க அவர் முயலவே, ஆளையே முடித்துக்கட்டி இரவோடு இரவாகப் பிணத்தைக் கடற்கரையில்புதைத்துவிட்டு, அறை யிலிருந்த அவரது உடமைகளைச் சோதித்தேன். எலும்புக்கூடு, பொத்தான் இவைகளைக் காட்டும் சில குறிப்புகளுடன் படமொன்று கிடைத்தது.

"இங்குவந்து அவரது வீட்டிற் குள் நுழைந்து பரிசோதிக்கத் திட்ட மிட்டேன். ஆனால் அவரது ஒரே உறவான புரபசர் தனது கல்லூரி வேலையை விட்டுவிட்டு வீட்டையே காத்துக்கிடக்க ஆரம்பித்து விட் டார். இத்துடன் இதுபோன்ற பல வழக்குகள் சம்பந்தமாக என்னைப் பிடிக்க போலீசார் கண்ணி வைத்தி ருந்ததால் எனக்கு வசதியில்லாமல் இருந்தது. மேலும் சிங்காரவேலர் மர்மமாய் காணாமல் போய்விட்ட தால் போலீசார் அவரது வீட்டின் மீது ஒரு கண் வைத்திலிருந்ததும் எனக்குப் பாதகமாயிருந்தது.

"ஆகவே ஊரை மாற்றி உருவத் தை மாற்றி ஆந்திரர் போல் மாறு வேடம் புனைந்து புரபசரை ஒரு

நாளைக்கு வீட்டை விட்டுக் கிளம்ப இத்திட்டத்தைக் கையாண்டேன். துப்பறியும் துரையிடம் கூறி உதவி கேட்பதன் மூலம் போலீசாருக்கும் புரபசருக்கும் வேறு சந்தேகம் ஏற்படாது என்று முடிவு கட்டினேன். தபால் உறைகளை முன்கூட்டியே எழுதிப் போட்டு ஏற்பாடு செய்து கொண்டேன்."

"எல்லாம் சரியாகவே நடந்தது. ஆனால் எனது நடையுடை—பாவனை—பேச்சு இவைகளின் மூலமாக ஆந்திரன் இல்லையென்பதைக்கொண்டோ எப்படியோ சந்தேகப்பட்டு புரபசர் போன பின்னர் இங்கு வந்து மர்மத்தைக் கண்டு பிடித்து விட்டார் துரை. முதலெடுப்பில் என்னை மாறி மாறி கேள்வி கேட்ட பொழுது விளக்கத்திற்காகவே அவர் கேட்பதாகவே நினைத்தேன். ஆனால் அதிலிருந்தே அவரது துப்பறியும் வேலை சந்தேகமனபான்மையுடன் ஆரம்பித்து விட்டது என்று நினைக்கிறேன்."

x x x

"குற்றங்களை செய்கிறவர்களுக்கு வழி வகை வகுத்துக் கொடுக்கும்சிந்தனையே, "ஏன்" என்ற சந்தேகத்தை ஒவ்வொரு அம்சத்திலும் போட்டு அலசிப் பார்க்கச் செய்து மர்மத்தை தோண்டி கிளறி விடும்படி செய்து விடுகிறது எதிர் தரப்பிற்கும்." என்ற "ராபர்டு வின்டு" தம் தேன் துளி, துப்பறியும் துரை அடைந்த வெற்றிக்கான வழியை சுட்டிக் காட்டுகிறது அல்லவா?

❊ உணவிற்கு சிறந்தது.
❊ இலகுவில் பொரியக்கூடியது.
❊ காரம், மணம், குணம், ருசி, நிறம் ஆகப் பஞ்ச வகைகளும் ஒருங்கே அமைந்தது.

ஸ்ரீகணேச விலாஸ்
அப்பளம் & பூ

கொழும்பில் ஸ்டாக்கிஸ்ட்டுகள் தேவை.

இதர விவரங்களுக்கு:—
ஸ்ரீகணேச விலாஸ் அப்பள டிப்போ,
67, விட்டவாசல், மதுரை.

—"ராஜம்"

— தமிழ்த்தென்றல்

Telegrams: COOPFIRE. Telephone: 4361.

The Co-operative Fire & General Insurance Society Ltd.,

MADRAS-1.

President: Sri. T. M. CHINNAYYA PILLAI M. A., B. L.

Transacts
Fire Insurance of all description and
Motor Vehicles Insurance.
For Particulars—Apply to:—

P. SHUNMUGAM, B. A.,

POST BOX NO. 1249 MADRAS-1

சினிமா சிலேடுகள் செய்வதற்கு
சிறந்த இடம்
மோஹன் சித்திர சாலா
64 A கீழாவணிமூல வீதி மதுரை

—"ராஜம்"

— தமிழ்த்தென்றல்

பெருமக்கள் வரலாறு:

கர்மவீரன் கரிபால்டியின் காதலி

[தென்னாப்பிரிக்கா டர்பன் திரு. ச. மு. பிள்ளை]

> உலக மேதாவிகள் ஒவ்வொருவருடைய சரித்திரத்திலும், அவர்களுடைய வாழ்க்கையின் போக்கை நிர்ணயிக்கும் ஒரு நெருக்கடியான விநாடி ஏற்படுகிறது. அந்த விநாடியில் அவர் செய்யும் முடிவு, அவர் பின்பற்றும் வழி, அவரது பிற்காலப் புகழைத் தீர்மானித்துவிடுகிறது. அவரது மேதா விலாசம் தனது பூரண சோபையுடன், உலகமுள்ளளவும் பிரகாசித்துக் கொண்டிருப்பதும், அல்லது அவரது மேதை பிரகாசிக்காமலே மழுங்கிப்போவதும், அந்த விநாடியில் அவர் செய்யும் முடிவைப் பொறுத்திருக்கிறது.

ஐக்கிய இதாலியின் ஸ்தாபகரான-தேசபக்த போர்வீரன் கரிபால்டியின் வாழ்க்கையில், அந்த மகா விநாடி, அவரது முப்பதாவது வயதில் தோன்றியது.

கரிபால்டி 'நைஸ்' நகரத்தில் ஒரு எளிய செம்படவனின் மகன். ஆனால் அவரது தந்தை தனது மகனைச் சாதாரணச் செம்படவனாக ஆக்கிவிடாமல் அவனைப் படிக்க வைத்தார். ஆகவே கரிபால்டி காலாகாலத்தில் தனது குலத்தொழிலை ஆரம்பித்து, நாளடைவில் ஒரு வர்த்தகக் கப்பலில் மாலுமியாகச் சேர்ந்தார்.

அவர் பின்னால் இத்தாலிய சுதந்திர இயக்க (யௌவன இத்தாலிய இயக்க)த் தலைவரான மாஜினியைச் சந்தித்தார். உடனே அவருடைய சீடர்களில் ஒருவரானார். அதனால் அவர் அரசியல் சுழலில் அகப்பட்டார். முடிவாக அவர் 'ஜினோவா' நகரத்தைப் பிடிக்கச் செய்த சதியில் அகப்பட்டு தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டார்.

ஆனால் அவருடைய காலம் அப்போது முடிவதாக இல்லை. எனவே அவர் பிரான்ஸுக்குத் தப்பி ஓடினார். அங்கிருந்து தென் அமெரிக்காவுக்குக் கப்பலேறினார். அப்போது தென் அமெரிக்காவில், பிரேஜில் நாட்டுச் சக்கரவர்த்தியின் ஆட்சியை எதிர்த்துப் போராடிக் கொண்டிருந்த ரியோ கிராண்டிப் படைகளில் போய்ச் சேர்ந்தார்.

அவ்வளவு தொலையிலும் கரிபால்டி தனது தாய்நாடான இத்தாலியை மறந்ததில்லை. அங்கு அவர் அடிக்கடி சந்தித்த இதர இத்தாலியர்களினும், (அவர்களும் கரிபால்டியைப் போலவே அரசியல் தொல்லைகளால் அங்கு அடைக்கலம் புகுந்தவர்கள்) அவர் அடிக்கடி இத்தாலியைப் பற்றிச் சிந்திக்க நேர்ந்தது.

— தமிழ்த்தென்றல்

> **தாயைப் பற்றி:**
>
> "எனது அன்னை வளர்த்த சிறப்பின் பயன்தான் என்னை சிறந்த வீரனாக்கியது."
>
> —மராட்டிய வீரமணி சிவாஜி.
>
> "கடல்போல மாதாசகாயம. அதற்கு இந்த உடலை செருப்பாக தைத்துக்கொடுப்பதே உபாயம்."
>
> -தமிழ்இசைமணி வேதநாயகம்.
>
> "அன்னையின் நினைவால் ஏற்படுகிற இனிமையால்தான் எப்பொழுதும் பெண் இனத்திற்குத் தலைவணங்குகிறேன்."
>
> —வங்கத்தின் கலாமணி தாகூர்.

கரிபால்டி அந்த நாட்டில் ஒரு போர்வீரன் என்ற முறையில் ரொம்பப் புகழும் பேரும் பெற்றார். அந்தச் சமயத்தில்தான் அவருடைய வாழ்க்கை நதியின் போக்கை நிர்ணயித்த அந்த மகா விநாடி தோன்றியது.

அதைப் பற்றிக் கரிபால்டியே ஒரு கவியின் நடையில் சொல்லியிருக்கிறார். அவர் தமது கட்டுக்கடங்காத சுபாவத்தையும், போர்க்குணத்தையும் பற்றி விவரித்துவிட்டு, இத்தாலியின் ஜனநாயகத்திற்காகப் போராட விதிக்கப்பட்ட தமது சரித்திரத்தையும் சொல்லுகிறார்.

அவர் ஒரு பெரிய லட்சியத்தை ஏற்றுக்கொண்டு விட்டார். ஆனால் தன்னந்தனியாக எவ்வித மனித உதவியுமின்றி அதையடைவது இயலாதென்பதையும் உணர்ந்தார். தம்முடன் இருந்து தம்மை ஊக்கவும் உற்சாகமூட்டவும் ஒரு மனிதத்துணை வேண்டுமென்பதை உள்ளூர அறிந்தார். இல்லாவிடில் தனது வாழ்க்கை கனவு சிதறிவிடும் என்றும் தெரிந்தார்.

"இந்தத் துணையை எங்கே தேடுவது? ஒரு நண்பனா, அல்லது காதலி பாதனாக்குத்தேவையான துணை?" தர்க்கம், வாதம் முதலிய விதிகளுக்குக் கட்டுப்படாத ஒரு உணர்ச்சி இந்தக் கேள்விக்கு அவருக்கு விடை கொடுத்தது.

"நட்பு," அவர் எழுதுகிறார், "நாளடைவில் ஏற்படும் உரிமை. ஆனால் காதல் மின்னல்போல. ஏன்? மின்னலே தான்! அது அநேக சமயங்களில் புயலினடுவில்தான் பிறக்கிறது"

— தமிழ்த்தென்றல்

நாயகத்தின் சேவைக்குத் தன்னை அர்ப்பணம்செய்துகொண்ட நாடு கடத்தப்பட்டுத் துன்புறுத்தப்பட்ட—கரிபால்டி புயலின் குழந்தை தானே! 'ஒரு பெண்ணின் ஆதரவு தான் தன்னைக் காப்பாற்றமுடியும். அவளது எல்லையற்ற அன்புதான் தனக்கு உதவி செய்ய முடியும். தனக்குக் காதலின் உதவி உறுதுணை.' இவைகளை உணர்ந்தார் அன்று.

அவர் தனது காதலியை, 'அற்புதம்' என்று சொல்லத் தகுந்த விதமாகச் சந்தித்தார். தமது வாழ்க்கைக்கு ஒரு துணை வேண்டுமென்று

சிந்தித்துக்கொண்டிருக்கையிலேயே கரிபால்டி, பிரேஜில் கடற்கரை வர்த்தகக் கப்பல் ஒன்றில் பிரயாணம் செய்து கொண்டிருந்தார்.

கப்பலின் மேல் தளத்துக்கிராதியின்மேல் சாய்ந்துகொண்டு கரையைக் கூர்ந்து நோக்கிக்கொண்டு நின்ற கரிபால்டி, கரையோரமிருந்த குடிசைகளின் முற்றங்களில் வேலை செய்து கொண்டிருந்த இள மங்கைகளைக் கவனித்தார். அவர்களில் ஒருத்தி அவருடைய கவனத்தைக் கவர்ந்தாள்.

அவள் மெலிந்த வடிவத்தினளாய், கறுத்த கண்களுடைய ஒரு அழகி. முதல் பார்வையிலேயே கரிபால்டி அவளுடைய முகத்தில் பிரகாசித்த ஒரு உயர்ந்த பண்பையும், நெஞ்சுறுதியையும் கண்டதாகச் சொல்லுகிருர். இதரப் பெண்களிடமிருந்து தனித்துநிற்கும் ஒரு தனிக்கவர்ச்சி அவளிடமிருந்ததாகவும் வருணனை செய்கிருர்.

அவளுடைய பார்வை கப்பல் தளத்தில் நின்ற வாலிபப் போர்வீரரது கண்களைச் சந்தித்தது. அவளுடைய உள்ளத்திலும் ஒரு மகத்தான நெகிழ்ச்சி தோன்றியதென்பதை அவளது கண்கள் உணர்த்தின.

புத்தகங்கள், பத்திரிகைகள்
விற்பனையாளர்கள்
தமிழ்ப்பண்ணை

உடனே இத்தாலியப் புரட்சி வீரன் கரிபால்டி கப்பலிலிருந்து இறங்கிக் கரைசேர வழிசெய்து கொண்டான். கரையை யடைந்தவுடன், நேராக, அந்தப் பெண்ணிருந்த குடிசைக்குச் சென்ருன்.

அவனுடைய இருதயம் படபடவென்று அடித்தது. "ஆனல் நான் ஒரு முடிவு செய்துவிட்டேன்" என்று கரிபால்டி எழுதுகிருர். வீட்டுவாசலில் ஒருவன் நின்றிருந்தான். அவன் கரிபால்டியை வரவேற்ருன். அந்த மனிதன் கரிபால்டியை அதற்குமுன் எங்கோ பார்த்ததுண்டாம். "அவன் என்னைத் தடுத்திருந்தால்கூட நான் வீட்டிற்குள் நுழைந்திருப்பேன்!" அவரது உறுதிக்குச் சான்று இது.

நேராக அந்தப் பெண்ணிடம் சென்று அந்த விசித்திரப் போர் வீரன் "பெண்ணே நான் உன்னை மணக்கத் தீர்மானித்துவிட்டேன். நீ சம்மதிக்கத்தான் வேண்டும்" என்ருன். அந்த வார்த்தைகளை அவன் பேசியபோது, அவர்கள் இருவரும் கண்ணுறுக்குத் தெரியாத ஏதோ பந்தனத்தால் கட்டுப்படுபவர்கள் போல உணர்ந்தார்களாம்.

அவர்கள் மணத்திற்குப் பல ..கள் ஏற்பட்டன. ஆனல் கரிபால்டி தன் காதலியைக் கூட்டிக் கொண்டு ஓடிவிட்டார். இருவருக்கும் இரகசியமாக மணம் நடந்தேறியது. அந்தப் பெண்ணின் பந்துக்கள் கரிபால்டியைக் கண்டிருந்தால் அவரைக் கொன்றிருப்பார்கள். அவ்வளவு ஆத்திரத்துடனிருந்தார்கள்.

— தமிழ்த்தென்றல்

அனிட்டா டி ஸில்வா என்ற அந்த அழகி, அன்றிருந்து தனது கணவருடன், அவரது தென் அமெரிக்க யுத்த லீலைகளில் கலந்து கொள்ள ஆரம்பித்தாள். 1840-ம் வருடம் அவளுக்கு முதல் குழந்தை பிறந்தது. அந்தக்குழந்தை நலமாகப் பிறந்ததே ஒரு அற்புதம் எனலாம்.

"ஸான்டா விக்டோரியா" என்னுமிடத்தில் நடந்த யுத்த காலத்தில், கரிபால்டியின் சிப்பாய்கள் அவரது மனைவி அனிட்டாவை ஒரு தேவதை என்றே நம்பிஞர்கள். களைப்பறியாமல், பயமின்றி, யுத்தம் முழுவதும் அவள் குதிரையின்மேலேறித் தனது கணவன் பக்கத்திலேயேயிருந்தாள். யுத்தம் முடிந்தவுடன் காயம் பட்ட சிப்பாய்களைக் கண்டுபிடித்து அவர்கள் காயங்களுக்கு மருந்து கட்டினுள்.

பின்னுல் அவள் பூரண கர்ப்பமாக இருந்தகாலத்திலும், அவள் அப்படியேதான் யுத்தமுனையில் இருந்தாள். ஆனல் 'கோர்டிபானி' என்னுமிடத்தில் கரிபால்டியின் அதிர்ஷ்டச் சக்கரம் மாறி விட்டது. இந்த யுத்தத்தில் அனிட்டா பரிபூரண கர்ப்பவதி. ஆதலால் அவள் யுத்தம் செய்ய இயலவில்லை. ஆனலும் அவள் குதிரை மேலேறிப் போர்வீரர்களுக்கு ஆயுதங்கள் சரிவரக் கிடைக்கும் வேலையை மேற்பார்த்தாள். இந்தச் சமயத்தில்தான் அவளை எதிரிகள் வளைத்துக்கொண்டனர்.

"அந்த நிலைமையில் ஒரு ஆண் பிள்ளை சரணடைந்திருப்பான்" கரிபால்டி பின்னும் எழுதுகிருர், "ஆனல் அவள் குதிரையைத் தட்டிவிட்டு, எதிரி சிப்பாய் வளையத்தை உடைத்துக்கொண்டு வெளிப்பட்டுவிட்டாள். அவர்கள் சுட்டார்கள். அவள் தொப்பி மேல் குண்டு உராய்ந்து கொண்டு சென்றது. அவ்வளவுதான்.'

ஆனல் அவள் குதிரை ஒரு குண்டு பட்டுக் கீழே சாய்ந்தது; அனிட்டா கைதியானுள். அவள் பயப்படவேயில்லை. எதிரி அதிகாரிகள் முன் கொண்டுபோகப்பட்டவுடன், அவள், முன்பு கத்தியும் துப்பாக்கியும் கொண்டு போராடியது போல, வார்த்தைகளால் போராடி அவர்களை ஆச்சரியத்தால் பிரமிக்கச் செய்தாள்.

அன்றிரவு எதிரி சிப்பாய்கள் வெற்றி வெறியுடன், குடிவெறியையும் சேர்த்து மயங்கியிருக்கையில், அனிட்டா ஒரு குதிரையின் மேல் ஏறிக்கொண்டு தப்பி ஓடிவிட்டாள்.

பேபி காப்பி
ருசிகரமானது
விருதுநகர்.

— தமிழ்த்தென்றல்

காலாகாலத்தில் கணவன் மனைவி இருவரும் இத்தாலிக்குத் திரும்பினார்கள். இங்கு கரிபால்டி தமது புரட்சி வாழ்க்கையின் வெற்றிகளைக் கண்டார். ஒன்றன்பின் ஒன்றாக பல வெற்றிகள் பெற்றார். ஒரு சிப்பாய், ஒரு அரசியல்வாதி என்ற இருமுறையிலும் அவர் பல வெற்றிகளடைந்தார்.

அனிட்டா, இத்தாலியில் ஒரு ஆண், ஒரு பெண் இரு குழந்தைகள் பெற்றார். ஆனால் தவிர்க்கமுடியாத தளர்மை வரும் வரை, அவள் தம் கணவருடனேயே போர்க்களத்திலேயே இருந்தாள். அவளுடைய வீரமும், உற்சாகமும், கரிபால்டிக்கும் அவரது சிப்பாய்களுக்கும் சிறந்த வழிதுணைகளாக இருந்தன.

ரோமாபுரியைப் படைவெடுத்து விட்டுப் பின்வாங்கியபொழுதுதான், கரிபால்டியின் மனம் உடையத் தகுந்த சோகபாகம் ஆரம்பித்தது. அப்போதும் அனிட்டா பூரண கர்ப்பம். நாலாவது தடவை தாயாகிறாள். கரிபால்டியும் அவரது படைகளும், ஆஸ்திரியப் படைகளால் அட்ரியாடிக் கடல் பக்கமாகத் துரத்துண்டு ஓடுகிற சமயம்.

“போ” நதியின் முகத்துவாரத் தருகில் கரிபால்டியின் கோஷ்டியார் படகுகளில் ஏறினார்கள். ஆனால் அவர்கள் மறுபடி கரையில் இறங்க வேண்டியதாகிவிட்டது. தனது வாழ்நாளில் முதல் தடவை, அனிட்டா கரையில் மணலிலேயே மூர்ச்சையானாள். கரிபால்டி சோகத்தினால் செயலற்றுப் போனார்.

கரிபால்டி அவளைத் தூக்கிச் சென்று பக்கத்திலிருந்த ஒரு சோளக் காட்டில் மடிமேல் சார்த்திக் கொண்டு, அவள் உயிர்வளப்பம் வடிவதை நேருக்குநேர் கண்டு துடித்தார்.

அக்கம்பக்கத்திலிருந்த சில குடியானவர்களின் உதவியால், அவர் அனிட்டாவை அருகிலிருந்த ஒரு ஜமீன்தார் வீட்டிற்கு எடுத்துச் சென்றார். வழியில் ஒரு குடியானவன் இரக்கப்பட்டு தன் வீட்டிலேயே அவளைப் படுக்கவைக்க இடம் கொடுத்தான். ஆனால் படுக்கையில்

அருஞ்சுவைக்கு அரசன்!

ஆரோக்கியத்திற்கு அரண்!

ஆண்டன் பேக்கரி

பிஸ்கட், கேக் ரகங்கள்.

குழந்தைகளுக்கு திடம் அளிப்பவை.

ஆண்டன் பேக்கரி,

விருதுநகர்.

— தமிழ்த்தென்றல்

கிடத்துமுன், அனிட்டா, கரிபால்டியின் கரங்களிலேயே உயிர் துறந்தாள்.

தனது உயிர்மணியைப் புதைத்துவிட்டு கரிபால்டி இத்தாலிக்குத் திரும்பினார். அங்கு அவர் தமது வாழ்வின் முயற்சியின் வெற்றி எல்லையையடைந்தார்.

ஆனால் அதை அவர் ஒரு கடமையாகத்தான் செய்தார். அவருடைய மகிழ்ச்சி அனிட்டாவுடன் புதைக்கப்பட்டு விட்டது. “என் உள்ளத்தின் உள்ளமாக இருந்த அவளுடன் என் மகிழ்ச்சியெல்லாம் மாண்டு விட்டது” கண்ணீரால் எழுதிய வரிகள் இவைகள்.

பின்னால் அவர் யுத்தத்தில் காயமடைந்து, ஒரு சன்னியாசி போல வாழ்ந்த காலத்திலும், தனது தேச நண்பர்கள் ஆறுதலும் ஆதரவும் அளித்த காலத்திலும், மரணம் வரையில் அவர் அனிட்டாவின் மீது கொண்ட காதல் குறையவேயில்லை. தமது லட்சியத்தை நோக்கிச் செல்ல முக்கிய சாதனையாகவிருந்த அந்த வீரக் காதலியை அவர் மறந்ததேயில்லை.

ஸ்தாபிதம்: 1925.

திருநெல்வேலி

இம்பீரியல் ஸ்டுடியோவில்

எடுக்கப்படும்

போட்டோக்கள் மிகவும் சிறந்தவை.

அதற்குக் காரணம்?

26 வருட அனுபவமே!

உரிமையாளர்: **T. V. S. ஹமீது,**

கிளை ஆபீஸ்: விருதுநகர், தூத்துக்குடி.

— தமிழ்த்தென்றல்

பயனற்ற அழகா?

மூலம்: மாப்பசான். தமிழ்வார்ப்பு: கருப்பு.

முன் கதைச் சுருக்கம்.

தன் மனைவியின் அழகை பிறர் ரசிக்கக்கூடாது என்று ஆண்மனம் விரும்புகிறது. அங்கே சந்தேகச் சூறாவளி போடுகிறது. அழகை பயனற்றதாக்க, விடாமல் தன் இல்லாளை கர்ப்பவதியாகவே வைத்திருக்கும் தந்திரத்தைக் கையாளுகிறார் பிரபு 'மஸ்கரட்.'

இந்தக் கொடுமையைத் தாளாத பெண்ணோ அன்றைக்குத் தன் உள்ளக் கொதிப்பை கொட்டி விடுகிறாள். தேவ ஆலயத்திற்கு கணவனைக் கூட்டிச் சென்று அவரது குழந்தைகளில் ஒன்று அவருக்குப் பிறந்ததில்லை என்ற பேரிடியைத் தலையில் தூக்கிப்போட்டுவிட்டு ஆலயத்திலிருந்து ஓடுகிறாள்.

இனி கதை வளர்கிறது.

தீர்க்கத் தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளி தண்டனைக்காகக் காத்திருப்பது போல "காப்ரியல்லி" இரவுச்சாப்பாட்டு நேரத்தில் தன் அறையில் காத்துக் கொண்டிருந்தாள். "அவன் என்ன செய்வான்? வீட்டிற்கு வந்து விட்டானா? வெறியேறியவனாக, கொடுமைக்காரனாக வந்து என்ன செய்ய எண்ணிக் கொண்டிருக்கிறானோ?" என்ற சிந்தனைகளின் சுழலிலே சிக்கியவளாக வெகு நேரம் உட்கார்ந்திருந்தாள். வீட்டிலே எவ்விதச் சப்தமும் இல்லை.

ஒவ்வொரு வினாடியும் கடிகாரத்தை நோக்கிய வண்ணமே யிருந்தாள்.

வேலைக்காரி வந்து அவளது உடைகளை மாற்றி விட்டுப் போய் விட்டாள். கடிகாரம் எட்டு முறை மட்டும் அடித்து ஓய்ந்தது. மணி எட்டு அடித்ததை எண்ணாததால், மணி அடித்தபின் கடிகாரத்தைப் பார்த்து முடிவுக்கு வந்தாள். அதே நேரத்தில் கதவை இரு முறை தட்டி, சமையல்காரன் வந்து சாப்பாடு தயார் என்று அறிவித்தான்.

"பிரபு வந்து விட்டாரா?"

"ஆமாம். சாப்பாட்டு அறையிலிருக்கிறார்."

கணநேரம் அவள் சிந்தனையிலே சிறுகைத் துப்பாக்கியை எடுத்துக் கொண்டால் என்ன என்ற எண்ணம் ஊடாடியது. கொஞ்ச நாட்களுக்கு முன் வாங்கிய அந்தக் கைத்துப்பாக்கியை வாங்கிய போது அவள் நிகழப் போகும் கோரத்தை எண்ணியதின் நிகழ்ச்சிகளின் பயங்கர ஒத்திகை அவள் மனதில் நடந்து கொண்டிருந்தது. ஆனால் சாப்பாட்டு அறையில் குழந்தைகள் எல்லாம் இருப்பார்கள் என்ற எண்ணம் வந்ததும் கைத்துப்பாக்கியை வைத்து விட்டுப் புறப்பட்டாள்.

அவளைக் கண்டதும் பிரபு எழுந்து வழக்கம் போல தலையைக் குனிந்தார். மூன்று பையன்களும் தங்கள் ஆசிரியர் 'அபே மார்டினுடன்' அவளுக்கு வலது பக்கமும் மூன்று பெண்களும் தங்கள் ஆங்கில ஆயாவான 'ஸ்மித்துடன்' இடது பக்கமும் உட்கார்ந்திருந்தனர். மூன்று மாத வயதேயுள்ள சின்னக் குழந்தை மாடியில் தூங்கிக்கொண்டிருந்தது.

"காப்ரியல்லி" குனிந்த தலை நிமிரவேயில்லை. அப்போது பிரபுவின் கண்கள் மூன்று பையன்களையும் முதலில் ஊடுருவியது. பிறகு மூன்று பெண்களையும் துளைத்தது. அவர் சிந்தனைகள் சிதறிச் சிதறி ஓடி ஒன்று சேர்ந்தன.

"மூத்த பையனா, நடுப்பையனா, இளையபையனா, யார்? எந்தப் பெண் குழந்தை? எது? அப்பப்பா!" அவர் சிந்திக்கும் பிராணியான மனிதனாக ஏன் பிறந்தார்?

பிரபு ஒயின் கிளாசில் ஒயினை ஊற்றியபோது கிளாஸ் கீழேவிழுந்த ஓசை நிசப்தமாயிருந்த அந்த அறையில் பேரொலியை எழுப்பி விட்டது. சாதாரணச் சம்பவம்தான். ஆனால் அதற்கு உயிர் இருந்தது. "காப்ரியல்லி" தலையை நிமிர்ந்தாள். கணவனும் மனைவியும் அப்போதுதான் முதன்முறையாகப் பார்த்துக்கொண்டனர். ஆனால் வார்த்தைகள் வரவேயில்லை.

அப்போது "அபேமார்டின்" நிலையைச் சரிவரப் புரியாமல், எத்தனை பிரச்சினைகளைப் பேசமுடியுமோ, அவ்வளவும்பேசினார். ஆனால் கணவனும் மனைவியும் மூடிய வாய் மூடியபடியே இருந்தனர்.

பெண்மை ஒளிந்துள்ள இதயத்துடன் அவளால் சும்மாயிருக்கமுடியவில்லைதான். ஆனால் வார்த்தைகள் என்ன அச்சாரும் செய்திருந்தாளா? அந்தப் பெரிய அறையில் அவள் பேசிய ஓர் இரு வார்த்தைகள் அவளுக்கே பயத்தைத் தந்தன?

திடீரென்று பிரபு குனிந்து, "இங்கிருக்கும் உனது குழந்தைகளின் மேல் ஆணையாக உண்மையைச்சொல்வாயா?" என்றார். அவள் நரம்புகள் துடிதுடித்து எழுந்தன.

அந்தக் கேள்விக்குப் பழைய உறுதியுடனேயே பதிலளித்தாள்.

பிரபு ஆவேசமாக எழுந்து நாற்காலியைச் சுவரில் தள்ளிவிட்டு ஒரு வார்த்தையும் பேசாமல் வெளியேறினார். அப்போது, "உங்கள் தந்தையைக் கவனியாதீர்கள். அவர் சில நாட்களாகவே சரியில்லாமலிருக்கிறார். ஆனால் சில நாட்களில் சரியாகி விடுவார்" என்று குளிர்ச்சியான குரலிலே சமாதானம் பேசினாள்.

பிறகு, 'அபேமார்டினுடனும்' 'ஸ்மித்துடனும்' கலகலவென்று

பேசினாள். அவள்முகத்திலே வெற்றி விளையாடிக் கொண்டிருந்தது. குழந்தைகளுடன் வேடிக்கையாகப் பேசினாள். அவளைத் தவறாகப் புரிந்த பிரபு இருந்தால் தாய்மையின் மேன்மையை அதன் முழு உருவத்தோடு கண்டிருப்பார்.

அப்பப்பா! பெண்கள் சில சமயங்களில் ஏன் புரியமுடியாத புதிராக இருக்கிறார்கள்?

சாப்பாடு முடிந்ததும், அந்தப் பச்சைக் குழந்தைகள் புடைசூழ அடுத்த அறைக்குப் போனாள். பெரிய குழந்தைகளைப் பேசச்சொல்லிக் கேட்டுக்கொண்டிருந்தாள். அதில் தான் எவ்வளவு இன்பம்! எவ்வளவு பெரிய பிரச்சினைகளைக் கவலையில்லாமல் அவர்கள் அற்புதமாகத் தவறு கலந்து பேசுகிறார்கள். சுருக்கமாக அவர்கள் பேச்சு அரசியல் வாதியின் அழகான பேச்சுப் போல இருந்தது. இப்படியே, வெகுநேரம் உட்கார்ந்திருந்தாள்.

குழந்தைகள் கொட்டாவி விட்டன. அப்போது ஒவ்வொரு குழந்தையாக முத்தமிட்டாள். முத்தமிட்டால், ஆயுள் குறையுமென்கிறார்கள். முத்தமிடும் போது உண்டாகும் களிப்பில் ஆயுள் கூடும். அந்த அற்புதம் அந்த முட்டாள்களுக்கு எங்கே தெரியப் போகிறது? அந்தக் குழந்தைகள் படுக்கைக்குப் போகும் காட்சியை விழித்த கண்மூடாமல் பார்த்த வண்ணம் மெய் மறந்து நின்றாள். காற்றிலே சன்னல் கதவுகள் சிறிய ஓசைகளை எழுப்பின. அந்த ஓசைகள் அவள் உணர்ச்சியையும் எழுப்பின.

பெருமூச்சோடு தன் அறைக்குப் போனாள். தூக்கமா வருகிறது? எப்போது பிரபு வருவாரோ என்ன செய்வாரோ என்ற சிந்தனை அவளை தூங்கவிட்டால் தானே! அவளோடு ஒட்டி அவளைக்காக்கக்கூடிய மனிதசதைகளான குழந்தைகள் கூட அவள் பக்கத்திலில்லையே!

அந்தச் சிறிய கைத்துப்பாக்கியை எடுத்துப் பையில் வைத்துக் கொண்டாள். நேரத்தை மெள்ள விழுங்கி மணிகள் அடித்தன. ஆனால் எல்லா ஓசைகளும் அந்த வீட்டில் மாண்டு மறைந்து போயின. வண்டிகளின் ஓசைகள்



— தமிழ்த்தென்றல்

தான் கேட்டன. அதுவும் மூடப் பட்ட சன்னல்களைத் தாண்டி மெதுவாக நடை தளர்ந்த மெலியவனைப் போலத்தான் ஊர்ந்து வந்தன.

காத்திருந்தாள், தைரியமாக— எந்த விதமான பயமுமில்லாமல் நடுங்கிக் கொண்டு—காத்திருந்தாள். எதற்கும் சித்தமாக, வீரமாக அவனை வாழ்வின் ஒவ்வொரு திருப்பத்திலும் சித்ரவதை செய்யக் காத்திருந்தாள்.

காலைக்கதிரொளி வீட்டினுள் நுழைய ஆரம்பித்தது. நுழைந்தது. விடிந்து விட்டது. பிரபு வரவில்லை. நிச்சயமாக வரவேயில்லை. அறையில் அடைபட்ட பூனை தாக்க வரும் மனிதனுக்காகக் காத்திருந்து விடுதலையடைந்தது போல, அறையின் கதவைத் திறந்தாள். காலைக்காற்று மெதுவாக, ஆனந்தம் எழுப்புவதாக உள்ளே நுழைந்து கொண்டது. என்ன உவமையோடு நுழைந்தது தெரியுமா?

வேலைக்காரி டீ கொண்டு வந்தாள். அதோடு கொண்டுவந்தாள் ஒரு கடிதம். கணவனிடமிருந்து ஓர் கடிதம்.

அதில், தான் ஓர் நீண்ட பிரயாணம் போவதாகவும், தன்னுடைய வழக்கறிஞர் அவளுக்கு வேண்டிய பண வசதி, செய்வாரென்றும் எழுதியிருந்தார்.

(தொடரும்)

— தமிழ்த்தென்றல்

"இதோ இப்படித்தான்!"

"நூர்ஜஹான்" என்றால் "உலகத்தின் ஒளி". "ஜஹாங்கீர்" என்றால் "உலகத்தை வென்றவன்". பெயருக்கு அர்த்தம் இப்படி.

அவர்கள் புகழும் அப்படியே பரவி இருந்தது அன்று.

அரசிக்கு எப்பொழுதும் களியாட்டங்கள் என்றால் போதும். மன்னரை நாள்முழுதும் சிரிக்கச்சிரிக்க அடித்துவிடுவாள். படுகோபமாக அவர் வந்தாலும் சரி, பேசினாலும் சரி, எல்லாம் ஒரேவிநாடியில் பறந்து போகும் அவளது ஒரே ஒரு வாய் வார்த்தையில்.

பொழுதுபோக்காக கர்ணப்புறாவிரண்டு வாங்கிக் கொடுத்திருந்தார் அரசர். அதிலொன்று அரசி கையிலிருந்து தப்பிப் பறந்தோடிவிட்டது.

இதுவிவரம் அறிந்தவுடன் அரசருக்கு கோபம் கோபமாக வந்தது.

"நூர்! மற்றொன்று எங்கே?"

"பறந்து விட்டது......"

"என்ன? பறந்துவிட்டதா? அதெப்படி?"

"இதோ இப்படித்தான்......!"

என்றபடி அரசி அதுபோது கையிலிருந்தமற்றொன்றையும்பறக்க விட்டுவிட்டார்.

அரசர் விழுந்து விழுந்து சிரித்தார், இந்த வேடிக்கையைப் பார்த்துவிட்டு.

"அதெப்படி?" என்று கேட்டார். செய்துகாட்டினாள், அவர்தான் இதற்காக எப்படி கோபப்பட முடியும்?"

—ஜே. க்கோ.

அட்டையின் அழகு

புது வாழ்வு

[விருதை ந. இராமசாமி.]

உலக நிகழ்ச்சிகளின் பல்வேறு நாதத்தை — ஊராரின் வெவ்வேறு வாழ்க்கையின் கீதத்தை — ஊறுபட்ட உள்ளங்களில் பீறிட்ட கானத்தை — கேட்டிருக்கிறாள் ஆனந்தம். ஆனால் சாந்தாவின் வாழ்க்கையில் வீசிய அந்த விசித்திரச் சுழல் — வேதனைச் சூறாவளி அவளுக்கு என்றென்றும் எண்ணாமல் மறந்துவிடும் நிகழ்ச்சியாகப் போய்விடவில்லை.

அவளது வீழ்ந்த வாழ்விற்கும், விடிவெள்ளிக்கும் சம்பந்தம் உண்டா? விரகதாபம் போக — விரக்தி நீங்க அவளுக்கு வாழ்வு மலருமா? இது சுலப சாத்தியமா? சுருக்கு வழி உண்டா? என்பன போன்ற நினைவுக் கதிர்கள் எங்கோ மும்சுடர்விட்டுநின்றது, ஆனந்தத்தின் சிந்தனை மாடத்தில்.

மங்காத மாண்பு!
மக்கள் மன்றத்திலே

மாதர் சங்கம், வேலையற்ற வனிதையரின் வீம்பு மடம் — அரட்டையடிக்கும் அணங்குகளின் அழகுக்கூடம் — புரணி பேசும் புண்யவதிகளின் புகழ் கொண்ட பீடம் — இங்கே 'பசி' என்ற சொல்லையே கேட்க முடியாது — 'புசி' என்ற தாரகமே தட்டுத் தடையில்லாமல் தண்ணீர் பட்ட பாடு படும் அங்கே — உண்டு, களித்து ஓய்வு நேரத்தை மிகுதியாகப் பெற்றவர்களுக்கு மாதர் சங்க மெம்பர் பதவி தேவை தான் — ஆனால் உழைத்து உழைத்து ஓடாகத் தேய்ந்து—ஏங்கிக் கிடக்கின்ற ஏழைகளைப் பற்றிய எண்ணம் இவர்களுக்கு இருக்கிறதா? —இவ்வாறு தான் பலருக்கு நினைப்பிருக்கிறது, மாதர் சங்கம் குறித்து!

ஆனால் எங்களூர் மாதர் சங்கம் இந்நினைப்புக்கு நேர் மாறானது. ஆனந்தம் அதன் தலைவியாக இருக்கும் வரை உலக அரங்கின் எதிரொலியாக — வாழ்க்கையின் பிரதி

— தமிழ்த்தென்றல்

தேன் துளிப்பாதையில்
வீரனும் அறிஞனும்:

"நான் வளர்ந்தேன். பார்த்தேன். வென்றேன்."

— ஜூலியஸ் சீசர்.

"நான் ஆத்தினியனுமல்ல. கிரேக்கனுமல்ல. உலக மகன்."

— சாக்ரட்டீஸ்.

பலிப்பாக — மாதர் தம் துன்பம் துடைக்கும் தூண்டாமணி விளக்காக — மகிழ்ச்சி மனைக்கு வழி காட்டும் மார்க்க விடுதியாக—விளங்கும், விரியும். விந்தை பாடும்.

அங்கே பங்களாவாசியும் ஏழைப் பங்காளியும் ஒன்றே. உயர்வு, தாழ்வு என்ற பேதத்தை அடித்து விரட்ட உகந்த தடி அவளது கையில் எப்போதும் இருக்கும். வேதனை தொடர்ந்த இடத்துக்கு அவள் விரைந்து செல்வாள். ஆறுதல் செய்வாள். துயரை வெல்வாள்.

இறுதியிலே..............இன்பத்தைப் பெற்று இனிமை பெறும் மலர்ந்த முகங்களைக் கண்டு மனம் பூரிப்பாள்.

ஆகவே தான் ஆனந்தம் தலைமையின் கீழ் இயங்கும் மாதர் சங்கத்திற்கு **மங்காத மாண்பு மக்கள் மன்றத்திலே.** பெருமை கொண்டது, பெயரும் புகழும் பரவி வர.

— தமிழ்த்தென்றல்

துன்பத்தால் துவண்ட
உருவம் அவள்!

சமூக சேவைகளில் சோபை மிகுந்தது, வளம் இழந்த வனிதையரைக் கை கொடுத்துக் காப்பது அல்லவா? இங்கே தான் சாந்தாவை அவள் எதிர் கொண்டது. ஏக்கமும் துக்கமும் நிறைந்த அவளது கதையைக் கேட்டது.

தோழியர்களின் வாழ்க்கையிலே வந்து சேரும் சிக்கல்களை — சிண்டு முண்டுகளை — அவிழ்த்திருக்கிறாள், சிரமமின்றி. ஆறாத வேதனைப் புண்களை ஆற்றியிருக்கிறாள், அழுது தவித்த அநேகர் வாழ்க்கை ஏடுகளில் அதிக தொந்திரவு இல்லாமல், மாறாத தொல்லை என மனம் மண்டிப்போன பெண்டிருக்கு வீடு தந்திருக்கிறாள், வெகுவாகக் கஷ்டப்படாது.

இத்தனை அறிவுபலம்—தியாக சீலம்—திறன் —மிகுந்த அவளுக்கு இதில் மட்டும் ஏனோ.........!

சாந்தாவிற்கு நிகழ்ந்துவிட்ட கொடூரத்தின் காரணத்தை கணிக்க முடியாது கவலையுற்றாள். ஓரே மர்மம்! உண்மை உருவைக் காண முடியவில்லை, அவளால். மர்மத்தின் அடித்தளத்தைக்கண்டபின்னர் அல்லவா வெற்றி தோல்வியைப் பற்றி நிர்ணயிக்க முடியும்?

சாந்தா..........கண்ணிறைந்த கணவனைப்பெற்றவள்தான். ஆனால் கால நெருப்பால் கருகிக் கருத்து

விட்டாள், எடுத்துத்தொடுத்து எழில் நிறைந்த விரல்களால் மீட்டாத வீணையைப்போல அவளது 'இளமை' மூலையிலே தூக்கி எறியப்பட்டுவிட்டதே! களித்துக் காலத்தை பெருமைப்படுத்தவேண்டிய பருவம். ஆனால் இன்றோ துன்பத்தால் துவண்ட உருவம் அவள்.

"மங்களம் பாடி விட......."

வாழ்க்கை இடரின்றி ஏற்றம் நாட—இனிமை காண—இன்பம் கூத்தாட — எடுப்பான வகை — வசதி கிடைக்கப்பெற்றயோககாரிதான்! இருப்பினும் இல்லறம் நல்லறமாக அமையாதபோது......?

கட்டிய கணவனால் கடுஞ்சொற் பேசி விரட்டியடிக்கப்பட்டவள், சாட்டிய குற்றமோ தீட்டிய கூர்வாளை குறை கூறியது.

சாந்தா......தடம் புரண்டவள்—தவறியவள்—தப்பாக நடந்தவள்.

வண்டு குடைந்த மலர் — வாய் எச்சிற்பட்ட கனி — வடித்தெடுத்து விட்ட வெறும் சக்கையான தேன் கூடு.

பெண் இனம் — பேசினால் ஆண்கள் கூறும் தீர்ப்பு இதுதானே!

பேசப் பயம். பெருமை போய்விடும். பிறர் நகைப்பார்கள். பிழை என்று இம் மிற்காலம் என்றென்றும் மன்னிக்க முடியாத அழுகி நாறிய — அந்தஸ்தைவிழுங்கிய—களங்கம் அல்லவா இது?

கையும் மெய்யுமாக எதையாவது கண்டு இப்படி 'வாழா வெட்டியாக' — வதங்கும் புழுவாக—வாடி உதிரும்மலராக—செய்திருந்தால்சரி என்பது தான் ஆணாந்தத்தின் எண்ணம்.

மாதர் சங்கத்தலைவி என்பதற்காக சாந்தாவின் கணவனைப் பார்த்து அவன் விளக்கம் கேட்க முடியுமா என்ன? விசாரணை நடத்தத் தான் ஆகுமா?

ஊரிலுள்ள பெண்களுக்கிடையே செயலாற்றி வருகிற பழக்கத்தை வைத்து சாந்தாவின் கணவனுடைய தங்கை "கோமளத்தை"க் கண்டு பேசினாள். இதில் அவள் அறிந்த விவரம் இது தான்:

சாந்தாவின் எதிர் வீட்டிலிருந்த சுந்தரத்திற்கும் அவளுக்கும் இளமையிலேயே பழக்கம் ஏற்பட்டிருக்கிறது. அவளுக்கே அவனை கொடுப்பதாகவும் இருந்திருக்கிறார்கள்.

தேவை

எங்களுடைய வாஸ்மதி காப்பி வில்லையை விற்பனை செய்ய டிபாசிட் கட்டக்கூடிய ஏஜெண்டுகள் தேவை.

சங்கரன் காப்பி & ஒர்க்ஸ், விருதுநகர்.

— தமிழ்த்தென்றல்

ஆனாலோசினிமாத்துறையில்சேர்ந்து சுந்தரத்தின் வாழ்க்கை ஒரு மாதிரியாகப் போய்விட்டதால் பின்னிட்டு இத்திருமண யோசனையை கைவிட்டு விட்டார்கள்.

கோமளத்தின் அண்ணனும் சாந்தாவை மகிழ்ச்சிப் பெருக்கில் தான் மணவறையில் ஏற்றுக்கொண்டான். அவர்களது குடும்ப வாழ்க்கையும் இரண்டு மாதங்கள் இனிமை வெளியில் தான் பவனி கொண்டது.

இது சமயம் கோமளத்தின் அண்ணனுக்கு சாந்தா தவறியவள் என்பதற்கான நிருபணம் கிடைத்து விட்டதால் வீட்டில் கலாட்டா, முடிவு என்ன? நடக்கவேண்டியது நடந்து விட்டது.

குற்றம் புரிந்தவனுக்காக எப்படித் தான் நியாயம் பேசுவது? சட்டரீதியாக விவாகரத்திற்கு ஏற்பாடு செய்துவிட்டு அவளது வாழ்க்கையை சேவையின் பாதைக்குத் திருப்புவதுதான் முறை என்றே ஆனந்தத்திற்குப் பட்டது.

இதைவிட்டு வேறு என்னதான் செய்வது?

சுந்தரத்தின் வாழ்வை ஒரு சுற்றுச்சுற்றி விட்டு இதற்கு மங்களம் பாடி விட முடிவுகட்டினாள்.

வேலை எப்படி!

"வா! சுந்தரம் வா! நீ வருவாய் என்று நானும் நினைத்துக் கொண்டு தான்........."

"இருந்தாயாக்கும். அது சரி நளினி! நான் கூட இந்நேரம் எங்கோ இருக்கவேண்டியவன். இருந்தாலும் உன்னிடம் இந்த மகிழ்ச்சியைச் சொல்லாமல் வேறு எங்கே போக மனம் வருகிறது. "இன்ப வாசல்" படத்தில் உனக்கு 'டான்ஸ்' கிடைக்க ஏற்பாடு செய்து விட்டேன்."

"மிக மிக நன்றி சுந்தரம். இவ்வளவு செல்வாக்கும் வருமானமும் இருந்தும் நீ ஒரு குடும்பமாக இல்லாமல் இருப்பது தான்......"

"கவலைப்பட்டு என்ன பயன்? அது தான் கனவாகி விட்டதே!"

"அப்படியென்றால் நீ காதல் தோல் என்று........"

— தமிழ்த்தென்றல்

வாழ்வைப் பற்றி :

"பொது நலப் பணியில் ஆர்வம் ஏற்பட்டால் தான் யார் வாழ்விலும் அமைதி ஏற்படும்."

ஆங்கில பாவலர் "எச்.ஜி.வெல்ஸ்"

"எப்படியாவது நன்றாக வாழ்ந்து விடு" இது ஆரியரின் பெருங்குரல். "மானத்தோடுவாழ்" திராவிடரின் தீங்குரல் இப்படி.

தமிழக நாவலர் "ச. சோமசுந்தர பாரதியார்"

"அரசாங்கத்தின் அமைதியும் பெயரும் என் வாழ்வும் நாட்டு மக்களின் நல்வாழ்வில் என்றுமே இணைந்து நிற்கும்."

சோவியத் காவலர் "ஸ்டாலின்"

"ஆமாம் நளினி ஆமாம். காதலித்தேன். ஆனால், சாந்தாவின் பெற்றோர்கள் மறுத்து விட்டார்கள், வெளி மயக்கில் மயங்கி........"

"வேற்றொருவனுக்குக்கல்யாணமாகி விட்டதாக்கும்........"

"ஆனால் நான் விட்டு விடவில்லை. பழி தீர்த்து விட்டேன். ஒரேகடிகம். இப்போது அவள் "வாழா வெட்டி.""

"அட சும்மா நீ எழுதினால் மட்டும் போதுமா?"

"சின்ன வயசிலே சாந்தா — அது தான்—என் காதலிக்கு எதிர்த்த வீடு. தப்பைக் குச்சியை ஒடித்து நான் "கிட்டி" விளையாடினேன். அப்போது குறுக்கே ஓடி வந்த அவள் நெஞ்சில் குத்திக் காயப்பட்டு விட்டது. இது நினைவிற்கு வந்தது. காயத்தின் வடு இருக்குமல்லவா? அடையாளமாக அவள் ஆளானபின் நான் பார்த்த மாதிரி எழுதிப் போட்டேன். வேலை எப்படி............?"

"இப்போ ஏதாவது முயற்சி செய்தாயா என்ன...........?"

"பெண்களே இருக்குகள்தானே! அவன் விரட்டிய பிறகும் நான் முயன்றும்கூட தலையை நிமிரக்கூட மாட்டேன்கிறா......"

"நல்ல பெண். உத்தமி........"

நளினி முடிக்கவில்லை. "கிரீச்" என்ற சிற்றொலி. அவர்கள் பேசிக்கொண்டிருந்த முற்றத்தின் வலது கைப்பக்கமிருந்த அறையின் கதவு திறந்தது.

திடுக்கிட்டுத் திரும்பினான் சுந்தரம்.

அங்கே மாதர் சங்கத் தலைவி— கோமளம் — அவள் அண்ணன்.

மர்மம் வெளியானது. பழி பறந்தோடியது.

பெண் இனத்தின் முன்னே ஆண் இனம் தலை தாழ்ந்து நின்றது.

டிரைவர் காரை எடுத்துக் கொண்டு பறந்தான். சிறிதே நேரத்தில் அங்கே சாந்தா.

பழையநடிகர்கள் தான். ஆனால் தம் குடும்பத்தைச் சேர்த்து வைத்தான், "புதுவாழ்வு" பொங்கட்டும். மகிழ்ச்சிப் பெருக்கால் நாளைப்பிறக்கும் தைத்திருநாள் முதல் என்ற ஆசி நிறைந்த ஆறுதல்மொழியுடன்.

அலங்கரிக்கும் பெண்ணினம்

தைப் பிறந்தது. உத்தமமான — குற்றமற்ற பெண்ணுக்கு புதுவாழ்வு கிடைத்ததுபற்றி ஆனந்தத்திற்கு ஒரே ஆனந்தம்.

அறிவுப் பிரச்சாரத்திலுள்ள பேச்சாளரான அவளது கணவன் நெடுமாறன் காலையிலே திருக்குறள் முன்னணிக் கழகத்தில் கொடி ஏற்றி வைக்கப் போயிருக்கின்றார்.

வீட்டை அலங்கரித்து விட்டாள். வெளியிலே "தாமரை" கோலமிடுகிறாள், சுடர்மணி "தாலமுத்து" பக்கத்தில் அருஞ்சுவை கரும்பை சுவை பார்க்கிறான்.

வீட்டிற்குள்ளும் வெளியேயும் பெண் தானே அழகு செய்கிறாள். அவளுக்கு எங்கும் முதலிடமும் முன் மதிப்பும் கிடைக்கவேண்டுமென்பது நியாயம் தானே என்று எண்ணிய ஆனந்தம் வாய் விட்டுக் கூறினாள் இப்படி:

"பெண் இனத்திற்குப் பெருமை தந்த இன்றே பிறந்தது தமிழகத்தின் புது வாழ்வு."

— தமிழ்த்தென்றல்

தைத்திருநாளால் தணியாத மகிழ்வு பொங்க வாழ்த்துக்கள்!

S. பாலு ரேடியோ சர்வீஸ்
3, தானப்ப முதலி தெரு, மதுரை.

எல்லாவித ரேடியோ, ஆம்ப்ளிபையர்ஸ் ரிப்பேர்களும், குறித்த காலத்தில், சிறந்த முறையில், குறைந்த சார்ஜில் செய்து தரக்கூடும் புதிய பலவித ரேடியோ செட்டுகளும் எம்மிடம் கிடைக்கும்.

S. பாலு,
ரேடியோ என்ஜினியர்.
"ராஜன்"

பொங்கும் மகிழ்ச்சி எங்கும் பரவுக!

இந்திய நாட்டு இளைஞர் முதல் எல்லோருக்கும் திடகாத்திரம் அளிக்கவல்ல எமது

ஆர்.எம்.கே. பார்லி
குளுகோ பிஸ்கோத்து தினுசுகளையே உபயோகியுங்கள்.
ஆர்.எம்.கே. அண்ட் சன்ஸ் பேக்கர்.
59. டவுன் ஹால் ரோடு, மதுரை.
புரோப். — ஆர்.எம். கருப்பண்ண பிள்ளை.

எமது கிளை: 13, 14, திண்டுக்கல் ரோடு, (பழைய ஆஸ்பத்திரிக்கு எதிரில்)
மதுரை.
"ராஜன்"

வழி பிறந்தது!

மக்களன்பன்

“தைப் பிறந்தால் வழிபிறக்கும்” இது பழமொழி. இல்லை, பழங்காலத்திலிருந்து வழங்கி வரும் ஒரு நல்ல வார்த்தை! நம்பிக்கை யூட்டும் வாசகம்!!

தைப் பிறந்தால் எதற்கு வழி பிறக்கும்..........?

பரம்பரை தரித்திரன் கையில் கூட பையையாகப் பணம் புரளுமா........? அல்லது மலர்ந்து மணம் பரப்பும் கட்டிளங்குமரிகளுக்கு கல்யாணமாகுமா.........?

மொட்டை மாடியில் உட்கார்ந்திருந்த என் யோசனை எங்கெல்லாமோ ஓடிக் கொண்டிருந்தது.

நான் இருக்கும் அந்த வீடு நான் கட்டியதல்ல. என் தகப்பனார் வைத்து விட்டுப் போன ஒரே முதல் அது. அதன்மேலிருந்த கடன் தொகையை என் மனைவியின் நகைகளை விற்று அடைத்து விட்டேன், தங்க சோறில்லாவிட்டாலும் தங்கவாவது நிழலிருக்க வேண்டுமே என்ற எண்ணத்தால்!

கல்யாணமானவன் என்ற காரணத்தால்!!

என் நினைவு மறுபடியும் தை மாதப் பிரச்சினையைத் தழுவியது.

— தமிழ்த்தென்றல்

தெளிவு பிறக்கவில்லை. நேரம் தேய்ந்து கொண்டிருந்தது.

“எல்லாரு வண்டியிலே ஏலம்
வரும் சுக்கு வரும்
எம்மச்சான் வண்டியிலே எலக்
கேந்த பட்டு வரும்.”

பாட்டில் குதூகலம் குமிழிட்டது. இனிமை பொங்கியது.

என் சிந்தனை நூலில் சிக்கு விழுந்து விட்டது.

திரும்பிப் பார்த்தேன். அடுத்த வீட்டு அலமு பாடிக்கொண்டிருந்தாள்.

“எல்லா மாசத்திலும் இன்பம்
வரும் துன்பம் வரும்
தைப்பொங்க மாசத்திலே தனி
யாத இன்பம் வரும்.”

அவள் பாடிக் கொண்டிருந்தாள்...... அதோ தூரத்தில் சதங்கை ஒலி...... வண்டி ஓட்டிக் கொண்டே வடிவேலு வந்தான். அலமு பார்த்து விட்டாள்...... அவள் ஆனந்தம் நிலை கொள்ளவில்லை.

வண்டியை விட்டு வடிவேலு இறங்குவதற்கு முன் “என்ன வாங்கிட்டு வந்தீங்க அத்தான்..........?” என்ற கேள்வியோடு எதிரே போய் நின்றாள் அலமு.

“அலமு! இதோ பார்......பழுன் ......மரப்பாச்சி.......கிலுகிலுப்பை ......” என்று சொல்லிக்கொண்டே எல்லாவற்றையும் எடுத்துக் காட்டினான் வடிவேலு.

அலமுவின் மஞ்சள் பூசிய மதி முகம் சிறுத்தது.

“இதெல்லாம் எதுக்காம்...?”

வார்த்தையில் பொய்க் கோபம் சேர்ந்திருந்தது.

“எதுக்கா..........? பொறக்கப் போகும் நம்ம பயலுக்குத் தான் அலமு......”

வடிவேலுவின் பேச்சில் கேலியும், குதூகலமும் கூடி ஒலித்தன.

அலமுவின் கோபம் பறந்து விட்டது. “கொல்” லென்று சிரித்து விட்டாள். வடிவேலும் அந்தச் சிரிப்பில் பங்கு எடுத்துக் கொண்டான்.

நானும் லேசாகச் சிரித்துக் கொண்டேன்.

அவர்களும் ஏழைகள் தான். இருந்தாலும் என்ன ஒற்றுமை! ...என்ன அமைதியான பற்றுதல் ......என்ன ஆனந்த வாழ்வு!

x x x

“சாப்பிட வாறீங்களா.......?”

என் மனைவி மித்ராவின் மெல்லிய குரல் என் சிந்தனைக் குதிரையை இழுத்து நிறுத்தியது.

அவளைப் பார்த்தேன். அன்பாகப் பார்த்தேன். ஆசையோடு பார்த்தேன்.

— தமிழ்த்தென்றல்

அவள் புன்னகை புரிந்தாள்.

ஆம்! புன்னகையைத் தவிர எழுத்தாளனின் மனைவியிடம் பொன்னகையா இருக்கும்.......? இருக்கத் தான் முடியுமா......?

அப்படியிருந்தாலும் எட்டியப்பரின் வட்டிக் கடையிலோ, “ஆபத்பாந்தவர் பாங்கி” லோ தான் அபயமடைந்திருக்கும்.

இது அதிசய சம்பவமல்ல. எழுத்தாளன் வாழ்க்கையில் அன்றாட நிகழ்ச்சி. சர்வ சாதாரணமான விஷயம்!

ஏனென்றால் இன்று நாடு இருக்கும் நிலை அப்படி......... எழுத்தாளர் உலகின் நிர்ணயம்—நடப்பு அப்படி.

“சாதம் ஆறிப் போகிறது.....” என்றாள் மித்ரா ஏக்கம் நிறைந்த வார்த்தையிலும், ஊக்கம் பொங்க, உற்சாகம் ததும்ப.

நான் வெறுப்போடு எழுந்து, வேதனையோடு உண்ணச் சென்றேன்.

“கல்லைத்தான் மண்ணைத்தான்
காய்ச்சித்தான் குடிக்கத்தான்
கற்பித்தாரா......”

புலவரின் பாட்டை என் வாய் முணுமுணுத்தது.

ஆனால் மனம்.........?

“தைப் பொங்கல் மாசத்திலே
தனியாத இன்பம் வரும்.”

என்ற அலமுவின் பாட்டைச் சுற்றி, சுற்றி அலைந்து கொண்டிருந்தது.

“ஆனால் அது எப்படி.........?” என முடிவு தேடி என் மனக்குரங்கு

சிந்தனை மலர்களை உதிரடித்துக் கொண்டிருந்தது.

எனக்கும் கல்யாணமாகி நான்கு வருடங்கள் ஆகின்றன. அதாவது இடையில் மூன்று தை மாதங்கள் ஓடி மறைந்து விட்டன. எந்தத் தை மாதத்திலும் எனக்கு எவ்வித முன்னேற்ற வழியோ, பொன்னோ, பொருளோ கிடைக்கவில்லை.

ஆனால் வருஷந் தவருமல் குழந்தை பாக்யம் ......இல்லை. அந்த பெருந் தொல்லை மட்டும் கிடைத்து வந்தது.

அதன் விளைவு இன்று நான் இரண்டு பெண் குழந்தைகளுக்கும், ஒரு ஆண் குழந்தைக்கும் தந்தை.
அதாவது அந்த பட்டினிப் பட்டாளத்தின் கேப்டன்.........பிரதிநிதி. நல்ல வேலை.........!

மனைவி மட்டும் மனம் போல வாய்த்திருந்தாள். இல்லாவிட்டால் இப்போது — அதுவும் இந்த பஞ்ச காலத்தில் நான் எழுத்தாளனாக இருக்க முடியுமா......?

எங்கோ நாடோடிப் பிச்சைக் காரனாகவோ.......வாலிப சாமியாராகவோ மாறி அலைந்துக் கொண்டிருப்பேன்.

சாப்பிட உட்கார்ந்தேன்.

மித்ரா பறிமாறினாள்.

எழுத்தாளன் வீட்டுச் சாப்பாடு தானே?

ஏதோ பெயருக்கு இரண்டு வாய் அள்ளிப் போட்டு விட்டு மறுபடியும் மொட்டை மாடிக்குச் சென்றேன்.

"தைப் பொங்கல் மாசத்திலே
தளியாத இன்பம் வரும்!"

என்ற அடிகளைச் சிந்தித்தேன். சிந்தித்தேன். சிந்தனையின் விளிம்பிலே மெய் மறந்தேன்.

x x x

நாளைக்கு "தை" பிறக்கப் போகிறதல்லவா?

எங்கிருந்து வருமென்று எதை எதிர்பார்ப்பது?

ஏதோ தப்பித் தவறி ஒரு சில கதைகள் ஆடிக்கொன்றும் அமாவாசைக்கொன்றுமாகப் பிரசுரமாகிவிடும்.

பயன்.........?

பத்திரிகையின் ஒரு பிரதி! அவ்வளவு தான்.

ஆனால் என் மனைவிக்கு மட்டும் ஆனந்தம் சொல்லி முடியாது. என்னுடைய எழுத்தை அச்சில் பார்ப்பதற்கு அவ்வளவு ஆசை அவளுக்கு.

ஒளவைப் பதிப்பகத்தார் "வெறும் சிலை" என்ற கதையைப்

குழந்தைகளை புஷ்டியாக வளர்ப்பது எங்களுடைய பிஸ்கட் தினுசுகளே.

சரசுஸ் பேக்கரி, விருதுநகர்.

— தமிழ்த்தென்றல்

புத்தகமாக வெளியிட்டார்கள் போன மாதம்.

பொருளில்லா வீட்டாலும் இருளில்லா வாழ்வு!

அடுத்த நாள் தைப் பொங்கல்! **தமிழரின் இன்பத் திருநாள்!**

ஆனால் என் கையில் பேனாவும் பேப்பரும் தான் இருந்தது.

பொழுது போகவில்லை.

பெட்டியைத் துருவிப் பார்த்தேன். ஏதாவது சில்லரை யிருக்குமா என்ற நப்பாசை.

அழும் குழந்தைகளுக்குத் திருநாளன்று இரண்டு துண்டு கரும்பாவது வாங்கித் தரலாமென்ற புத்திர வாஞ்சை.

இரண்டு ஓரணா நாணயங்கள் பெட்டியின் மூலையில் கிடந்தபடி என்னைப் பார்த்து அழகு காட்டின. எழுத்தாளன் என்றால் அவைகளும் இளப்பமாகத் தான் பார்க்கும் போலும்!

ஒரே வழு வழுக்கை. "செல்லாது" இவைகள் என்று அரசாங்க சட்டமே கூறுகிறதே. இப்படிப்பட்ட சின்னஞ்சிறு விஷயத்திலும் கூட அரசாங்கம் எடுத்திருக்கிறக் கவலை, எவ்வளவு கவனமாக இருக்கிறது!

யோசனைத் திரையில் ஒரே மயக்கம்.

"சார் ரிஜிஸ்டர்............!"

திரும்பினேன். தபால்க்காரன். ஒரே ஆச்சரியம்.

கைச்சாத்திட்டேன். உடைத்தேன்.

எனது "வெறும் சிலை"யை திரைப் படமாக்க பராசக்தி பிக்சர்ஸார் முடிவு செய்து முன் பணம் நூறு ரூபாய்க்குசெக் அனுப்பி இருந்தனர்.

எதிர் பாராத யோகம். வழி பிறந்து விட்டதல்லவா?

ஒரே குதி குதித்து அடுக்களையிலிருந்த மித்ராவிடம் கூற "மித்ரா மித்ரா" என்று கூவிக் கொண்டே ....

"சட்" என்றடி. சனியன் பிடித்த கதவில், வீசியகை விரைந்து பட்டு விட்டது.

"ஆ" என்று அலறிய வண்ணம்............விழித்தேன். எதிரே மித்ரா"என்னாங்க விடிந்து எவ்வளவு நேரமாச்சு. விடிய விடிய என்னா பனி கொட்டியிருக்கு. நீங்க கம்பளியை இழுத்து மூடிக்கிட்டு" அவளது தொனியில் கவலை கலந்து பின்னி நின்றது.

அப்பொழுது நான் கண்டதெல்லாம் கனவு தானா? "வழி பிறந்தது!" எல்லாம் அங்கே தானா?

"எழுதிப் பிழைப்பது என்பது பணக்காரர்களின் — ஏமாற்று வித்தைக்காரர்களின் பொழுது போக்கு. ஆனால் ஏழை எழுத ஆரம்பித்தால், அந்த எழுத்தே அவன் கழுத்தை நெரித்துக் கொன்று விடும்" என்ற "புதுமைப்பித்தனின்" நினைக்குரல் எனது உள்ளத்தே எதிரொலித்து என்னை நையாண்டி காட்டியது.

— தமிழ்த்தென்றல்

தொடர் நாவல்:

மைத்துனி

— ஜீவா —

எட்டாவது அதிகாரம்

நகரம் நவநாகரிக நாரீமணி போல, மினுக்கிக்குலுக்கி ஒய்யாரமாக நடைபோட்டுக் கலகலவென நகைத்துக்கொண்டிருந்தது. ஆம்; பொங்கல் புதுநாள் மக்களைப் பூரிப்பில் ஆழ்த்திப் புத்தாடைபூண்டு அணிமணிகள் தரித்து ஆண்களும் பெண்களும் குழந்தை குட்டிகளுடன் வளைய வந்துகொண்டிருந்தது, பார்ப்பதற்கு நகரமே நளினமாக நடனமாடுவது போன்ற பிரமையைத்தான் உண்டு பண்ணியது. தொடர்ந்தாற்போல் ஐந்தாறு வருஷங்கள் மழையில்லாமல் இவ்வருஷம் பருவ மழை பெய்து வயல்களைப் பசுமையாக்கியதுபோல், மக்களுடைய வாழ்க்கையிலும் பசுமையை ஏற்படுத்தியதால், அவர்கள் பொங்கல் விழாவை மிகப்பூரிப்போடு கொண்டாடிமகிழ்ந்தனர். வானமாமழை காணாது வாடியிருக்கும் பயிர்கள் போல், பஞ்சத்தால் பரதவித்த மக்கள்முன் ஆண்டுகளில் பொங்கல் வந்து பூரிப்பின்றிப் பட்டினிபசியால் நலிந்திருந்தனர். அமுத மழைத்துளிகள் விழுந்ததும் சாவியாகிச் சரிந்துவிழும் நிலையிலிருந்த பயிர்கள் குப்பெனத் தளிர்த்துத் தலைதூக்கி நிற்பதுபோல, பருவமழையால் பயனடைந்த மக்கள் பல ஆண்டுகளுக்குப்பின் இவ்வருஷந்தான் மகிழ்ச்சிப் பொங்கலோடு பால் பொங்கலிட்டு அருக்கனில் சோதிவைத்த அருள் இறைவனுக்குப் படைத்துப் பின் மனைவி மக்களுடன் வயிறார உண்டு பேருவகை கொண்டார்கள்.

'தைப் பிறந்தால் வழி பிறக்கும்' என்னும் பழமொழிக்கு ஏதுவான தைமாதம் பிறந்த—அதாவது பொங்கல் நாள் வந்த மூன்றாம் நாள், 'காணும் பொங்கல்' என்று களிப்புமிகக்கொண்ட மக்கள் கூடிக் கொண்டு உறவினரையும் நண்பர்களையும் உவந்து போய்ப்பார்த்து அளவளாவி விட்டுவரும் நன்னாள். அன்று மக்கள் சாரிசாரியாகப் பல பக்கங்களிலும் போய்க்கொண்டிருந்தார்கள். செல்வத்தில் திளைத்திருந்தவர்கள் கார்களிலும், குதிரை வண்டிகளிலும் செருக்கோடு சென்று கொண்டிருந்தனர். பொருளிலும் பிறவற்றிலும் மத்தியதரமாகவுள்ளமக்கள் வாடகை வண்டிகளில், பஸ்களில்போகலாயினர். ஏழைமக்கள் கால்நடையாகச் செல்லலாயினர். பாட்டாளி மக்கள் கூட்டம் பள்ளுப்பாட்டு பாடித்தெம்பாகச் சென்றுகொண்டிருந்தது. கூலி வேலை செய்யும் குமரிப் பெண்களும் நடுத்தரவயது மகளிரும் தங்களுக்குத் தெரிந்தவர்களின் வீடுகள்தோறும் சென்று கும்மியடித்துப் பொங்கல் இனாம் காசு பெற்றுப்போய்க் கொண்டிருந்தனர்.

மாலை மஞ்சள் வெய்யலில் மக்கள் இவ்விதம் வையாளிவந்துகொண்டிருந்தது பார்க்கக் கண்கொள்ளாக் காட்சியாயிருந்தது. மக்கள் முகங்களில் மகிழ்ச்சி துளும்ப, கல கலவெனப் பேசிக் கொண்டு போன கலகலப் பொலி நகர் முழுவதுமே எதிரொலி செய்து கொண்டிருந்தது.

இவ்விதம் எங்கு பார்த்தாலும் யாரைப் பார்த்தாலும் ஆனந்தம் தாண்டவமாடிக்கொண்டிருக்க, ஒரேயொரு வீட்டில் மட்டும், ஒரு சிலர் முகங்களில் மட்டும் சோகம் குடிகொண்டிருந்தது. மயிலாப்பூர்செந்தோம் ரோட்டிலுள்ள சதானந்தம் பிள்ளையவர்களின் மாளிகை பல வகையிலும் சோபை யிழந்து காணப்பட்டது. ஒரு மணிக்கொரு தரம் — காலை மாலைகளில் கால் மணிக்கொரு தரம் அடிக்கும் செந்தோம் மாதா கோவில் மணியின் 'டணார் டணார்' என்ற ஒலி கூட அவ்வீட்டிலுள்ளோரைத் துயரத்திலிருந்து துயில் எழுப்பவில்லை. அவ்வளவுக்கு அளவிட முடியாத துக்கம் அவர்களை ஆட்கொண்டிருந்தது. இதற்குக் காரணம் சொல்ல வேண்டியதில்லை. அந்த வீட்டுத் தலைவியான திலதவதியம்மாள் திடீரெனப் பக்ஷ வாதத்தால் பிடிக்கப்பட்டுப்படுகிடையாகி 'இப்பவோ, பின்னையோ இன்னும் சற்று நேரத்திலோ!' 'ஆக்கை அகத்ததோ புறத்ததோ!' என்று சொல்லக் கூடிய நிலையில் இருந்து வரும்போது வீட்டிலுள்ளோர்க்கு எப்படிக் கலகலப்பாய் இருக்க முடியும்?

விளையாட்டைப் போல், திலதவதியம்மாள் நோயில் விழுந்து ஆறு மாதத்துக்கு மேலாய் விட்டது. மூத்த மகன் பரீட்சையில் தேர்ச்சி பெறாமல் போய் விட்டதையும் அரசாங்கத்துக்கு எதிரான இயக்கங்களில் ஈடுபட்டிருப்பதால் அடக்குமுறைக்கு ஆளாகவேண்டிய அபாய நிலையில் இருப்பதையும் ஒரேசமயத்தில் கேட்ட அதிர்ச்சியினால், ஏற்

— தமிழ்த்தென்றல்

புரோட்டா & பிரியாணிகளுக்குச் சிறந்த இடம்

ராம விலாஸ் காபி அன் சாப்பாடு ஹோட்டல்

ராமமூர்த்தி ரோடு, விருதுநகர்.

உரிமையாளர்:— T. ராம நாடார்.

— தமிழ்த்தென்றல்

கனவே, நோயில் நலிந்துள்ள திலதவதியைப் பக்ஷவாதம் பற்றிப் பலவிதமான பிணிகளைக் கிளைக்கச் செய்தது. எத்தனையோ விதமாக, வைத்திய சிகிச்சை செய்தும், நோய் நீங்கியபாடில்லை. ஒன்று மாறி ஒன்று வந்து கொண்டேயிருந்தது. சதானந்தம்பிள்ளையவர்கள் முதலில் ஆங்கில வைத்திய முறைகளால் சிகிச்சை செய்து பார்த்தார். அதனால், நீங்காதென்று அறிந்தபின், மாசிலாமணிமுதலியாரின் யோசனையின்படி, ஆயுர்வேதம், சித்தவைத்தியர்களைக் கொண்டுசிகிச்சை செய்யலானார். இவற்றாலும் உடனடியாகப் பலன் ஏற்படாமல்போகவே, யூனானி, ஹோமியோபதி வைத்திய முறைகளாலும் சிகிச்சை செய்யச் சொல்லிப்பார்த்தார்.

அவருக்குச் சில விஷயங்களில் நம்பிக்கையில்லையானாலும், தம் அருமை மனைவி எப்படியாயினும் மரணப் படுக்கையிலிருந்து மீண்டு எழுந்தால் போதும் என்ற ஆதங்கத்தோடு, மற்றவர்கள் சொல்லியபடி யெல்லாம் மணி மந்திர, ஔஷத முறைகள் அனைத்தையும் கையாண்டு பார்த்துவிட்டார். ஆனால், ஆயிரக்கணக்கில் பணம் செலவானது தவிர, அலுப்பு சலிப்பு இல்லாமல் யார் யார் என்ன சொன்னாலும் யாரைப்பற்றிச் சொன்னாலும் அவர்கள் சொல்லுகிற வைத்தியர்களையும், மந்திரவாதிகளையும், ஜோதிடர்களையும் அலைந்து திரிந்துபோய் அழைத்து வந்து பார்த்து ஏமாந்தது தவிர, திலதவதியம்மாள் படுக்கையிலிருந்து இம்மியளவுகூட எழுந்திருக்கவில்லை. எந்தவிதமான சிகிச்சையாலும் மருந்து மாயங்களாலும் சதானந்தம் பிள்ளையின் மனைவி சிறிதளவும் குணமடையாததைக் கண்டு எல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள். சில மருந்துகளால், மணி மந்திரங்களால் சில சமயம் நோய் சிறிது குணமாவதுபோல் காணப்படும்; இரண்டுநாள் கழிந்து மறுபடியும் நோய் முடக்கிக் கொள்ளும். இந்த விதமான விசித்திர நிலை, பொதுவாக உறவினர், அக்கம் பக்கத்து மனிதர்களைமட்டு மல்லாமல், வைத்தியர்களையும் மந்திரவாதிகளையும் வியப்பில் ஆழ்த்தியது. இதிலிருந்து, திலதவதியம்மாளுக்கு உடம்பில் மட்டும் முடக்கு வாதமில்லை; உள்ளத்திலும் முடக்கு வாதம் பிடித்துக் கொண்டிருக்கிறது என்றேதோன்றியது. உடற்பிணிக்கு மணிமந்திர ஔஷதம் பிடிக்கும். மனப்பிணிக்கு எப்படிப் பிடிக்கும்? நோய் ஒன்றிருக்க மருந்தொன்று

செய்தியும் விளம்பரம் தான்;
விளம்பரமும் செய்தி தான்.
— தேவதாஸ் காந்தி.

— தமிழ்த்தென்றல்

கொடுத்தால் குணமாகுமா? மனநோய்க்கும் மருந்தும் உண்டோ?

மகனால் ஏற்பட்ட மன அதிர்ச்சியால் தான், மனக்கவலையால் தான் ஏற்கனவே, உடல் நலிவுற்றிருந்த திலதவதியம்மாள் இப்போதுநோய்க்காளானாள். மனநோய் முற்றியதால் உண்டான உடற்பிணிக்கு மருந்துகளைக் கொடுப்பதை விட, முதலில் மனப்பிணி அகல மார்க்கஞ் செய்தால் பூரணகுணம் ஏற்படும். ஆனால் அதற்கு வழி யாரும் செய்ய வில்லை. ஏனென்றால் திலதவதியம்மாளை உள்ளூர அரித்துவரும் மனநோயை மற்றவர்கள் — மகனான் கூட — அறியாதது தான் இதற்குக் காரணமாகும். வியாதியின் மூலத்தை யுணர்ந்தால் தானே அதைப்போக்க முடியும்?

மாசிலாமணி முதலியார் மூட்டிவிட்ட தீ தான் திலதவதியம்மாளைச் சரியாகப் பற்றிக்கொண்டது. அவர் பிள்ளையவர்களுடன் அடிக்கடி பேசி வந்த பேச்சிலிருந்து, கணவனைப் பற்றியும் குமாரர்களைப் பற்றியும் அறிந்த சில விஷயங்கள் அவளுக்கு அதிர்ச்சியை உண்டு பண்ணின. 'உத்தமமான என் கணவரையும் உலகம் சந்தேகிக்கிறதே! விரோதிக்கிறதே!—உலகம் என்றால் யார்? அறிவால், ஒழுக்கத்தால் உயர்ந்த ஆன்றோர்களா? நற்குண சம்பன்னர்களா? இல்லை; இல்லை. சுயநலத்தால் சூழ்ச்சி செய்யும் உலுத்தர்கள்–யோக்கியப் பொறுப் பற்றவர்கள்தான். என் கொழுநரைக் குறைகூறுகிறார்கள்; குற்றஞ் சுமத்த முயல்கிறார்கள்; குரோதங் கொண்டு தீமை புரியச் சமயம் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். காங்கிரஸில் — தேசமகாசபையாகிய காங்கிரஸில்—தாதாபாய் நௌரோஜி—கோபாலகிருஷ்ண கோகலே,–சுரேந்திரநாத பானர்ஜி–விபினசந்திரபாலர்— பாலகங்காதர திலகர்—போன்ற தேசபக்தர்கள்—தியாகிகள் அரும்பாடுபட்டு வளர்த்த காங்கிரஸில்—காந்தி மகான்—சத்தியத்தையும் அஹிம்சையையும் ஆயுதங்களாகக் கொண்டு சுதந்திரப் போராட்டம் நடத்திய மகாத்மா காந்தி பலப்படுத்திய காங்கிரஸில்—சுபாஷ் சந்திர போஸின் அரும்பெருந்தியாகத்தாலும் வீரதீரப்போராட்டத்தாலும் நாட்டுக்கு ஆட்சி சுதந்திரம் வாங்கித்தரும் பெருமை பெற்ற காங்கிரஸில் கூடவா சுயநலவாதிகள்—அயோக்கியர்கள் மலிந்து விட்டார்கள்? அடகடவுளே! தந்தை மீதுள்ள வஞ்சங்காரணமாக, பிள்ளைகள் மீது பழி தீர்த்துக் கொள்ளப்பார்க்கிறார்களே! கயவர்கள்?' என்று எண்ணியெண்ணி மனம் வருந்தினாள்.

'இவர் எதற்காக அந்த அயோக்கியர்களோடு மல்லாடுகிறார்? நீதியும் நேர்மையும் உண்மையும் இல்லையென்று அறிந்தால் இவர் பேசாமல் விலகிக்கொள்வது தானே! காங்கிரஸில் இருந்துதான் மக்களுக்குச் சேவைபுரிய முடியுமா! என்ன! வேறு எந்தஸ்தாபனத்திலும்

— தமிழ்த்தென்றல்

சேர்ந்து சேவை செய்ய முடியாதா? நீண்டகாலம் காங்கிரஸில் இருந்து தொண்டாற்றி வந்ததால், பிற கட்சிகளில் சேர விருப்பமில்லையென்றால், தனிப்பட்ட முறையில் முடிந்த அளவு மக்களுக்கு நன்மை செய்து மனத்திருப்திக் கொள்வதுதானே! அதை விட்டு.........!பொல்லாதவர்களுடன் பொல்லாங்கு எதற்கு? நாய்வாலை நிமிர்த்த முடியுமா? துஷ்டர்களுக்குப் புத்தி சொன்னால் திருந்தப் போகிறார்களா? அதற்குப் பதிலாக அவர்கள் தீமை செய்யத்தான் பார்ப்பார்கள். தங்க இடமின்றி மழையில் நனைகிறதே என்ற பரிவுணர்ச்சியோடு, புத்தி சொன்ன தூக்கணாங்குருவியின் கூட்டைப்பிய்த்தெறிந்த குரங்கின் கதையை இவர் அறிய மாட்டாரா? இவருக்குத் தெரியாத விஷயமா? இவருக்கு யோசனை சொல்ல எனக்கு என்னயோக்கியதை இருக்கிறது? மனைவிக்கு இல்லாத உரிமையா? உரிமையிருக்கலாம். அந்த உரிமையை எப்பேர்ப்பட்ட கணவரிடம்-எந்தச் சமயத்தில்-உபயோகப்படுத்த வேண்டும் என்று தெரிய வேண்டாமா?............'

கணவரிடத்தில் திலதவதிக்கு மிகுந்த நம்பிக்கையிருந்தது; உயர்ந்த மதிப்பிருந்தது. இடையில், மங்கை விஷயமாக அவள் சந்தேகங் கொண்டபோதுகூட, கணவன்மீது கடுகளவும் ஐயங்கொள்ளவில்லை. மங்கை மீதுதான் சந்தேகங்கொண்டாள். அருவருப்பு கொண்டாள்.

அவள்தான்— இளமையிலேயே இன்பத்தை இழந்துவிட்ட விதவையான அவள்தான்—தன்கணவரை மயக்கமுயல்கிறாள் என்று எண்ணினாள்.

கணவன் உலக அநுபவமிகுந்தவர்; எல்லாம் அறிந்தவர். அவர் நிலைமைக்குத் தகுந்தபடி நடந்து கொள்வார்; அவரைப் பற்றித்தான் அதிகமாகக் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. 'அரசாங்கத்தில் பதவி வகிப்பவர்களின்—அதிகாரத்தைக் கைக்கொண்டிருப்பவர்களின் —பகைமை எதற்கு?' என்ற ஒரு சிறு நினைவைத்தவிர, அவள் அவரைப் பற்றி அதிகஞ்சஞ்சலங்கொள்ளவில்லை. பிள்ளைகளை நினைக்கும் போதுதான் அவள் பெருங்கவலை கொண்டாள். சிறுவயதிலேயே— படிக்கும்போதே—இவர்களுக்கு எதற்காக அரசியல் விவகாரங்கள்? கட்சிகளில் கலந்து கொண்டு கூச்சல் போடுவதேன்? நல்லது, கெட்டது என்று இன்னமும் சரியாகத் தெரியாத நிலையில் இவர்கள் பொது விஷயங்களில் ஈடுபடுவது கூடாது. ஆனால், அவர்கள் இதைக் கேட்கமாட்டார்கள் போலிருக்கிறதே! பெரியவன்தான் ஒரு நிரவசாய்ப்போய் விட்டான் என்றாலும், சின்னவனும் அதைவிட மோசமாகவல்லவா இருக்கிறான்? ஆனால் விசுவம், சிவனைப்போலப் பரீட்சையில் 'கோட்' அடிக்கவில்லை. எப்படியோ எழுதிப் பாஸாய் விடுகிறான். மேல் படிப்பில் எப்படி இருப்பானோ?.........' என்று பெற்ற பிள்ளைகளை எண்ணித்தான் அவளுடைய தாயுள்ளம் பெரும்பேதுற்றது.

(தொடரும்.)

— தமிழ்த்தென்றல்

பொங்கல் திருநாள் வாழ்த்து.

ஆசிரியப்பா.

அங்கயல் கண்ணியின் அருட்கடைப் பார்வை
தங்கிய வுலகினில் தனக்கிணை யில்லாப்
பாரத கண்டம் படைத்தநல் லரசால்
ஏரது கொண்டே யிருப்புவி திருத்தப்
பூவில் மழைமிகப் பொழிந்து செழித்ததே
தாவில் தானியம் தழைத்தே உயிர்கள்
எண்ணிய எண்ணியாங் கெய்தியே வாழியே!
புண்ணியர் போற்றும் பொலிவுறு பொங்கல்
சொக்க லிங்கத் தூயவன் அருளால்
மிக்க நற்றிருநாள் விளங்கி வாழியவே!

ந்தமிழ் நாட்டுச்
செல்வச் சிறுவர்
சிறுமிகளுக்குந்
டேகாத்திரமளிக்
ம் சிறந்த உணவு
எங்கள்

ஸ்தாபிதம்:
1926.

நினைவில் சதா
நிலை நிற்கும் ருசி
மணம் இவைக
ளில் மனம் லயிக்
கும் குழந்தைக
ளுக்குச் சிறந்த
ஆகாரம்

ஜா பார்லி பிஸ்கட் | ராஜா குளுகோஸ் பிஸ்கட்

எமது சாத்வீக உணவு நிலையத்தில் தூய நவீன இன்சுவை முறையில் உற்பத்தியாகிப் பல்லாண்டுகளாகப் பாரத கண்டத்திலும், வெளி நாடுகளிலும் குழந்தைகள் முதல் முதியோர் வரையிலும் உள்ள மக்களுக்கு உடல் வன்மையும் உற்சாகமும் இன்சுவையும் அளித்து வருகிற

ரொட்டி, பிஸ்கட், கேக்கு, ராஜா பார்லி

முதலிய இன்சுவை உணவுகளை ஆதரித்து வருகிற அன்பார்ந்த வியாபாரிகளுக்கும் அன்பர்களுக்கும் அன்புடைமையும் நன்றியுடைமையும் அறிவித்து வாழ்த்துகின்றோம்.

ா பிஸ்கட் கம்பெனி, 115, திண்டுக்கல் ரோடு, மதுரை.

ஆசிரியரும், வெளியிடுவோரும்: V. V. இராமசாமி M. L. A., விருதுநகர்.
அச்சிடுவோர்: P.SV.P. [illegible], தமிழ்த் தென்றல் அச்சகம், விருதுநகர்.

மக்களுக்கு மகிழ்ச்சி அளிப்பதே எங்கள் நோக்கம்

தரத்தில் முதன்மை! காட்சியில் பெருமை!

தமிழகத்தின்

தலைசிறந்த தொழிற் நிலையம்

"ஸ்டாண்டர்டு"

பட்டாசு வகைகளில் பலவிதம்

மத்தாப்பு ரகங்கள் அநேகம்

கம்பி மத்தாப்பு..........கலர் மத்தாப்பு

இன்னும்

தீப்பெட்டி வகைகள்

எத்தனை எத்தனையோ

அழகு உதிர்க்கும் அம்சங்கள்.

எல்லாம் கண்கவர் காட்சி! மனத்திற்கு மகிழ்ச்சி!

STANDARD FIRE WORKS, SIVAKASI.

பொதுமக்களுக்கு ஓர் முக்கிய அறிவிப்பு.

மார்க்கெட்டில் மலிவுரக பத்திகள் போலிவேடத்தில் கிளம்பி இருப்பதால், எங்கள் டிரேட் மார்க் நம்பர் பத்திகளை வாங்கும் அன்பர்கள் எமது பெயரையும் நம்பர்களையும் கவனித்து வாங்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

சுகந்த மண்டலம் தயாரிப்புகள்

இன்பம் தரும் இனியமணம் நிறைந்த

31
301
3001

ஜவ்வாது பத்திகள்

S.V. முருகேசன் & பிரதர்ஸ்

மதுரை ★ மதரூஸ் ★ பெங்களூர்சிடி.

பெஸ்ட் பேக்கரி

29, இலட்சுமிபுரம் குறுக்குத்தெரு, :: மதுரை.
கிளை நிலையம்: 100, தெற்கு மாசி வீதி, மதுரை.

பிரியமான — *புதிய* — *இனிய*
பிஸ்கட்ஸ் — பிரட்ஸ் — கேக்ஸ்

எமது உயர்குண பிஸ்கட் வகைகள்:

* விம் * பாதாம் * முந்திரி
* டின்னர் * பேபிலி பேர் * ஜெம்
※ ஸ்பெஷல்ஸ் ※

எமது தயாரிப்புக்கள்
சுவையும் சத்தும் மணமும் குணமும் நிறைந்தவை.
※
உன்னத தயாரிப்பே எமது இலட்சியம்

உரிமையாளர்கள்:— க. இ. சக்குலி நாடார் அன் சன்ஸ்.

"நாட்டின் அரசியலைப் பற்றிய — தலைவர்களைப் பற்றிய பிரச்சாரமே செய்தி."
"நாட்டின் கைத்தொழிலைப்பற்றிய-வணிகத்தைப்பற்றிய பிரச்சாரமே விளம்பரம்."

— போத்தன் ஜோசப் ஆசிரியர் "டான்"

— தமிழ்த்தென்றல்

மதுரையிலே மக்களின் நன்மதிப்புக்கும் பாத்திரமாகி அனுதினமும் அமோக ஆதரவுபெற்று வருகிறது

சிட்டி ஆக்ஷன் ஹால்

18, மேலாவணி மூல வீதி, மதுரை.
பிராஞ்ச்: 16, மேலக் கோபுரத் தெரு, மதுரை.

உறுதியான இரும்புப் பெட்டிகள், விதவிதமான தேக்கு, தோதகத்தி, கண்ணாடி, சாதா பீரோக்கள், இன்னும் இதர பான்ஸி சாமான்கள் சரசமான விலையில் வாங்கவும் விற்கவும் நம்பிக்கையான இடம்.

உரிமையாளர்:

எம். எஸ். வீரப்ப பிள்ளை.

'ராஜன்'

S. பாலு ரேடியோ சர்விஸ்

3, தானப்ப முதலி தெரு, மதுரை.

எல்லாவித ரேடியோ, ஆம்ப்ளிபையர்ஸ் ரிப்பேர்களும், *குறித்த காலத்தில், சிறந்த முறையில், குறைந்த சார்ஜில்* செய்து தரக்கூடும். புதிய பலவித ரேடியோ செட்டுகளும் எம்மிடம் கிடைக்கும்.

S. பாலு,
ரேடியோ என்ஜினியர்.

"ராஜன்"

— தமிழ்த்தென்றல்



ஏ. வி. பிஸ்கட்ஸ்

ஓர் சிறந்த உணவு.

எல்லா இடங்களிலும் கிடைக்கும்.

தயாரிப்பாளர்:—

அ. வள்ளிநாயகம் பிள்ளை & சன்ஸ்,

பிஸ்கட்ஸ் கம்பெனி,

தூத்துக்குடி.

— தமிழ்த்தென்றல்

விலை 4 அணா.

தமிழ்த் தென்றல்

ஆசிரியர்: V. V. இராமசாமி M. L. A.

" வடவேங்கடந் தென்குமரி

ஆயிடைத் தமிழ்கூறும் நல்லுலகம் "

கொடி 7	திருவள்ளுவராண்டு 1984 மாசித் திங்கள் 1வ. (12—2—'53)	பூ 4

உள்ளுறை.

		பக்கம்
ஆட்சி அரங்கிலே தமிழ்	... தலையங்கம்	7
மூன்றுவதுஉலகப்போர்	"	9
சென்னை ஆந்திரத் தலைநகராகக் கூடாது	... "	11
நன்றி	... "	12
எதிர்ப்பது எதுக்கு?	... "	13
விளம்பர மலர்!	... "	15
மைத்துனி (தொடர் நாவல்)	... ஜீவா	18
தனிமையிலே தவிக்க விட்டு?	... புதுமைவாணன்	28
சர் வில்லியம் காக்ஸ்டன்	... அன்பரசு	30
ரசிக சீமானே!	... தேனீ	34
மாப்பிள்ளைத் தோழன்!	... மு. கணேசன்	36
அறிஞர்களின் மனச்சாட்சி	... டர்பன் திரு.ச. மு. பிள்ளை	43
பூட்டிய வீட்டிற்குள் நுழைந்த...!	... "சாமி"	46
ஒரே புகையாய்ப் போச்சு!	... சேகர்	54
மொழியாராய்ச்சி	... வித்துவான் ந. சேதுரகுநாதன்	56
திரை உலகு	... ராஜம்	59

கதைகளில் வரும் பெயர்கள் கற்பனையே. கவிதை கட்டுரையாளரின் கருத்துக்களுக்கு ஆசிரியர் பொறுப்பாளியல்லர். தமிழ்த்தென்றலில் வெளிவரும் கட்டுரை, கதை முதலியன ஆசிரியர்க்கே உரியவை. ஆசிரியர் அனுமதியின்றி எவரும் அதைத் திரும்பவெளியிடும் உரிமையுடையவராகார். ஆசிரியர்.

ஆல் இந்தியா நேஷனல் பிராவிடெண்ட் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்,

தலைமை ஆபீஸ்: விருதுநகர்.

போர்டு-ஆப் டைரக்டர்ஸ்:

Thiru: V. V. இராமசாமி M. L. A.
,, M. S. பெரியசாமி நாடார்
,, K. M. A. C. வெயிலுமுத்துசாமி நாடார்
,, S. A. முத்து நாடார்
,, P. SV. P. ஏனுதிநாதன்
,, K. S. சண்முகவேல் நாடார்
,, R. பொன்னையா ஆச்சாரி
,, V. A. P. சிவசாமி
,, P. P. சபாபதி நாடார்

ரூ. 250. ரூ. 400. ரூ. 500. ரூ. 750. ரூ. 1000-க்கு

நவீன இன்ஷ்யூரன்ஸ் திட்டங்கள். தினம் ஓர் அணு சேமிக்க சாத்தியமுடையவர்களும் இன்ஷ்யூர் செய்துகொள்ளலாம். ஏஜண்டுகள், ஆர்கனைசர்கள் தேவை. விண்ணப்பிக்கவும்.

P. SV. P. ஏனுதிநாதன், ஏஜன்ஸி டைரக்டர்.

V. V. இராமசாமி M. L. A. மானேஜிங் டைரக்டர்.

— தமிழ்த்தென்றல்

209357

ஆட்சி அரங்கிலே தமிழ்.

"ஆந்திரத்தனிமாநிலம் அமைவது காலதாமதம் ஆகாது" என்று மக்களாதிபன் பிரசாத் கூறிவிட்டார். ஆகவே, அந்த மாநிலம் ஏற்படும் நாள் மட்டும் குறிக்கப்பட வேண்டியிருக்கிறது. அதுவும் சில நாட்களில் வெளியிடப்படுமென்று தெரிகிறது.

ஆந்திரர்கள் பிரிந்து தங்களுடைய நாட்டை நல்ல முறையில் வளமாக்கிச் சிறப்புடன் வாழவேண்டுமென்று வாழ்த்துகின்றோம்.

அவர்களுடைய தேவைக்குமேல் உணவுத்தானியங்கள் உற்பத்தி செய்கின்றபடியால் பசி, பஞ்சம் என்ற தொல்லைகள் அவர்களைத் துன்புறுத்தாது.

ஆனால் அபிவிருத்தித் திட்டங்களாகிய பெரிய நீர்த்தேக்கங்கள் அதன் வழியாக மின்சார உற்பத்தி முதலிய திட்டங்களுக்கு மூலதனம் வேண்டும். மேலும் தற்போதுள்ள அமைப்பின்படி நிர்வாகம் முதலிய செலவினங்களால் 5 கோடி ரூபாய் வரை குறைவு ஏற்படலாமென்று சொல்லப்படுகிறது.

இக்குறையை நிறைவு செய்து மேலிட்டுத் தேவையான மூலதனத்தைச் சேகரிப்பதற்குப் போதிய அறிவும் ஆற்றலும் தொலைநோக்கும் படைத்த சிறந்த நிபுணர்கள் ஆந்திராவில் இருக்கின்றனர். ஆகவே அவர்கள் தங்கள் குறிக்கோளைச் செம்மையாக நிறைவேற்றிக் கொள்வார்கள் என்பதில் ஐயமில்லை.

நாம் விரும்புவது எல்லாம் ஆந்திர நாடும் தமிழ் நாடும் ஒன்றுக்கொன்று நல்ல உறவுடன் வாழவேண்டுமென்பதும் தில்லி அரசாங்கத்தில் பெறவேண்டிய உரிமைகளையும் சலுகைகளையும் அடைவதற்கு ஒருமனப்பட்டு இயங்க வேண்டுமென்பதுமேயாகும்.

இந்நிலையில் ஆந்திரா பிரிந்தபின் எஞ்சிய நாடு தமிழகமாக மலரவேண்டுமென்பது மக்களின் விருப்பம். அதை அறிந்து ஆவன செய்யவேண்டியது அரசாங்கத்தாரின் கடமை.

இனி, நமது தாய்மொழியாகிய தமிழ் அரசாங்க மொழியாக ஆக்கப்படுவதற்குத் தடை எதுவும் இருப்பதற்கு நியாயமில்லை.

— தமிழ்த்தென்றல்

எனவே, ஆந்திர மாநிலம் நிறுவப்பட்டவுடன் நமது சென்னை அரசாங்கம் தனது அலுவல்களெல்லாம் இனித் தமிழ் மொழியிலேயே நடத்தப்படும் என்று பிரகடனம் செய்ய வேண்டும்.

அப்போதுதான் மக்களிடத்தில் ஒரு புதிய உணர்ச்சி தோன்றி நம் தமிழகத்தையும் நல்ல நிலைமைக்குக்கொண்டு வரவேண்டுமென்ற வீரமும், சங்கடங்கள் ஏற்பட்டால் அவைகளைப் பொறுத்துச் சமாளிக்கக்கூடிய ஆர்வமும் உண்டாகுமென்று கூறுகிறோம்.

புதிய தமிழகத்தை உருவகப்படுத்துவதிலும் அநேக சங்கடங்கள் இருக்கின்றன. பசி, பஞ்சம், வேலையில்லாத் திண்டாட்டம், உற்பத்திக்குறைவு, நிதி போதாமை முதலிய இன்னல்கள் பல உள. நாட்டு மக்களின் நன்மையைக் கருதி, தமிழகத்தின் பெருமையை முன்வைத்துச் சகலரும் ஒன்றுபட்டு உழைத்தால்தான் வளப்பம் உண்டாகும்.

கருத்து வேற்றுமை, தலைமைப்போராட்டம், சொந்த விருப்பு, வெறுப்பு, தனிப்பட்ட பொறாமை, கும்பல்கூடி வாது, கட்சிப்பாகுபாடு முதலியவைகளை எல்லாம் அடுத்த தேர்தல் வரும் வரையாவது ஒதுக்கி வைத்து, தலைவர்கள் எல்லோரும் ஒன்றுபட ஒரு பொதுமையான வழி காண வேண்டும். அப்படி வழி பிறக்கும் நாளே நன்னாள்.

அந்நாளை விரைவில் மலரும்படி செய்வது தொண்டர்களின் சிறந்த கடமையாகும்.

இப்பணியில் இறங்க முற்படுவார்களா? தமிழ் வெல்க!

அமெரிக்காவிலே தமிழ்மொழி!

"அமெரிக்காவிலுள்ள சர்வகலாசாலைகளில் ஹிந்தி, வங்காளி, தமிழ் ஆகிய மூன்று மொழிகள் மாணவர்களுக்குப் போதிக்கப்படுவதைக் கண்டு நான் பெரிதும் பிரமித்துப் போனேன்."

— அமெரிக்கச் சுற்றுப்பிரயாணத்திலிருந்து திரும்பிய காங்கிரசு பார்லிமெண்டரிக் கட்சியின் காரியதரிசியும் முன்னாள் நடுஇட அரசின் கைத்தொழில் வணிகத்துறை அமைச்சருமான திரு ஹரிகிருஷ்ண மகதாப்.

மூன்றாவது உலகப் போர்............?

அமெரிக்க நாட்டின் புதிய அதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் ஐசனோவர் என்ற தளபதி.

இவர் ஓர் சிறந்த போர் வீரர். இரண்டாவது உலகப் போரை வெற்றியுடன் முடித்து உலகப் புகழ் படைத்தவர்.

தான் பதவி ஏற்குமுன்பே, கொரியப் போர் முனையை அவர் நேரில் போய்ப் பார்த்து வந்தது, உலகம் அறிந்தது தான். ஆதலால் அவர் கொரியப் போரை விரைவில் முடிக்க வேண்டுமென்று திட்டம் தீட்டியிருப்பதில் வியப்பொன்றுமில்லை.

இந்தக் கொரியப் போர் முடிவதற்குப் பூர்வாங்கமாக ஒரு சமரச உடன்பாட்டுக்கு வருவதற்குக்கூட வர முடியாமல் ஐக்கிய நாடு சபை திண்டாடிக் கொண்டிருக்கிறது.

உலகத்திலே ஜனநாயகம் என்றும் பொது உடைமை என்றும் இரண்டு தத்துவங்கள் மக்கள் கவனத்தை ஈர்த்துக் கொண்டிருக்கின்றன.

ஜனநாயக வழியிலே இயங்கும் நாடுகளுக்குத் தலைமையாக அமெரிக்கா தன் செல்வாக்கைச் செலுத்துகின்றது. அதற்கெதிராக ரசியா பொது உடைமை வாதியாக விளங்குகின்றது.

இவ்விருநாடுகளுக்கிடையே இருக்கும் போட்டியானது ஐக்கிய நாடு சபையிலும் பிரிவை உண்டு பண்ணி விட்டது. ஆகையால் சமரசமாகக் கொரியப் போர் நிற்பதற்கு வழியில்லை.

ஐரோப்பாக் கண்டத்தில் ரசியாவுக் கெதிராக ஜெர்மனியை மீண்டும் ஒரு பலம் பொருந்திய நாடாக ஆக்குவதற்கு அமெரிக்கா தலைமையில் இங்கிலாந்து போன்ற நாடுகள் ஆதரவு அளித்து வருகின்றன.

— தமிழ்த்தென்றல்

ஆசியாக் கண்டத்தில் மீண்டும் ஜப்பான் தலை தூக்கினால் தனக்கு ஆபத்து நேரிடுமென்று சீன நாட்டை வலுவடையச் செய்வதற்கு ரசியா எல்லா ஆதரவும் கொடுத்து வருகின்றது.

செஞ்சீனவை பார்மோசாத் தீவில் உள்ள தேசிய சீனர்கள் படையெடுத்து விடாமல் தடுப்பதற்கு அமெரிக்கக் கப்பற்படை ஒரு அரணாக நின்றது. அந்தப் பாதுகாப்பு இருந்தபடியால் கொரியாவில் செஞ்சீன தன் வசதிக்கேற்ப நடவடிக்கைகள் எடுப்பதற்கு எளிதாக இருந்தது. கொரியப் போரில் மடிந்தது கொரியமக்களும் அமெரிக்கப் படை வீரர்களும் தான். ஆனால் சீன மக்களின் தொகை வெகு சொற்பமே என்று சொல்லலாம்.

கொரியப்போர் நீடித்துக்கொண்டே போவதையும் வீணுகத்தம் இளைஞர்கள் மடிவதையும் அமெரிக்கமக்கள் விரும்பவில்லை. ஆதலால் தம் நாட்டுமக்களின் அதிருப்தியை அறிந்த புதிய தலைவர் ஐசனோவர், செஞ்சீனவுக்கு ஒரு அபாய நிலைமையை ஏற்படுத்தினால்தான், கொரியாவில் போரை நிறுத்துவதற்குச் செஞ்சீனவை நிர்ப்பந்தப் படுத்தமுடியுமென்று கண்டறிந்திருக்க வேண்டும். அதோடு செஞ்சீனவிற்கு ஒரு புதிய தொல்லை ஏற்படுத்தப்பட்டால், ரசியாவிற்கும் சங்கடங்கள் ஏற்படும் என்றும் தெரிந்திருக்கவேண்டும்.

இவைகளையெல்லாம் எதிர்நோக்கித்தான் பார்மோசாவிற்கும் சீனவிற்கும் இடையே இருந்த கப்பற் படையை அப்புறப்படுத்தியிருக்கிறார் என்று நினைக்கின்றோம்.

ஆனால் மூன்றாவது உலகப் போர் வந்து விடுமென்பதற்கு இடமில்லை. ஏனென்றால், உலகம் பூராவையும் சில நாட்களில் அழித்து விடுவதற்குரிய நாசக்கருவிகளெல்லாம் அமெரிக்காவிலும் ரசியாவிலும் குவிந்து கிடக்கின்றன.

ஆகவே இருநாடுகளும் மோதினால் உலகமே அழிந்து விடும். அவ்வளவு அழிவு வேலைகளுக்கான இழிநிலைக்கு இன்னும் மனிதன் வந்து விடவில்லையென்று கருதுகிறோம்.

— தமிழ்த்தென்றல்

"சென்னை ஆந்திரத் தலைநகராகக் கூடாது"

நீதிபதி வாஞ்சு — நமது ஆசிரியர் சந்திப்பு.

ஆந்திர மாநிலப் பிரிவினை சம்பந்தமாக ஆய்வுரை நடத்த நடுஇட அரசினர் அனுப்பியிருந்த நீதிபதி கே. என். வாஞ்சுவை நமது ஆசிரியர் **15-1-'53** சென்னையில் சந்தித்துப் பேசிய பொழுது பின்வரும் குறிப்புகளையும், புள்ளி விவரங்களையும் கவனத்திற்கெடுத்துக் கொள்ள வேண்டுமென்று அறிவித்தார்கள்.

1. தலைமை அமைச்சர் அறிக்கையிலிருந்த (அ) சென்னை தமிழ் நாட்டின் ஒரு பகுதியே. (ஆ) ஆந்திரத் தலைநகரம் சென்னையில் இருக்காது. (இ) சென்னை நகர் 'சி' பிரிவு மாகாணமாக ஆக முடியாது என்ற கருத்துக்கள் தெளிவாக உள்ளன.

2. இந்தியாவும் பாகிஸ்தானும் பிரிந்தது போலவோ, இந்தியாவும் பர்மாவும் பிரிந்தது போலவோ, தனியாட்சிகள் பிரிவினை அடிப்படையில் இப்பிரிவினையைக் கருதக் கூடாது.

சிந்துவும் ஒரிசாவும் பிரிக்கப்பட்ட முறையிலேயே இது அமைய வேண்டும், 1935 ஆம் ஆண்டுச் சட்டம் 55-ஆவது பிரிவில் இரண்டாவது துணை பிரிவைக் காண்க. இதன் பொருளாவது:—

(அ) இவ்விரு மாகாணங்கள் நிதியைப் பொறுத்த மட்டிலும் தனித்தியங்க வைப்பது மத்திய அரசாங்கத்தின் கடமையாகும். (ஆ) பிரிவினை பின்பின் மிகுந்துள்ள மாகாணம் ஆந்திர மாகாணத்திற்கு எவ்வித நட்டஈடும் கொடுக்க வேண்டிய பிரச்சினையே எழாது.

(இ) ஒவ்வொரு மாகாணமும் தாங்கள் அணைக்கட்டுத் திட்டங்களால் பட்ட கடனைத் திருப்பித் தர வேண்டிய பொறுப்பைத் தாங்களே ஏற்றுக் கொள்ள வேண்டும்.

3. சென்னை சிறிது காலத்துக்குக்கூட ஆந்திரரின் தற்காலிகத் தலைநகராகவும் இருக்கக் கூடாது. அதே போல ஆந்திரருக்கென ஒரு தனி உயர் நீதி மன்றம் ஆந்திர எல்லைக்குள்ளேயே அமைக்கப்பட வேண்டும். ஏனெனில்,

(அ) இருவருள்ளும் நல்லுறவு கிடையாதென்பது ஏற்கனவே தெளிவாகியுள்ளது.

(ஆ) அதிகாரம், கட்டுப்பாடு இவற்றில் உண்டாகும் குறைபாடுகளால் குழப்பமும் தடங்கலும் விளையும்.

(இ) ஆந்திர மாகாணம் அமைக்கப்பட வேண்டும் என்று தீர்மானம் செய்தது மத்திய அரசாங்கம். ஆகவே அவர்களே ஆந்திர எல்லைக்குள் அமைந்த ஒரு தலைநகர் தேடிக் கொடுக்க வேண்டும். இந்த ஏற்பாட்டை வெகு விரைவில் தொடங்க வேண்டும்.

— தமிழ்த்தென்றல்

4. மலபார் உணவுப் பற்றாக்குறைக்கு ஆளாகியுள்ளது. மிகுந்த மாகாணத்தின் ஒரு பகுதியே மலபாராகும். ஆகவேமிகுந்த மாகாணத்தின் உணவுப் பற்றாக்குறை மலபாரின் உணவுப் பற்றாக்குறையே. இது ஆண்டொன்றுக்கு 3,20,000 டன்களாகும். ஆகவே மலபாருக்கு உணவளிக்க மட்டும் இம் மிகுந்துள்ள மாகாணம் ஆண்டொன்றுக்குச் சுமார் 4 முதல் 5 கோடி ரூபாய்கள வரை செலவு செய்ய வேண்டியுள்ளது. மலபாரைத் திருவாங்கூர் — கொச்சியுடன் எளிதில் சேர்த்து விட்டு அங்குள்ள தமிழ்ப் பகுதிகளான நாஞ்சில் நாடு, செங்கோட்டை முதலியவற்றை மிகுந்துள்ள மாகாணத்துடன் இணைத்துக் கொள்ள வேண்டும். தற்போதுங்கூட மலபாரிலிருந்து கிடைக்கும் வருமானம் இரண்டரைக் கோடி ரூபாய்கள். ஆனால் அதற்காகும் செலவினமோ மூன்றரைக் கோடி ரூபாய்களாகும். ஆகவே ஒருகோடி ரூபாய் துண்டு விழுகிறது. இதனால் மலபாரை மிகுந்துள்ள சென்னை மாகாணத்துடன் சேர்ப்பதானால் ஆண்டொன்றுக்கு மத்திய அரசாங்கம் 6 கோடி ரூபாய்கள் கொடுக்க வேண்டும். மலபார் மாவட்டம் வணிகப் பொருள்களை உற்பத்தி செய்கிறது. இவை ஏற்றுமதி செய்யப் படுகின்றன; இதனால் கிடைக்கும் வருமான வரி மத்திய அரசாங்கத்திற்குத் தான் செல்லுகிறது. மிகுந்துள்ள மாகாணத்தில் தொழில் உற்பத்திப் பெருக்கமும் விவசாயப் பெருக்கமும் ஏற்படுவதற்காக உடனே 15கோடி ரூபாய்கள் வரை கொடுத்துதவ வேண்டும். இல்லாவிட்டால் ஐந்தாண்டுத் திட்டம் வெற்றி பெற இயலாது.

5. ஆந்திர மாகாணம் அமைக்கப்படுவதுடன் ஒரு எல்லைக் குழுவையும் ஏற்படுத்திச் சச்சரவுக்காளான பகுதிகளைப் பற்றி ஆராயுமாறு கேட்டுக் கொள்ள வேண்டும். இந்த எல்லைக்குழு பரம்பரையாகத் தமிழ் நாட்டின் எல்லையாக இருந்து வருவனவற்றை மதிக்க வேண்டும். அதாவது தமிழ் நாடு வடக்கே திருப்பதியிலிருந்து தெற்கே கன்னியாகுமரி வரை பரவியதென்பதை நினைவிலிறுத்திக் கொள்ள வேண்டும்.

நன்றி

எங்கள் ஆசிரியரின் 12—12—52-ம் நாளிட்ட சென்னை மாநகரின் மீது தமிழர்களுக்கு உள்ள உரிமையையும் தமிழக எல்லையையும் வலியுறுத்தும் தீர்மானத்தை நிறைவேற்றி எமக்கும், சென்னை முதல் அமைச்சருக்கும் அனுப்பிவைத்த எல்லா நகராட்சி மன்றங்களுக்கும் மாவட்ட நிர்வாக மன்றங்களுக்கும் (ஜில்லா போர்டுகள்) எமது நன்றி உரித்தாகுக.

— தமிழ்த்தென்றல்

எதிர்ப்பது எதுக்கு?

முந்திய சட்டசபையிருந்த காலத்தில் அரசாட்சி நடத்தியதும் காங்கிரசு கட்சிதான்.

அந்தக் காலத்தில் அக்கட்சியைச் சார்ந்தவர்கள் பலர் தங்களுக்கும் சீர்திருத்த ஆவல் உண்டென்றும், திராவிட உணர்ச்சி தங்களுக்கு இல்லையென்று சொல்லமுடியாது என்றும் பெருமையோடு விளம்பிக்கொள்வார்கள்.

ஆனால் தங்கள் முற்போக்குக்கருத்துக்களை வெளிப்படையாகக்காட்டிக் கொள்ளத்தான் முன் வரமாட்டார்கள்.

சாதிகள் ஒழியவேண்டும். மதத்திமிர் அழியவேண்டும். மூடக்கொள்கைகள் தகர்க்கப்படவேண்டும். வடநாட்டார் ஆதிக்கம் நீக்கப்படவேண்டும் என்றெல்லாம் தனிப்பட்ட நேரங்களில் அள்ளி வீசுவார்கள்.

ஆனால், அப்படிப் பேசியவர்களெல்லாம் இப்பொழுது பக்த கோடிகளாக மாறிவருகிறார்கள்!

மழையில்லாமல் போனதற்கும், பஞ்சமும் பிணியும் தாண்டவமாடுவதற்கும் காரணம் திருநடனம் புரியும் தில்லைவாசனை மக்கள் மறந்துவிட்டார்கள்; மதக் கோட்பாடுகளை மதித்து நடப்பதில்லை; மக்களிடையே அன்பு மனப்பான்மை நிலவாமல், வெறுப்புணர்ச்சியே அதிகரித்து வருகிறது. மேடைகளிலும், நாடகங்களிலும், பேசும்படங்களிலும், மதத்தையும், கடவுளையும், சமூகக்கட்டுப்பாடுகளையும் இழிவு படுத்தும் வழிகளே கையாளப்படுகின்றன.

இவையெல்லாம் தடுக்கப்படாவிட்டால் நாத்திகம் பரவி நாடு கெட்டுவிடும் என்று அங்கலாய்க்கிறார்கள்.

இந்த அங்கலாய்ப்புக்கு ஆளான குற்றவாளிகள் என்னசெய்கிறார்கள்? அவைகளை எப்படித் தடுப்பது?

தங்கள் கட்சியின் பெருமையையும், கொள்கைகளின் உயர்வையும், தலைவர்களின் செயல்களையும் பாராட்டும் வழியாக, பாடல்களிலும் ஆடல்களிலும், படங்களிலும், பேச்சுக்களிலும் மறுப்புக்குரிய முறைகளை கையாண்டுவந்தனர் ஒரு சாரார். அவைகளைக் கண்டிக்கவோ, எதிர்க்கவோ, தடுக்கவோ ஒருவரும் முற்படவில்லை.

ஆனால் சமூகச் சீர்திருத்த வாதிகள் தங்கள் கொள்கைகளை மேடைகளிலும் படங்களிலும் எடுத்துச் சொன்னால், ஆத்திரம் பொங்குவானேன்? குற்றமிருந்தால் களைந்தெறிவது தானே அறிவுடைமையாகும்? அதை விடுத்து வெறும் வசவுக்கென ஆட்களைத் தயாரித்து மேடையில் ஏற்றிப் பேச விட்டால் போதுமா? மக்கள் மயக்கம் எவ்வளவு நாட்களுக்கு நிற்கும்? அதும் தெளிந்து பகுத்து உணர்ந்தவுடன் எது மெய்யென்று கண்டு கொள்வார்களே!

— தமிழ்த்தென்றல்

சாதி ஒழிப்பு உணர்ச்சி ஒருவனுக்கு ஏற்படுமாகில், தன் சாதிப்பெயரை விட்டொழிக்க வேண்டுமென்றும், கலப்பு மணத்தை ஆதரிக்க வேண்டுமென்றும் மக்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. இந்த இரண்டு திருத்தங்களையும் பெருமிதமாக மேற்கொண்டு, பயனடைந்து வருபவர்கள் யார்? மதத்தின் பெயரால் தன்னை உயர்ந்தவனென்றோ, அல்லது மாறுபட்டக் கருத்துக் கொண்டவனென்றோ காட்டக்கூடிய மதக் குறிகளை நெற்றியில் அணிந்து கொள்ளக் கூடாது என்று தீர்மானித்ததை அனுசரித்து அனுகூலம் பெற்று வருபவர்கள் யார்? திருமணச் சடங்குகளைப் பொருளில்லாமல் வீணாகப் பலநாட்கள் நடத்தி நேரத்தையும் பணத்தையும் செலவாக்காதே என்று சொன்னதைக் கேட்டு, சிக்கனமாக்கிக் கொண்டது யார்? கோவில்களிலும், திருவிழாக்களிலும் செல்வத்தைப்பாழாக்காதே என்று சொல்லியதை ஒப்புக் கொண்டு தொழிற்சாலைகளிலும், கல்வி நிலையங்களிலும் கருத்தைச் செலுத்திப் பயன் பெற்று வருவதோடு, கண்காட்சிகளையும், இசை, நடன, அரங்குகளையும் ஏற்படுத்தி, திருவிழாக்களைமறந்து வருவது யார்? 'கடவுள் பெயரைச் சொல்லி மற்றவனை இழிவு படுத்தாதே, மதத்தைக் காட்டி மனிதனை மடக்காதே, நீயும் பகுத்தறிவை இழந்து விடாதே என்று விளம்பியதைக் கேட்டு எங்களுக்கெல்லாம் சாதியும் கிடையாது; மதமும் கிடையாது; கோவிலுக்குப் போவதே கிடையாது; கடவுளைப்பற்றி எனக்குப் பயமேயில்லை; என் மனச் சாட்சி தான் கடவுள்; அன்புப்பணி தான் என் மதம், என்ற திருந்திய பேச்சின் குரல் யாருடையது?

தம்பி! யோசித்துப்பார், கோவிலை இடிக்கவேண்டுமென்கிறார்களே, கடவுள் இல்லையென்று சொல்லுகிறார்களே, மதம் மக்களுக்கு அபின் என்று உரைக்கிறார்களே என்று அங்கலாய்க்கிறாயே தம்பி! —பொறுமையுடன் சிந்தித்துப்பார். கடவுள் யார் என்ன செய்தாலும், சொன்னாலும் அசையாது, பயப்படாதே. உன் நெஞ்சம் தூயதாயிருக்க வேண்டுமே. கடவுளின் பெயரைச் சொல்லி, கடவுளுக்கு விருப்பு வெறுப்புக்காட்டி, கடவுளைக் காட்டி மனிதனுக்கு மனிதன் பேதத்தை உண்டாக்குகிறாயே. அதற்குத்தான் உன்னை தூற்றுகின்றனர். மனிதன், தன் முயற்சியில், தன் அறிவில் நம்பிக்கையிழக்கும்படி மதத்தின் பெயரால் மூடக்கொள்கைகளை நிரப்பி வைத்திருக்கின்ற படியால் அவைகளை நொறுக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். நாட்டில் பலபாகங்களிலும் கட்டப்பட்டிருக்கும் பெரிய பெரிய கோவில்களை, மக்களின் ஒழுக்க வளர்ச்சிக்காக, அறிவுப் பெருக்கத்துக்காக, உடல் நலம் பேணுவதற்காக, பயன்படுத்தவேண்டும். இல்லையேல் நாளடைவில் கெட்டுத் தூர்ந்துவிடும் என்று சொன்னால் இதில் அழிவு வேலை என்ன இருக்கிறது?

ஒவ்வொரு கோவிலிலும், ஒரு பல்கலைக்கழகம் வைக்க முடியாதா? பெரிய மருத்துவச்சாலை அமைக்க முடியாதா? நூல் நிலையங்களும் படிப்பகங்களும் நிறுவமுடியாதா? இப்பேர்ப்பட்ட நற்காரியங்களுக்குக்கட்டடம் இல்லாமலும், கட்டுவதற்கு நிதியில்லாமலும் அரசாங்கமும், நிபுணர்களும் திண்டாடுவது தெரியாதா? தெரிந்தும், உணராமலிருப்பதேன்?

“ஆனபடியால் கோவிலும் இருக்கட்டும், கடவுளுமிருக்கட்டும், ஆண்டவனின் சின்னம் இருக்கும் இடம் வரைக்கும் போகிற எவனையும் தடுக்காதே. இடத்தைச் சுத்தமாக வைத்துக் கொள்வதற்கு மட்டும் ஒரு பாது

காப்பாளை மட்டும் வைத்துக் கொள். தமிழகத்தில் உள்ள கோவில்களில் தமிழன் என்று சொல்லும் யாரும் தமிழிலேயே தனக்குகந்த பாடல்களைப் பாடி பரவசமடையட்டும். தன் விருப்பப்படி தொழட்டும். நடுவில் மாத்திரம் ஒருவரும் நிற்க வேண்டாம். தனக்கும் பிறருக்கும் தெரியாத மொழியில் எதுவும் நடக்கப்படாது.”

இப்படி எதிர்ப்புப் பிரசாரஞ் செய்துபாருங்கள்.

வீரமத அதிபர்களே! வேறு போக்கில்லாமல் அவர்களைச் சுற்றித் திரியும் மேல் அங்கியில்லாத வெள்ளை வேட்டித் தம்பிரான்களே! கொஞ்சம் சிந்தனை செய்து இழிவுக்கும் குறைபாடுகளுக்கும் காரணம் யாவை என்று கண்டறிந்து அவைகளைக் களைந்தெறிய முன் வாருங்கள்.

அப்பொழுது தெரியும் உண்மையான ஆதரவாளர்கள் யார் என்று.

விளம்பர மலர்!

இந்திய நாட்டின் பண்டைக் காலத்து வரலாற்றைப் பற்றிய நூல்கள் பல உள. அவைகள் பெரும்பாலும் ஆங்கிலேயர்களால் வரையப்பட்டனவாயிருக்கின்ற படியால், நம் நாட்டினருக்கு இழுக்குத் தரக்கூடிய பான்மையிலே இருக்கின்றன வென்று கூறப்படுகிறது.

அதாவது இந்தியரின் நற்குணங்களும், பண்பும் உண்மையாகக் காட்டப்படவில்லை யென்று சொல்லலாம். ஆங்கிலேயர் இந்த வருமுன், நாடோடிகளாக வந்து பார்த்துத் திரும்பிப் போன, சீன, கிரேக்க நாட்டு அறிஞர்கள் எல்லாம் குமரி முதல் இமயம் வரையில் அந்தந்தக் காலத்தில் வாழ்ந்த மக்களைப் பற்றியும் அரசாண்டமன்னர் பரம்பரையைப் பற்றியும் உண்மையாகவும், பெருமையாகவும் கூறியிருப்பதுடன், நாட்டில் பலதுறைகளிலும் மக்கள் சமுதாயம் எப்படி இயங்கியது என்பதையும் விளக்கியிருக்கின்றனர். அக் குறிப்புகளைப் பார்த்தால்அந்தக் காலத்துவரலாறு உண்மையாகப் புலனாகும்.

ஆனால் அதற்குப் பின்னர் இங்கு வந்து குடி ஏறி, அரசுரிமையையும் கைப்பற்றிய இனத்தாரின் வழிவந்த ஆசிரியர்களின் நூல்களோ, இலக்கியங்களோ, காவியங்களோ, இந்நாட்டு பழங்குடி மக்களாகிய திராவிட இனத்தாரின் நாகரிகத்தை மறைத்து ஆரிய நாகரிகத்தையும், பழக்க வழக்கங்களையும் சிறப்புறச் செய்யும் வண்ணம் அமைந்திருக்கின்றன.

ஆங்கிலேய ஆசிரியர்களும் தங்கள் மேம்பாட்டையும், அரசாட்சியையும் வலியுறுத்துவதில் கண்ணும் கருத்துமாயிருந்திருக்கின்றார்கள். தங்கள் நாட்டின் வரலாற்றை எழுதிய ஆங்கில ஆசிரியர்கள் ரோமாபுரி 'சீசர்'நார்மண்டி நாட்டு 'வில்லியம்' போன்ற வீரர்களின் படையெடுப்பைப் பற்றியும், தம் மக்களின் வீர எதிர்ப்புக்களைப் பற்றியும் உண்மையாக எழுதிப் பெருமைப்படுகிறார்கள். ஆனால் இந்திய நாட்டில் சிதறிக்கிடந்த பற்பல குட்டி அரசர்களிடையே நிலவிய குரோதத்தையும், பிளவையும் மிகைப்படுத்தித் தாங்கள் தான் நாட்டை ரட்சிக்க ஆண்டவனால் அனுப்பப்

பட்டவர்களென்ற நம்பிக்கையை இந்திய மக்கள் பால் வேரூன்றும்படி செய்திருக்கிறார்கள்.

மேலும் வரலாறு எழுதுகிறவர்களெல்லாம் வட மேற்குக் கணவாயிலிருந்து தடபுடலாக ஆரம்பித்து மத்திய மாகாணம் வரை விரைவாக வந்து, அப்புறம் தெற்கே வர வர, ஏனோ தானோ வென்று மழுப்பி விடுகிறது தான் வாடிக்கை.

தென்னாட்டின் குறிப்பாக தமிழகத்தின் உண்மையான வரலாறு இந்த ஆசிரியர்களின் கண்களில் பட்டதேயில்லை. யாரும் கண்டறிய கவலைப்பட்டதாகவுமில்லை.

ஆகவே இந்திய நாட்டின் உண்மையான வரலாறு இல்லையென்று கூறிவிடலாம். சரியானபடி தொகுக்கவேண்டுமானால், தெற்கே குமரிமுனையிலிருந்து எழுதினால் தான் நேர்மைக்கும் வாய்மைக்கும் வணங்கியவர்களாகக் கருதப்படும்.

இந்நிலையில் தில்லியில் உள்ள நடு இடத்து அரசாங்கத்தினர் இம்முயற்சியில் ஈடுபட இருக்கின்றனர்.

நாடு முழுவதற்கும் ஒரே விதமான கல்வித் திட்டம் வகுக்கப்பட வேண்டுமாம். கலைவளர்ச்சியையும் ஒழுங்குபடுத்தவேண்டுமாம். வரலாறும் புதிதாக எழுதப்படுமாம்.

இவ்வித பல கோளாறுகளுக்கெல்லாம் காரணம் கல்வித்துறை அமைச்சர் "அப்துல்கலாம் அசாத்" என்னும் புண்ணியவான் தான்.

ஆங்கிலேய அரசாட்சியை எதிர்த்துப்போராடிவிடுதலையைப்பறித்தது காங்கிரசு மகா சபையாம். ஆகலால் அதை "விடுதலைப் போர் விளக்கம்" என்று ஒரு தொகுப்பு நூல் தயாரிப்பதற்கு ஒருகுழு ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிகிறது.

அதன் வேலையையும் அமைச்சர் அசாது தொடக்கி வைத்திருக்கிறார்.

இந்த நூல் 1857-ஆம் ஆண்டில் நடைபெற்ற இந்தியசிப்பாய்க்கலகத்திலிருந்து ஆரம்பிக்கலாம். எப்படி யிருந்தாலும் இந்திய நாட்டின் ஒரு நூற்றாண்டு கால வரலாறாகவே அது மிளிரும் என்பதில் ஐயமில்லை.

எக்கட்சித் தொடர்புமில்லாத பொது நோக்குப் படைத்த ஆராய்ச்சி நிபுணர்களால் தான் உண்மையை உணர்ந்து, விருப்பு வெறுப்பு இல்லாமல், எல்லோராலும் ஒப்புக் கொள்ளக் கூடிய முறையில் தொகுத்துத் தர முடியும்.

அதை விடுத்து ஆளும் அதிகாரம் படைத்த ஒரு கட்சியின் ஆதிக்கத்தில் வெளி வரும் வரலாறு அக்கட்சியின் விளம்பர மலராகவே தான் வெளியிடப்படும் என்று மக்களுக்கு எச்சரித்துக் கொள்கிறோம்.

— தமிழ்த்தென்றல்

பருத்தி நூல்களுக்குப் பிரதான ஸ்தாபனம்

மதுரை மில்ஸ் கம்பெனி லிமிட்.

போன்: 250 (4லைன்) — மதுரை — தந்தி: "ஹார்வி"

மதுரை-தூத்துக்குடி-அம்பாசமுத்திரம்

5,00,000 நூற்கும் கதிர்கள் — நெம்பர் **80** வரை நூல்கள்

நாங்கள் சப்ளை செய்வது

கைத்தறி, இயந்திரத் தறி, பின்னல் தறிகளுக்கு வேண்டிய காரிக்கன் நூல்கள், இயந்திர நெசவுக்கேற்ற வார்ப்பு நூல்கள், கனத்த வெப்பிங், கான்வாஸ் முதலியவைகளுக்கேற்ற மடக்கு இரட்டை நூல்கள் மற்றும் பின்னல் இயந்திர நெசவுக்கேற்ற மிருதுவான சன்ன நூல்கள்.

எங்கள் எகிப்திய பருத்தி நூல்கள் இறக்குமதியாகும் நூல்களைப்போல் எல்லா வகையிலும் கீர்த்தி பெற்றவை.

நாங்கள் நூற்பதைத் தவிர நெய்வதில்லை.

மானேஜர்கள்:

ஏ. & எப். ஹார்வி லிமிடெட்,

மதுரை.

போன்: 420 (4 லைன்) — தந்தி: "ஹார்வி"

— தமிழ்த்தென்றல்

தொடர் நாவல்

மைக்குளி

ஜீவா

பி. எஸ். ஸி., ஆனர்ஸ் பரீட்சையில் பாஸாகாமல் போனதற்குப் பொது விவகாரங்களில் ஈடுபட்டது தான் காரணம் என்று தந்தையார் படித்துப் படித்துச் சொல்லிக் கண்டித்துங் கூட, சிவகுமாரன் தன் போக்கை மாற்றிக் கொள்ளாமல், அரசியலில் அதிகமாக ஈடுபட்டுவருவதை அறிந்து திலதவதியம்மாள் வெகுவாக வருந்தினாள். வெளிப்பார்வைக்குத்தான் எதிலும் கலக்காதது போல் பாவனை செய்து வந்தாலும், அந்தரங்கத்தில் அவன், அரசியல், சமூகக்கிளர்ச்சிகளில் தீவிரமாகக் கலந்து வேலை செய்து வருகிறான் என்ற செய்தி பிள்ளையவர்களுக்கு மாசிலாமணி முதலியார்,முதலியவர்கள் வாயிலாக எட்டத்தான் செய்தது. சிவகுமாரன் கம்யூனிஸ்டு கட்சியிலும், விசுவநாதன் திராவிட முன்னேற்றக் கழகத்திலும் சேர்ந்து முக்கிய பங்கெடுத்துக் கொள்கிறார்கள் என்பது திட்டவட்டமாகத் தெரிந்து விட்டது. 'தகப்பன் காங்கிரஸ்காரர்; பிள்ளைகள் காங்கிரஸுக்கு நேர் விரோதமான கட்சிகளில் — காங்கிரஸ் செல்வாக்கைக் குலைப்பதையே குறிக்கோளாகக் கொண்ட எதிர்க் கட்சிகளில் — சேர்ந்திருக்கின்றனர்' என்று சதானந்தம் பிள்ளையவர்களைக் குறை கூற முயன்றவர்கள் கேலியாகச் சொல்லலாயினர்.

பிள்ளைகளின் வெளிவிவகாரம் பகிரங்கமாகத் தெரிந்த பின்னர் திலதவதிக்குப் பயம் அதிகமாய் விட்டது. 'விசுவர் தி. மு. க. வில் சேர்ந்திருப்பது கூடப்பாதகமில்லை. சிவன் போய் அந்தச் சதிகாரக்கட்சியில் தொடர்பு வைத்துக்கொண்டிருப்பதுதான் எனக்கு மனவேதனையாயிருக்கிறது. கம்யூனிஸ்டுகள் பலாத்கார முறையைவிட்டுவிட்டார்கள்; வேலைத்திட்டத்தை மாற்றிக் கொண்டார்கள் என்று சொல்லப்பட்டாலும், அதைச் சட்டரீதியான கட்சி, நேர்மையான அரசியல்கட்சி என்று நம்மால் நம்பமுடியாது. அரசாங்கமும்—மத்திய அரசாங்கங்கூடத் தான் — அதை நம்பாமலேயிருந்து வருகிறது. இந்நிலையில் இவன்போய் அதின் நடவடிக்கைகளில் கலந்து கொள்வது—அல்லது அனுதாபம்

— தமிழ்த்தென்றல்

காட்டுவது—கொள்ளிக்கட்டையைக் கொண்டு தலையைச்சொரிந்து கொள்வதுபோலல்லவா ஆகும்?...' என்று ஒருநாள் இவர் கணவர் தம் நண்பரொருவரிடம் சொல்லிக்கொண்டிருந்ததைக் கேட்டதும் வேதனை இவள் நெஞ்சத்தைத் துளைத்தது. மாசிலாமணி முதலியார் அன்றொருநாள் எச்சரித்ததுபோல், இன்று ஆட்சிபீடத்திலிருக்கும் தன் கணவனுக்கு வேண்டாதவர்கள், இவர் மீதுள்ள ஆத்திரத்தைத் தீர்த்துக்கொள்வதற்காக, சிவனை அரசாங்கத்துக்கு எதிரான கம்யூனிஸ்டுகளின் நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறான் என்று ஏதாயினும் காரணங்காட்டிச் சிறையில் தள்ளிவிட்டால் என்ன செய்வது என்று எண்ணியங்கினாள். இப்பயங்கரநினைவு அவளைப்பாகாய் உருக்கிவிட்டது.

அவள் கணவர் சமீபத்தில் பழநிசாமிப்படையாச்சியிடம் தெரிவித்ததுபோல், சிவன் சிறுபையனாயிருந்தாலும் இரண்டு அறை அறைந்து அதிலெல்லாம் சேராதே என்று பயமுறுத்திப் புத்தி சொல்லலாம்; தலைக்குமேலே மூத்து விட்டபிள்ளையை எந்த விதமாகக் கண்டிப்பது? மிஞ்சிக் கண்டித்தால் மீறி விட்டால் என்ன செய்வது? கொஞ்ச நஞ்சமுள்ள மரியாதையுமல்லவா கெட்டுப் போகும்? ஆகவே, கணவன் இதைக் கண்டும் காணாமல் அறிந்தும் அறியாமல் போவதுதான் நல்லது என்று அவள் எண்ணினாள். பிள்ளைகள் தன் கணவனை எதிர்த்துக் கொள்ளும் நிலை ஏற்படக்கூடாதே கடவுளே! என்று அவள் பிரார்த்திக்கலானாள்.

ஆனாலும் திலதவதிக்குச் சிவன் மீது மனத்தாங்கல் ஏற்படத் தான் செய்தது,பரீட்சைபெயிலாய் விட்டதைக் கேட்டு — பெயிலானதற்கு இன்னது தான் காரணம் என்று அறிந்து — ஆட்சியிலுள்ளவர்கள் அவன் மீது அடக்குமுறையைக் கையாளக்கூடும் என்று கேட்டு அவள் அஞ்சினாளோ — அந்த அச்சத்தாலேயே அதிர்ச்சியடைந்து முடக்குவாதத்தில் முடங்கி விட்டாளோ — அந்த மூத்த மகன் தன்னைப்பற்றி அவ்வளவாகக் கவலைகொள்ளாமல் தான் தோன்றித்தனமாகத் திரிந்து விட்டு வருவது — செப்டம்பரில் பரீட்சை எழுதிப் பூர்த்தி செய்யப் போகிறேன் என்று சொல்லிப் பின் அவ்விதம் செய்யாமல் — 'சரியாகப் படிக்கவில்லை; நன்றாகப் படித்து மார்ச் பரீட்சைக்குப் போகிறேன்' என்று கூறி வீண் பொழுது போக்கிக் கொண்டு தந்தையின் நற்பெயரையும் குடும்பக் கௌரவத்தையும் கெடுத்து வருவது அவளால் சகிக்கக்கூடாததாய் விட்டது. அதை நினைத்து நினைத்தே அவள் நெக்கு நெக்குருகி விட்டாள். இவ்விதம் மனநோய் முற்ற முற்ற உடலைப் பற்றிய வியாதி எப்படிக் குணப்படும்? எந்த மருந்து தான் எப்படிப் பிடிக்கும்? ஆகவே,அவள் உடல் நிலை நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டு தான் வந்தது. இந்நிலையிலும் அவளுக்கு ஒரேயொரு ஆறுதல் மங்கையர்க்கரசி — ஒன்று விட்ட சகோதரியா

— தமிழ்த்தென்றல்

யிருந்து உடன் பிறந்த சகோதரியை விட உறு துணையாயிருந்து வரும் மங்கையர்க்கரசி தன் குடும்ப நிர்வாகப்பொறுப்பை ஏற்றுக்கொண்டு திறமையாக நடத்தி வருவதும், தன் கணவனுக்கும் பிள்ளைகளுக்கும் யாதொரு குறைவுமின்றி அக்கரையாகக் கவனித்துக் காரியங்களைச் செய்து வருவதும் கண்டு வியப்புற்றாள். அத்துடன், மங்கை சிறு பிள்ளைகளை நன்கு பராமரிப்பதோடு, சமயம் நேரும் போது சிவகுமாரனுக்கும் விசுவநாதனுக்கும் புத்தி சொல்லித்திருத்தமுயல்வதையறிந்து அவள் நெஞ்சம் நன்றியால் நெகிழ்ந்தது.

இவ்விதம் திலதவதி பலவித நினைவுகளால் சதா அலைக்கப்படுவதை அவள் சரீரம் தாங்கவில்லை. அது மிகவும் சோர்ந்து போய்விட்டது. ஒருநாள் திடீரென உடல் நிலை மிக மோசமாய் விட்டது. பொங்கலுக்கு முன்னாள் இரவு அவள் நிலை கவலைக்கிடமாய் விட்டது. ஊர் முழுதும் மக்கள் பீடைமாதம் கழிந்து புத்தாண்டு பிறந்து வாழ்க்கை மகிழ்ச்சி பொங்கப் போகிறது; வீடுகளில் பால்பொங்கவைக்கப்போகிறோம் என்று பூரிப்புக்கொண்டு, போகிப்பண்டிகையில் பழசுகளையெல்லாம் தீக்கிரையாக்கி மேளமடித்து எண்ணெய் தேய்த்து முழுகிக் கோடியாடை உடுத்திக் குதூகலமாயிருக்கும் சமயத்தில், சதானந்தம் பிள்ளை வீடு துக்கமும் அழுகையுமாய் இருந்தது. திலதவதியின் படுக்கையைச் சுற்றி எல்லோரும் கவலையோடும் கண்ணீரோடும் கை பிசைந்து கொண்டு நின்றிருந்தனர்.

தனக்கு ஆயுள் குறுகிவிட்டது. இனி தன் உயிர் உடல் கூட்டிலிருந்து எந்தக் கணத்திலும் பிரிந்து விடக் கூடும் என்று நன்கு அறிந்து கொண்டாளானாலும், திலதவதி கணவனுக்கும் மங்கைக்கும் பிள்ளைகளுக்கும் ஆறுதல் மொழிபுகலலானாள். இவளுடைய தாய் வீட்டுக்கும் மற்றும் முக்கியமான உறவினருக்கும் தகவல் சொல்லி வரவழைக்கலாம் என்று சதானந்தர் பிள்ளை முயன்றதைக்கூட அவள் 'அவசரப்பட்டுச் சொல்லியனுப்பவேண்டாம்; பின்னால் பார்த்துக் கொள்ளலாம்' என்று கூறித்தடுத்து விட்டாள். அவள் தன் அருமருந்தன்ன கணவனின் மடிமீது தலையை வைத்துத் தான் அமைதியாக உயிர்விட வேண்டுமென்று விரும்பினாள். இவ்வளவு நெருக்கடியான சமயத்திலும் வீட்டில் தங்காமல் பொறுப்புணர்ச்சியின்றி சிவன் எங்கெங்கோ சுற்றி விட்டுக்காலங்கடந்து வருகிறானே என்று ஒரு புறம் அவள் மனம் கவன்று கொண்டுதானிருந்தது. இத்தருணத்தில் விசுவநாதன் புத்தி சாலித்தனமாக நடந்து கொண்டான். தந்தை கூப்பிடுங்குரலுக்கு ஏனென்று கேட்டு நடக்கப் பக்கத்திலேயே இருந்தான். சிற்றன்னையுடன் இருந்து தாய்க்குச் செய்ய வேண்டிய சிசுருஷைகளைச் செய்வதில் உதவியாய் இருந்தான்.

திலதவதிக்குப் பேச்சுமூச்செல்லாம் மெல்ல மெல்ல அடங்கி

வந்தது. ஆனால், அவள் கண்கள் மட்டும் அடிக்கடி எல்லோரையும் ஆவலாகப் பார்க்கலாயின. இரவு [illegible]ய்க் கண் விழித்தும் கவலை கொண்டும் கணவன் உருக்குலைந்து போயிருப்பதைக் கண்டு அவள் உள்ளம் உருகியது. அடுத்தபடி, எல்லாப்பாரங்களையும் தான் தாங்கிக்கொண்டு அக்கா எப்படியும் பிழைத்தெழுந்து விடவேண்டும் என்ற ஆவலோடும் நம்பிக்கையோடும் வேளாவேளைக்கும் மருந்தும் உணவும் கொடுத்து கண்ணுங் கருத்துமாகக் காத்து ஓய்ச்சல் ஒழிவின்றி உழைத்து ஓடாய்ப் போய் விட்டிருக்கும் மங்கையைப் பார்த்து அவள் கண்ணீர் உகுத்தாள்.

விவரம் நன்கு அறியாவிட்டாலும் தான் அசௌக்கியமாயிருப்பதற்காக வருந்தி மெலிந்து போன கணேசனையும் கோமளத்தையும் கட்டிக் கொண்டு அவள் கோவென அழுதாள்.

விசுவநாதனை அவள் அன்பாகத் தடவிக் கொடுத்து, "அப்பாவுக்கு ஆதரவாயிரு. அண்ணனைப் போல் அக்கரையற்றிராதே" என்று அறிவுரை கூறினாள்.

சிவகுமாரனுக்கும் ஏதாயினும் சொல்லி விட்டுப் போக வேண்டும் என்று அவளுடைய உள்ளம் துடித்தது. அவன் அவள் அருகு வருவதே அருமை. தூர இருந்தே துயரத்தை வெளிப்படுத்தி விட்டுப் போய் விடுவான். ஒரு கணமாயினும் தன் சமீபம் அவன் இருக்க வேண்டுமென்று ஆசைப்பட்டது திலதவதியின் நைந்த உள்ளம். அதற்கு அவன் சந்தர்ப்பம் அளிக்கவில்லை.

இரண்டு மூன்று நாளாகவே, திலதவதி அடிக்கடி உணர்விழப்பதும் மெள்ள உணர்வு பெறுவதுமாயிருந்தாள். ஆகவே, சதானந்தம் அவள் அருகேயே இருந்தார். ஒரு கணம் அப்படி இப்படி போவதில்லை. தப்பித் தவறிப் போனாலும் மங்கையைக் கூப்பிட்டு இருக்கச் சொல்லி விட்டுப் போவார்.

காணும் பொங்கலன்று மாலை திலதவதியின் நிலைமை மிகவுங் கவலைக்கிடமாய் விட்டது. இதுகண்டு, பிள்ளையவர்களும் மங்கையும் வெலவெலத்துப் போயினர். விழிகள் மேலுங் கீழுமாக உருள்வதையும் மருள மருளப் பார்ப்பதையுங்கண்டு பயந்து கோமளமும் கணேசனும் அழலாயினர். அச்சமயம் விசுவநாதன் கூட இல்லை.

இருட்டிவிட்டுங்கூட, விளக்கு ஏற்றத் தோன்றவில்லை, இருவருக்கும். பேயறைந்தவர்கள் போலப் பேந்தப் பேந்த விழித்துக் கொண்டிருந்தனர். பணிப்பெண் வந்து தான் மின்சார விளக்குகளைப் பொருத்தலானாள்.

விளக்கு ஏற்றப்பட்டதும் திலதவதியின் உயிர் விளக்கும் சிறிது பிரகாசமாய் எரியலாயிற்று. திடீரென அவள் முகத்தில் ஒரு வித களை காணப்பட்டது. இப்போது அவள் சிறிது தெளிவாகப் பேசக் கூட

முயன்றாள். வேலை செய்து விட்டு, வீட்டு எசமானிக்கு இப்படி யிருக்கிறதே என்று கருதித் தயங்கி ஒரு புறம் நின்றிருந்த பணிப்பெண்ணை வீட்டுக்குப் போய்க் காலையில் வருமாறு மங்கை மூலம் சொன்னாள். பின், குழந்தைகளை அழைத்துப் போய், பொழுதோடு சாப்பிடச் செய்யுமாறு மங்கைக்குப் பணித்தாள்.

கலக்கத்தோடு நின்றவாறு தன்னையே கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்த கணவனை நோக்கி, "நீங்களும் சாப்பிட்டுவிட்டு வாருங்களேன்" என்று பரிவோடு மெல்லக் கூறினாள்.

"இருக்கட்டும்" என்றார் பிள்ளையவர்கள் தழுதழுத்த குரலுடன்.

"எனக்கு ஒன்றுமில்லை நீங்கள் ஏன் வருந்துகிறீர்கள்?"

மனைவியின் இந்த ஆறுதல் மொழி பிள்ளையவர்கள் மனத்தை என்னவோ செய்தது.

திலதவதி கணவனைக் கனிவோடு பார்க்கலானாள். அவருடைய முகத்தில் அந்தச் சில விநாடிகளில் என்னென்ன கண்டாளோ! அவள் கண்களில் நீர் பனித்தது. அவள் உள்ளம் பொருமியது. அவ்விம்மிதத்தை யுணர்ந்து கொண்டவர்போல் அவரும் பொருமினார்.

"ஏன் நிற்கிறீர்கள்? இப்படி உட்காருங்கள்" என மிக மெல்லச் சொன்னாள் திலதவதி.

பிள்ளையவர்களுக்கு மனைவியின் பக்கத்தில் அமர்ந்து அவளை ஆஸ்வாசப் படுத்தவேண்டும் என்று ஆவல் அடிக்கடி எழும். ஆனால், மங்கைபோ மற்றவர்களோ எப்பொழுதும் உடனிருப்பதால் தூர இருந்தே அவளுடைய காரியங்களைக் கவனிப்பார். இப்போது மனைவியே சொன்னதும், அவர் அவள் பக்கத்தில் போய் அமர்ந்தார். சடைபிடித்துத் தாறுமாறாய் முகத்தின் மீது விழுந்து கிடந்த கூந்தலை அவரது இடதுகரம் கோதலாயிற்று, அவரது வலக்கை வற்றியுலர்ந்திருந்த அவள் கன்னத்தை வருடியது.

மீண்டும் கணவனைக் கனிகரமாகப் பார்த்த திலதவதி, "எப்படியிருந்த தேகம் எப்படியாய் விட்டது? தளதளப்பெல்லாம் போய் நாடையொட்டியல்லவா போயிருக்கிறது. தோளும் ரும்பிக்கைகளும் சேர்ந்து போய்.........." என ஆற்றாமையோடு சொல்லிமுடித்தாள்.

"பேசிச்சிரமப்படுத்திக் கொள்ளாதே, திலகம்! என் உடம்புக்கு என்ன? நீதான் நலிந்து............நீ நல்லபடியாக எழுந்துவிடு. அப்புறம் பார்; எல்லாம் சரியாய் விடும்......"

அவள் பிழைக்கமாட்டாள் என்று அவருக்கு நன்கு தெரிந்தும் நப்பாசையால் அவ்விதம் நவின்றார்.

"நல்லபடியாக........." அவள் தனக்குத்தானே சொல்லிக்கொண்டாள். அவள் கண்கள் மட்டும் அவர் கண்களை ஊடுருவி நோக்கின.

— தமிழ்த்தென்றல்

அவருடைய கண்களின் கருமணிகளில் அவள் கணவனுடன் கருத்தொருமித்து நடத்திய இருபது வருடத்திய இல்வாழ்க்கையைப் பார்க்கலானாள். இருபது வருடங்களுக்கு முன் இளம் பெண்ணாக அவர்கையைப் பற்றியது, பிறந்தகத்திலிருந்து புக்ககம் வந்ததும் மாமியார், நாத்திமார் உட்பட அனைவரும் அன்புடன் வரவேற்றது, கணவனிடம் தனிக்குடித்தனம் நடத்தத் தொடங்கியது, கணவனின் காதலன்பிலே தவழ்ந்து புத்திரச் செல்வங்களைப் பெற்றது, எல்லாரிடமும் இங்கிதமாய் நடந்து நற்பெயர் வாங்கியது, இவ்விதம் ஒவ்வொரு நிகழ்ச்சியும் அவளுடைய நினைவுச் சுருளில் வந்து கணவனின் கருமணிகளில் பிரதிபலித்தது. தான் அறியாமையால் பல பிழைகள் புரிந்த காலத்தும் கோபிக்காமல் அன்பாகக் கடிந்து கொண்டு, திருத்திக்கொள்ள அவகாசங்கொடுத்து ஆதரவு காட்டிய கணவனின் பேரன்பையும் பெருந்தன்மையையும் நினைந்து அவள் இச்சமயம் விம்மிதமுற்றாள். இருபது வருட வாழ்வில் அவர்களிடையே நிகழ்ந்த கோப தாபங்கள் நீரில் கிழித்த கோடு போலக் கணத்தில் தோன்றிக் கணத்தில் மறைந்தவை தாம் அதிகம். அவர்களுக்கிடையில் ஏற்படும் சிறு பிணக்கும் அடுத்த கணம் மிக நெருக்கத்தைத்தான் உண்டு பண்ணும். புலவி கலவிக்குத்தான் அடிகோலும். ஊடலோ மகிழ்ச்சியாகக் கூடலைத் தான் கூட்டுவிக்கும். மற்றப்படி மன மாற்சரியங்களோ பூசல்களோ மருந்துக்குக்கூட அவர்களிடையே ஏற்பட்டதில்லை. மங்கலமான மனைமாட்சிக்கு நன்கலமாக அவள் பிள்ளைகளைப் பெற்ற காலத்தில் எல்லாம் மறவாமல் தக்க பரிசுகள் பட்டாடைகளாகவும், பொன்மணி அணிகளாகவும் பிள்ளையவர்கள் வழங்கத் தவறியதில்லை. முதல் பிரசவமாக, சிவகுமாரனைப் பெற்ற காலத்தில் பிள்ளையவர்கள் பூரித்த பூரிப்பு, அவளைப் போற்றிய போற்றல், அணிமணி வழங்கி அளவளாவிய அகமகிழ்வு இவைகளை இப்போது நினைத்த போதும் அவள் இதயத்தில் இன்பந்தான் பெருக்கெடுத்து ஓடியது. இவ்வளவு அருமையான கணவரைத் தன் வாழ்க்கைத் துணைவராகப் பெற்று மகிழ்ந்து இப்போது இடையில் பிரிந்து போக வேண்டியிருக்கிறதே என்று எண்ணியபோது தான் அவள் கண்கள் இரத்தக் கண்ணீர் வடித்தன.

"நாதா, இருபது வருடங்கள் உங்களுடன் இன்ப வாழ்க்கை நடத்தினேன். நீங்கள் எனக்கு வாழ்க்கையில் யாதொரு குறையும் வைக்கவில்லை. ஆனால், நான் தான் ஏதாயினும் தவறு புரிந்திருந்தேன். தங்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளில், தவறியிருப்பேன்; பணிவிடைகளில் பிழை புரிந்திருப்பேன். ஆனால் அவை நான் தெரிந்து செய்தனவாக இரா. எனினும், நீங்கள் இச்சமயத்தில் என்னை மன்னித்து அருள வேண்டும். நான் மறுபடியும் பிறக்க நேர்ந்தால் உங்களோடு வாழக்கூடிய பேற்றையும் உங்க

— தமிழ்த்தென்றல்

ளுக்குக் குற்றேவல் செய்யக்கூடிய உரிமையையும் வழங்கியருள வேண்டுமென்று நமது குல தெய்வத்தைப் பிரார்த்திக்கிறேன்......"

சதானந்தம் பிள்ளை மனைவியின் வாயைத் தம் கரத்தால் பொத்தி, "திலகம், இதென்ன பேச்சு? நீ நீடூழி வாழ வேண்டும். இப்படி இடை நடுவில் விட்டுப் போக நான் உன்னை ஒருக்காலும் விடமாட்டேன்..........." என்று ஆவேசம் வந்தவர் போல் பேசினார்.

திலதவதி இரக்கத்தோடு கணவனை ஏறிட்டுப் பார்த்து, "எனக்கு மட்டும் உங்களை விட்டுப் போக வேண்டுமென்ற விருப்பமா? என்ன! சண்டாள நோய் வந்து நம்மைப் பிரித்துவிடச் சதி செய்கிறதே! என் செய்வது!........" என்று கூறிப் பின், "நாதா! கொஞ்சம் நகர்ந்து வந்து என் தலையையெடுத்து உங்கள் மடி மீது வைத்துக் கொள்ளுங்கள் ....கொஞ்சம் அப்படி விச்ராந்தியாயிருந்து உயிர்விட விரும்புகிறேன்" என்றாள்.

தன் தலையை எடுத்து மடி மீது வைத்துக் கொள்ள வேண்டுமென்று திலதவதி சொன்னவுடனே, பரிவோடு எடுத்து வைத்துக் கொண்ட பிள்ளையவர்கள், "விச்ராந்தியாய் உயிர் விட" எனத் தொடங்கியவுடனே மீண்டும் அவள் அதரத்தை மூடினார்.

"நீ இப்படியெல்லாம் பேசக் கூடாது. எனக்குக் கோபம் வரும்" என்று பிள்ளையவர்கள் கடிந்து கொண்டார்.

திலதவதி "என் மீது கோபித்துக் கொள்ள உங்களுக்கு உரிமையுண்டு. தாராளமாகக் கோபித்துக் கொள்ளுங்கள்.............." என்று வெளுத்த உதடுகள் மலரச் சொன்னாள். உடனே ஏதோ நினைத்துக் கொண்டு, "ஆனால், நாதா! ஒருவரம். என் கண்மணிகளை மட்டும் கோபித்துக் கொள்ளாதீர்கள். அவர்கள் தாயற்ற குழந்தைகள். உங்களைத் தவிர, திக்கு யாருமில்லை. அதிலும் சிவனை நீங்கள் மன்னிக்க வேண்டும். அவன் சிறு பிள்ளைதனமாய் ஏதாயினும் பிழை செய்வான்......"

"வீணாக மனதை அலட்டிக் கொள்ளாதே! திலகம்" என்று அவளை மேலே பேச வொட்டாது தடுத்து விட்டார் பிள்ளையவர்கள்.

இச்சமயம் கோமளமும் கணேசனும் முன்னே வர மங்கை அங்கு வரலானாள். இது கண்டு திலதவதி கணவன் மடிமீதிருந்த தன் தலையை எடுத்துக் கொள்ள முயன்றாள்.

உடனே மங்கை, "அக்கா, அப்படியே படுத்திருங்கள். நான் அப்புறம் வருகிறேன்" என்று கூறியவாறே அவ்விடத்தை விட்டுப் போக முயன்றாள்.

திலதவதி கைகாட்டி, "மங்கை, இரு! போகாதே! உன் வருகையைத் தான் எதிர் பார்த்திருக்கிறேன். நான் நினைவு இழப்பதற்குள் உன்னிடம் சில விஷயங்கள் சொல்ல வேண்டும்

— தமிழ்த்தென்றல்

........." என்று படபடப்போடு கூறினாள்.

மங்கை வருத்தத்தோடு தயங்கி நின்றாள்.

திலதவதி தன் பிள்ளைகளைச் சில விநாடிகள் பார்த்து பின், "கோமளம், தம்பியை அழைத்துப் போய்த் தூங்கவை. பெரியண்ணாவோ, சின்ன அண்ணாவோ வந்தால் இங்கு வரச் சொன்னேன் என்று சொல்" என்று சொன்னாள்.

கோமளம் கணேசனை அழைத்துக் கொண்டு அப்புறம் போனாள்.

பின் திலதவதி மங்கையை நோக்கி, "மங்கை அருகே வா!" எனக்கை நீட்டியழைத்து, "சகோதரி உனக்கு நான் எத்தனையோ வகைகளில் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் என்னால் எந்த வழியிலும் உனக்கு கைம்மாறு செய்ய முடியாது. நன்றி தெரிவித்துக் கொள்ள மட்டும் முடியும்."

"அக்கா, இது என்ன பேச்சு? நீங்கள் மனநிம்மதியோடு பேசாமல் இருங்கள். கொஞ்சம் கஞ்சி கொண்டு வரட்டுமா?............" எனக்கூறி கவனத்தை மாற்ற முயன்றாள்.

"அதெல்லாம் ஒன்றும் வேண்டாம். தயவு செய்து நான் சொல்வதைச் சற்றுக்கேள். நீ முதன் முதலாக, சித்தியுடன் இங்குவந்தபோது நான் சொன்ன வார்த்தைகள் நினைவிருக்கும் என்று நம்புகிறேன்..

— தமிழ்த்தென்றல்

இது உன் வீடு. நீ தான் இந்த வீட்டுத் தலைவி" என்று சொன்னேன். அப்போது அவ் வார்த்தைகளை நான் சங்கோஜப்பட்டுக் கொண்டிருந்த உனக்கு ஆறுதலாகஇருக்க உபசார மொழியாகக் கூடச் சொல்லி யிருக்கலாம். ஆனால், இப்போது சொல்கிறேன்: இது உன் வீடு. இனி நீ தான் இந்த வீட்டின் தலைவி. இதோ இருக்கும் அத்தான், சிவன், விசுவம், கோமளம், கணேசன் அனைவரும் உன் பராமரிப்பில் இருக்க வேண்டியவர்கள். இப்போது அன்பாக ஆதரித்து வருவது போலவே இனியும் இன்னும் அதிகமாகப் பாதுகாத்து வர வேண்டுகிறேன். இவர்களுக்கு உன்னைவிட்டால் வேறு துணையில்லை. என் சகோதரர்களோ சகோதரிகளோ சதமல்ல. நான் உன்னைத் தான் பூரணமாகநம்பியிருக்கிறேன். உன்னை மலை போல நம்பித் தான் இவர்களை உன்னிடம் அடைக்கலமாக விட்டுச் செல்கிறேன். நான் கேட்டுக் கொண்டபடிக் காப்பாற்றுவாயா? உறுதி கொடு, மங்கை" என்று கேட்டவாறுதன் கணவனின் கரங்களை எடுத்து மங்கையின் கைகளில் சேர்த்து வைத்தாள்.

மங்கை கோவெனக் கதறி விட்டாள். பிள்ளையவர்களின் கண்களிலும் தாரைதாரையாக நீர்பெருகியோடியது.

இச்சமயத்தில் கோமளம் "இதோ அம்மா, பெரியண்ணா!" [illegible] கணேசனை இடுப்பில் தூக்கிக் [illegible] ண்டு வந்

தாள். சிவகுமாரன் என்னமோ ஏதோ எனப்பதறியோடி வந்தான். சொல்லி வைத்தாற் போல் அண்ணன் பின்னோடேயே விசுவநாதனும் வந்தான்.

திலதவதி ஜாடை காட்டி எல்லோரையும் நெருங்கி வருமாறு செய்து, அவர்களுடைய கரங்களையும் மங்கையின் கைகளில் ஒப்படைத்தாள். அப்போதைய நிலை சிவன், விசுவம் ஆகியவர்கள் கண்களிலும் நீரை வருவித்தது.

இருந்தாற் போலிருந்து கலகலவென்று ஓசை கேட்டது. திலதவதியின் தொண்டையில் மீண்டும் சளியும் கோழையும் ஏற்பட்டு மூச்சுத் திணற வைத்தது. கண்கள் மலர மலர விழித்தன. அடுத்த கணம் திலதவதியின் தலை சாய்ந்து விட்டது. மனைவியின் உயிர் பிரிந்து விட்டது என்று பிள்ளையவர்கள் அறிந்து 'ஓ' வெனக் கூவினார். மங்கையும் உண்மை புரிந்து கொண்டு 'அக்கா' என்று பிரேதத்தின் மீது விழுந்து விட்டாள். பிள்ளைகளனைவரும் தேம்பித்தேம்பி அழலாயினர்.

(தொடரும்.)

✻ உணவிற்கு சிறந்தது.
✻ இலகுவில் பொரியக்கூடியது.
✻ காரம், மணம், குணம், ருசி, நிறம் ஆகப் பஞ்ச வகைகளும் ஒருங்கே அமைந்தது.

ஸ்ரீகணேச விலாஸ்
அப்பளம் & பூ

கொழும்பில் ஸ்டாக்கிஸ்ட்டுகள் தேவை.

இதர விவரங்களுக்கு:—
ஸ்ரீகணேச விலாஸ் அப்பள டிப்போ,
67, விட்டவாசல், மதுரை.

— "ராஜம்"

முகப்பரு, சொரி,
சிரங்கு, வேனல்கட்டி,
தீப்பட்ட புண்
முதலியவைகளுக்குச்
சிறந்தது.

சைபால்

குழந்தைகளின்
ஆரோக்கியத்திற்குச்
சிறந்தது

ரமணீஸ்
பேபி
கிரைப்

தயாரிப்பவர்கள் :
தி சௌத் இந்தியன் மானுபாக்சரிங் கம்பெனி, மதுரை.

தனிமையிலே தவிக்கவிட்டு?

புதுமை வாணன்

வெங்கதிரே! மேற்றிசையைச் சேரும்போது
வெப்பத்தை ஒழித்து விட்டுக் கருவானத்தில்
தங்கத்தை உருக்கிவிட்டு அப்பரப்பில்,
தனியாட்சி செலுத்தாதே வேண்டிக்கொண்டேன்!
இங்கெனக்கு உயிர்போன்றாள்இனியா ளங்கோ
இருநாளை வெறுநாளாய்ப் போக்க வென்று
பொங்கலென்ற போக்குரைத்துத் தன்னூருக்குப்
போய்விட்டாள்! என்னுள்ளம் உயிரை வாட்ட
எதைக் காண எனைவிட்டுச் சென்றுவிட்டாள்,
என்னையவள் தனிமையிலே தவிக்கவிட்டு?

மென்தென்றற் பெண்ணாளே, யானு முன்னை
வேண்டுகிறேன் கேட்பாயோ? சந்தனத்தின்
நன்மணத்தைச் சுமந்துகொண்டு தமிழ்நாட்டிற்குள்
நாளெல்லாம் வருகின்றாய் இன்றைக் கோர்நாள்
என்வீட்டுப் பக்கத்தில் வரவே வேண்டாம்
எந்நாளும் எனைப்பிரியே னென்றே சொன்ன
பொன்னனை மேனியினாள் தன்னூருக்குப்
போய்விட்டாள்! என்னுள்ளம் உயிரைவாட்ட
எதைக் காண எனைவிட்டுச் சென்றுவிட்டாள்,
என்னையவள் தனிமையிலே தவிக்கவிட்டு?

பொற்பாதம் தரைபடாது மலர்கள் தோறும்
போய்மதுவை உண்ணுகின்ற வண்டினங்காள்!

அற்புதமாய்ப் பாடுவதை நிறுத்துங்கள்; ஏ!
அழகு மலர்ப் பெண்மணிகாள்! சிரிக்காதீர்கள்;
சொற்படியைக் கேளுங்கள் தயைசெய்வீர்கள்
துணையிணைந்த புறவினமே! போங்கள்! போங்கள்!
பொற்கொடியாள் என்வல்லி தன்னூருக்குப்
போய்விட்டாள் என்உள்ளம் உயிரை வாட்ட
எதைக்காண எனைவிட்டுச் சென்றுவிட்டாள்,
என்னையவள் தனிமையிலே தவிக்கவிட்டு?

நீங்குரலால் வனக்குயிலே இசைக்காதே நீ!
தேனிசைக்குத் தக்கபடி ஆட்டம் போடும்
பாங்கான பசுமயிலே நீயும் நிற்பாய்
பாருக்குள் இன்பவல்லி என்னை விட்டாள்
ஏங்குபவர் கூட்டத்தில் யானும் ஒன்று
என்னுள்ளம் வருந்துகையில் நடனம் வேறா?
பூங்கொடியாள் மலர் முகத்தாள் தன்னூருக்குப்
போய்விட்டாள்! என்னுள்ளம் உயிரைவாட்ட
எதைக்காண எனைவிட்டுச் சென்றுவிட்டாள்,
என்னையவள் தனிமையிலே தவிக்கவிட்டு?

கட்டிருளைப் போக்கவரு நிலவே கேளாய்
காதலியென் உள்ளத்தில் மூட்டிடாதே!
விட்டெனையே பிரியாதாள் அன்று சொன்னாள்:
"விரும்பிவரும் புதையலையும் விரும்பமாட்டேன்
தொட்டு உமைத் தழுவவரும் இன்பம் மட்டும்
தொடர்ந் திருந்தால் போது"மென. ஆனாலின்று
பொட்டிட்ட நெற்றியினாள் தன்னூருக்குப்
போய்விட்டாள்! என்னுள்ளம் உயிரைவாட்ட
எதைக்காண எனைவிட்டுச் சென்றுவிட்டாள்,
என்னையவள் தனிமையிலே தவிக்கவிட்டு?

பெருமக்கள் வரலாறு :

சர் வில்லியம் காக்ஸ்டன்

[அன்பரசு]

பெரு மக்களின் வரிசையிலே வளர்ந்திருக்கும் பல பெரியோர்களின் வரலாற்று ஏடுகளைப் புரட்டிக் கொண்டே சென்றோமாயின், அந்த உலகிலே புதுமையைப் படைத்த பெரியவன், "சர் வில்லியம் காக்ஸ்டன்" என்பவனின் வரலாறேயாகும்!

அவன் வாலாறு புரட்சியிலே தோன்றிய புதுமை. அந்தப் புரட்சி அச்சு இயந்திரப் படைப்பிலே பொதிந்திருந்தது.

அவன் ஆக்கித்தந்த—அச்சிட்டு முதன் முதல் உலகிற்களித்த பல நூல்கள்—அவன் காலத்திற்குமுன்பு கைகளால் எழுதப்பட்டு, ஒரு சிலரின் சமூகத்திலே தான் உலவி வந்தது. அது தான் பணக்காரச் சமுதாயம். அவர்களால் தான் அந்தக் கையெட்டுப் பிரதிகளை விலைகொடுத்து வாங்க முடிந்தது. முடியாத வறுமையாளர்கள், கருத்துலகிற்கு, சிந்தனை உலகிற்கு வேறுபட்டவர்களாக விலகித்தான் இருக்க முடிந்தது. இந்த வேற்றுமையைக் களைந்தான் அச்சு இயந்திரத்தின் நுட்பத்தை முதன் முதல் கண்டு பிடித்த காக்ஸ்டன்.

1424-ம் ஆண்டிலே "கெண்ட்" என்னும் பட்டிணத்திலே பிறந்தான்.

அவன் என்று பிறந்தான் என்பது நமக்கு நன்றாகத் தெரியவில்லை. ஆண்டு மட்டும் உத்தேசமாகத் தெரிகிறது. ஏனெனில் ஜூன் 24, 1438-ம் ஆண்டு துணிக்கடை யொன்றில் ஒரு அலுவலகனாகச் சேர்ந்தான் என்பது அந்தக் கடைப் புத்தகமொன்றிலிருந்து தெரிய வருகிறது. அப்போது அதன் தலைவனாக இருந்தவன், "ராபர்ட்லார்ஜ்" என்பவன்.

இந்தச் செய்தியிலிருந்து நாம் இரண்டு முடிவுகளுக்கு வரலாம். 1. காக்ஸ்டனுக்கு வயது அப்போது அனேகமாக 14 அல்லது 16 இருக்கலாம். 2. காக்ஸ்டனின் குடும்பம் சற்றுச் செல்வாக்குள்ளதாக இருந்திருக்கவேண்டும் — ஆக இவை இரண்டும் தான். எப்படியெனில் 14 வயதுக்குக் குறைந்தவர்களை வேலையில் வைத்துக் கொள்வதில்லை அக் கம்பெனியில். மேலும் லார்ஜ் என்பவன் லண்டன் மேயர் பிரபுவாக, காக்ஸ்டன் சேர்ந்த மறு வருடத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டான்.

மூன்று ஆண்டுகள் காக்ஸ்டன் "ஓல்ட்ஜூரி"யில் லார் ஜூடன் வசித்து வந்தான். 1441 ஏப்ரல் 24ல் லார்ஜ், காக்ஸ்டனுக்கு 20 மார்க்குகள் (சுமார் 150 பவுன்கள்) ஆண்

— தமிழ்த்தென்றல்

டுக்குச் சேரும்படி உயில் எழுதி விட்டு இறந்து விட்டான். அந்தஆண்டின் இறுதியிலே காக்ஸ்டன் இந்த வேலையை விட்டு விட்டு ஐரோப்பாக் கண்டத்தைச் சுற்றுப் பயணம் செய்வதில் முனைந்தான்.

மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு காக்ஸ்டன் லண்டனுக்கு வந்தான். பிறகு "பிரக்ஸி"லேயே தங்கிபெரிய வியாபாரியாகி விட்டான். எப்படித் தொழிலில் வெற்றியடைந்து பெரிய வியாபாரியாக முடிந்தது என்ற தகவல்கள் நமக்குச் சரிவரத் தெரியவில்லை.

1462-ம் ஆண்டு நாலாம் எட்வர்ட் மன்னன், கம்பெனி ஆக்டுகளைத் திருத்தம் செய்து பிரசுரித்தான். அதன்படி ஒரு வியாபாரத் தலைவனை வெளி நாட்டு விவகாரங்களை கவனித்துக் கொள்வதற்காக நியமித்தான். அவனின் கீழ் பல கவர்னர்களை ஆங்காங்கே உள்ள முக்கிய நகரங்களில் நியமிக்கும்படியாகவும் பணித்தான். "பிரக்ஸி"ல் ஒரு ஆண்டு இப்பணியை காக்ஸ்டன் மேறகொண்டு நடத்தினதும், மறு ஆண்டு அரசாங்க கவர்னராகவே நியமிக்கப்பட்டான். அவன் வேலை, வியாபாரிகளுக்குள் ஏற்படும் சில்லறைத் தகராறுகளைத் தீர்த்து வைப்பதும், ஏற்றுமதி இறக்குமதியாகும் பொருள்களை மேற்பார்வை பார்ப்பதும் இங்கிலாந்தின் வியாபாரத்தை நல்ல நிலையிலிருக்கும்படியாகப் பார்த்துக் கொள்வதும் ஆக இவை தான்.

— தமிழ்த்தென்றல்

1464-ல் "பர்கண்டி" மாகாணத்தின் தலைவனை பிலிப்பினிடம் "பிளாண்டர்ஸ்" வியாபாரத்தொடர்பில் சில சீர்திருத்தங்களைச் செய்யத் சொல்லி முறையிட்டான். ஆனால் அதைச் செய்ய மறுத்து விடவே, வியாபாரிகள் பல தொல்லைகளுக்காளாகவே, திருட்டு வியாபாரத்தில் ஈடுபட ஆரம்பித்தனர். "வார்விக்" கின் தலைவன் இந்தத் திருட்டு வியாபாரத்தை உடனடியாகத் தடுத்து விடும்படியாகப் பணித்து காக்ஸ்ட

திருமணத்தைப்பற்றி:

"திருமணத்தில் பெற்றோர்கள் தலையீடு இருக்கக்கூடாது என்று சட்டம் வகுத்திருக்கிறோம். நாட்டின் ஒழுக்கத்திற்கும் அமைதிக்கும் இது மிகமிக அவசியம்."

— மா-சே-துங்.

"மல்யுத்த வீரர்கள் — பலவான்கள் — திருமணம் செய்வது கூடாது என்பதில் அர்த்தமே இல்லை. நான் திருமணம் செய்தவன் தான். என் மகன் பேங்கேரியில் மராமத்து இலாகா அதிகாரியாக இருக்கிறான்."

— கிங்காங்.

"கிழக்கு நாடுகளில் பெண்கள் விபசார விடுதிகளை நடத்துகின்றனர். அமெரிக்கா போன்ற மேலை நாடுகளில் ஆண்கள், விபசார விடுதிகளை நடத்துகின்றனர். ஜனநாயகத்திலுள்ள சமுதாய கோளாறும் திருமண ஏற்பாடும் தான் இதற்குக் காரணம்."

— பசும்பொன் முத்துராமலிங்கம்.

னுக்கு உத்தரவளித்தான். இவற்று லெல்லாம் நமக்கு காக்ஸ்டன் தன் சொந்த வியாபாரத்தைக் கவனித்து வந்ததோடல்லாமல் மற்றவரின் வியாபாரத்திலேயும் பங்கு கொண்டு உழைத்து வந்தான் என்பது தெள்ளென விளங்குகிறது. ஆயினும் இடை இடையே கிடைத்த ஓய்வு நேரங்களில் சிறிதளவு படித்தோ அல்லது எழுதியோ காலங் கடத்தி வந்தான்.

"பிளாண்டர்ஸ்—இங்கிலாந்து" தகராறு, பிலிப்பின் மரணத்தோடு முடிந்தது, 1467-ல்.ஒரு ஆண்டிற்குப் பிறகு அவனுக்குப்பின் வந்த சார்லஸ் என்பவன் நாலாம் எட்வர்டின் தங்கையை மணம் முடித்தான். 1469-ல் காக்ஸ்டன் இந்தக் கவர்னர் உத்தியோகத்தை துறந்து விட்டு பர்க்கண்டியில் ஒரு முக்கிய உத்தியோகத்தில் அமர்ந்தான்.

இவ்வாறிருக்கையில் தான் "பர்க்னி"ல் ஒரு புத்தகத்தை மொழி பெயர்க்கும் வேலையைத் துவங்கி, "கெண்டில்" இருக்கும் போது அதைத்தொடர்ந்து,"கொலோனில்" அதை முடித்தான். 1472-ல் "கொலோனி"ல் இருக்கும் போது தான் அச்சு இயந்திரத்தின் நுட்பங்களை அறிய ஆரம்பித்தான். அப்போது அத்தொழில் ஆரம்ப நிலையிலிருந்தது. இரண்டு ஆண்டுகள் கழித்து "பிரக்னி"ல் ஒரு அச்சு இயந்திர சாலையை நிறுவி அதிலிருந்து தன் முதல் புத்தகத்தை வெளியிட்டான். 1476-ல் ஒருபுத்தகமும் அக்கம்பெனி யிலிருந்து வெளி வந்தது. இவ்வாறு வெளியிடப்பட்ட இரண்டுநூல்களும் இலக்கியத் துறையிலே முற்போக்கு தன்மை வாய்ந்த நூல்களாக அமையாத நூல்களாயினும், காக்ஸ்டன் தன் அச்சுஇயந்திரத்தின் சிறப்பினை ஓரளவு உணர்ந்தவனாகி இருந்தான். அதன் மூலம் பல இலக்கியங்களை அச்சிட்டு நாட்டிற்கு வழங்கலாம் என்னும் துணிவு அவனிடம் ஏற்பட்டது. அந்தஆண்டின் இறுதியிலேயே சிறு கதைகளையும், துண்டுப்பிரசுரங்களையும் வெளியிட்டான். பலபெரிய நூல்களை வெளியிட முயற்சியும் செய்து வந்தான். முதல் இலக்கியப் புத்தகம் "பெரியோரின் பொன் மொழிகள்." இது 1477-ல் வெளி வந்தது. இங்கிலாந்திலுள்ள பல பிரமுகர்களின் ஆசியும், ஆதரவும் அவனுக்குக் கிடைத்தது. மன்னர்களும் ஆதரித்தனர்.

ஜூன் 15, 1479-ல் நாலாம் எட்வர்ட் மன்னன் 20 பவுன்கள் பரிசாக அளித்தான் — நாட்டிற்கு நல்ல தொண்டு செய்ததற்காக

> **தேன் துளிப்பாதையில்**
> **வீரனும் அறிஞனும்:**
>
> "தன்னைத நாடு உலகில் தனிப் பெருமை கொள்ளும் வரை எனது கைகள் ஓயாது."
>
> — "ஹிட்லர்"
>
> "அவன் நல்லவனாய் இருக்கிறான் என்று நான் நேசிக்கவில்லை. அவன் எனது சின்னக்குழந்தை!"
>
> — "தாகூர்."

— தமிழ்த்தென்றல்

அவனுக்குப் பின்வந்த மன்னர்களும் அவனை ஊக்குவித்தனர்.

1478-ல் சாஸரின் "காண்டர்பரிக் கதைகள்" என்னும் முதல் பெரிய இலக்கியத்தை அச்சிட்டு வெளியிட்டான். பலப்பல சிறுசிறு இலக்கியங்களும் அவ்வப்போது அந்தச் சிறு அச்சுயந்திரசாலையிலிருந்து வெளி வர ஆரம்பித்தன. அவனுடைய மொழி பெயர்ப்பு நூல்களும் மற்றவையும் நாட்டின் நல்லாதரவைப் பெற்றன.

காக்ஸ்டனின் இவ்வெற்றிகளைக் கண்டதும் 1478-ல் ஆக்ஸ்போர்டில் ஒரு இயந்திரம் நிறுவப்பட்டது. செண்ட் ஆல்பன்னி (St. Albans)ல் ஒன்றும் நிறுவப்பட்டது.

1479-ல் காக்ஸ்டனின் தொழிலுக்கு ஒரு போட்டி ஏற்பட்டது. போட்டி மனப்பான்மை வளர்ந்தால் தான் எந்தத் தொழிலிலுமே ஒரு முன்னேற்றத்தைக் காண முடியும். அதே மாதிரி காக்ஸ்டனும் தன் அச்சு வேலையில்பலசீர்திருத்தங்களை செய்ய முற்பட்டான். அவன் காக்ஸ்டன் நெம்பர்நான்கு[Caxton No.4] என்ற சற்று உயர்ந்த எழுத்துக்களை உபயோகித்து அச்சிட்டான். 1481 'உலகின் கண்ணாடி" எனும் நூலை வெளியிட்டான். அதில் முதல் முதலாக பல படங்கள் வெளியாயின.

காக்ஸ்டனின் அச்சு வேலைகளில் பல குறைகள் இருந்தன. புத்தகத்தின் பெயரைபெரியஎழுத்துக்களில் முதலில் அட்டைப் பக்கத்தில் போடுவதே கிடையாது. பக்கங்களும் எண்ணிடப்படவில்லை. எழுத்துப் பிழைகளும் மல்கிக் கிடந்தன.

ஆனாலும் அவனுக்கு இவற்றைப் பற்றியெல்லாம் அக்கரை இருந்ததாகத் தெரியவில்லை. புத்தகத்தின் தன்மையிலே தான் அவன் நாட்டம் இருந்தது.

அவனது கடைசி நாட்களிலும் அவன் நாட்டம் முழுவதுமே இலக்கிய வளர்ச்சியிலே முக்கிய பங்கு கொண்டு அக்காலத்திலே, தான் சிறந்ததெனக் கருதி வந்த நூல்கள் யாவையுமே நூல்வடிவில் வார்த்துத் தந்தான்.

"நாட்டின் வளர்ச்சி அதன் இலக்கிய வளர்ச்சியில் தான் இருக்கிறது." என்றபேருண்மையைக் கண்டறிந்து அதன்படி நடந்த முதல்வன் என்றும் பொருந்தும். பதினைந்தாம் நூற்றாண்டிலே இங்கிலாந்தின் வளர்ச்சிக்கு ஒரு பெருந்துணை புரிந்த அற்புத மனிதனாக மாறி விட்டான் காக்ஸ்டன்.

இலக்கியச் சிறப்பை தன் நாட்டவருக்குச் சிறப்பாகவும், உலக மக்களுக்கெல்லாம் பொதுவாகவும் உணர்த்திய பெருமை அவனுக்குண்டெனில் — ஏன் அவனை பெருமக்கள் வரலாறிலே அமைக்கக்கூடாது?

புத்தகங்கள், பத்திரிகைகள்
விற்பனையாளர்கள்
தமிழ்ப்பண்ணை
யாழ்ப்பாணம் — இலங்கை

— தமிழ்த்தென்றல்

நாடக நினைவு:

ரசிக சீமானே!

கதையாளர் — வசனகர்த்தா — சினரியோவை செம்மை செய்தவர் — டைரக்டர் — உற்பத்தியாளர் — முதலாளி — இப்படி இத்தனை பேர்களின் பகுத்தறிவிற்கும் கண்களுக்கும் தப்பி ஏதாவதொரு கட்டம் படம் பிடிக்கப்பட்டு வெளி வந்து விடுகிறதென்றால்..........................?

வயதில் அரை டிக்கட். ஆனால் கேட்டில் முழு டிக்கெட் வாங்கிக் கொடுத்து விட்டு படம் பார்க்கிற சின்னதுகள் "போச்சு. போச்சு. பொருத்தமில்லையே! பகுத்தறிவாதியைப் பாக்காதிங்க!" என்று பாடி விடுகின்றன. குறை குறைவாகவே நின்று விடுகிறது!

திரைப்பட நிலவரம் இவ்வாறு. நாடக அரங்கிலோ கதையை எழுதியவர் வந்து தான் பதில் கூறவேண்டும்!

இனிப்போ இல்லை கசப்போ — உப்பு சரியோ அல்லது கூடுதலோ — காரம் கணிசமோ இல்லாத காட்டமோ — பல்லைக் கடித்துக் கொண்டு அநுபவித்துத்தீர வேண்டிய தொல்லை இருந்து வருகிறது இருமருங்கிலும் இன்று.

ஆனால் அன்றைய நாடக அரங்கிலோ..................?

கதை கதையாக நடந்தாலும், ரசிகர்களின் குதூகலத்திற்கு ஏதாவது நடக்க வேண்டும். ரசிகர்கள் இதைப் பெரிதும் விரும்பினார்கள். நடிகர்கள் உணர்ந்தார்கள். நடந்தார்கள்.

இதற்காக ஏதாவது பொருத்தமில்லாமல் உளறி விட்டால் ரசிகர்கள் விட்டு விடமாட்டார்கள் அன்று. "போ உள்ளே" எத்தனை பெரிய நடிகருக்கும் ஏற்றமாக அளிக்கப்பட்டு நீறும் ரசிகர்களால். பதில் கூறி "அப்ளாஸ்" வாங்க வேண்டும் நடிகர்கள்.

கோவலன் நாடகம்.

மாதவி மனைக்கு வந்து விட்டான் கோவலன். பொன்னும் பொருளும் மணியும் பூம்பட்டணத்திலிருந்து வரவழைக்க முகவரி எழுதுகிறான். மாமாவும் மாதவியும் பக்கத்திலே......................

"அப்பனே சத்திய கீர்த்தி அரிச்சந்திரன் நானே கண்டாய்...... ...."

என்ற அரிச்சந்திரன் நாடகத்திலுள்ள தொகையறாவை பாடிவிட்டார் எம். ஆர்.!

வண்டி குடை சாய்ந்து விட்டதல்லவா?

"போ உள்ளே" என்ற பேரிரைச்சல். ரசிகர்கள் ஆரவாரம் சொல்லி முடியாது.

— தமிழ்த்தென்றல்

"வெறியில் இப்படி உளறி விட்டாரே! போச்சு அவரது பெரும் புகழ்" எம். ஆர். தம் விசிறிகளின் சிந்தனை வேதனையால் வெல வெலத்து வெந்தது.

என்ன சொல்லப் போகிறார்? எதைச் சொல்லித் தப்பிக் கொள்ளுவார்?

ஆனால் இத்தனை கூச்சல்களுக்கும் ஏச்சல்களுக்கும் அந்த நாடக மன்னன் இம்மியாவது பயப்படவேண்டுமே! அது தான் இல்லை.

இடது கையை மேலும் கீழும் ஆட்டி ரசிகர்களை "அமைதி பெறுக" என்று கூறுவது போல. பார்வையோ அதே ராஜ கம்பீரத்தில்.......................!

அமைதி மலர்ந்தது. ஆவல் அலைமோதியது அங்குலத்திற்கு அங்குலம்.

மீண்டும் அதே தொகையறாவை ராகம் தப்பாமல் பாட.....!

அவ்வளவு தான். ஓரே ரகளை! ஓயாத கூச்சல்!

இப்போதும் அந்த நாடக மேடைச்சிங்கம் தலை நிமிர்ந்து நின்றது.

இடது கையால் ரசிகர்களை சாந்தப்படுத்துகிறார். என்ன தெம்பு! என்ன கம்பீரம்! எதற்கும் இம்மியும் அசையாத எஃகுக் கோட்டையா அவரது சிந்தனை!

அங்கா இங்கா வென்று எப்படியோ அமைதி ஏற்பட்டது.

இம்முறை தொகையறாவை ராகமாகப் பாடாமல்........... விறு விறுவென்று............

"அப்பனே சத்திய கீர்த்தி அரிச்சந்திரன் நானே கண்டாய்...." என்று புலம்பிய அரிச்சந்திரனைப் போல நான் ஒன்றும் ஒப்பாரி வைக்கமாட்டேன் மாமா! உமக்கும் மாதவிக்கும் வேண்டியதையெல்லாம் கேளும். எழுதுகிறேன். வந்து சேரும் எல்லாம்...... ...." என்று பேசியவர் **"முத்து அணி பவளம் வேண்டுமா?"** என்ற உடனடி பாடலை ஒப்பார நடையில் உயர்ந்த சுருதியில்.......

ஆகா கேட்கவா வேண்டும் ரசிகர்களின் ஆனந்தக் கூக்குரலை! அலறிக்குதித்த அமர்க்களத்தை! அதிர் வெடி கைதட்டல் ஆரவாரத்தை!

"பலே! பலே! எம். ஆர்!" மெய் மறந்து கூவினர் பலர்.

பொருத்தமில்லாமல் ஒன்றைக் கூறி — பொருள் இல்லாமல் மற்றொன்றைக் காட்டி — திகைக்க வைத்து — பின்னர் நயமாக — நளினமாக — பொருளோடு பதில் கூறி ரசிகர்களை மகிழச் செய்த **எம். ஆர். கோவிந்தசாமியின்** நுண்ணறிவின் சிறப்பு பகுத்தறிவாளர்களுக்கு என்றென்றும் ருசியிருக்கு பாலாடை இனிமையே ஆகும். "நேசி."

— தமிழ்த்தென்றல்

அட்டைப் படக்கதை :

மாப்பிள்ளைத் தோழன்!

[மு. கணேசன், மதுரை.]

"நீ பார்த்த பார்வை வெறும் பச்சைப் பார்வை தான் அண்ணா. அழகு என்றதும் உன் ஆசை படக்கென்று பற்றிக்கொண்டது. அவ்வளவு தான். நீ வந்து அவள் முகத்தைச் சரியாகப் பார்த்தாயா என்று தான் நான் கேள்கிறேன்."

"சும்மா நீயும் கேட்டுக்கிட்டே இரு. நானும் சொல்லிக்கிட்டே இருக்கேன். இதான் வேலையாய்ப் போச்சு போ. இதென்ன ஞானம் இப்படி ஒரேயடியாய் உயிரை எடுக்கறே. நான் வந்து ஆளையும் பார்த்தேன். முகத்தையும் பார்த்தேன். போதுமா?"

"போதும் அண்ணா போதும். நீ பார்த்ததும் வைத்ததும். வார்த்தைக்கு பழுதில்லை. ஆனால் பார்த்தது தான் பகுத்தறிவோடு இல்லை."

"அதுவும் சரிதான். நினைப்பதில் பகுத்தறிவு வேண்டும். பேசுவதில் பகுத்தறிவு வேண்டும். செய்வதில் பகுத்தறிவு வேண்டும் என்று பேசிக் கொண்டு திரிகிறவன் கூடப் பிறந்தவள்........"

"என்பதற்காகத் தான் பார்ப்பதிலும் கூட பகுத்தறிவு வேண்டும் என்று கூறுகிறேன்."

"சம்பந்தமில்லாத பேச்சு இது. ஆசையோடு பார்த்தாலும் எனக்கு பிடித்தமா இல்லையா என்ற சிந்தனையோடு தான்..........."

"பார்த்தாய். அதில் தப்பு இல்லை அண்ணா தப்பு இல்லை. நீ பார்த்ததில் ஆசையும் இருந்தது. ஆனால்......"

"வேறு எதை நான் பார்க்கவில்லை ஞானம். ஏதாவது மச்சம் இச்சம் முகத்திலிருந்ததா என்ன?"

"ஆமாவென்று நான் சொல்லப் போகிறேன் என்று நினைக்கிறாயா? எதிர்பார்க்கிறாயா? அப்படியெல்லாம் நீ ஒன்றும் ஏமாற வேண்டாம் அண்ணா..........."

"அப்போ வேறு என்ன ஞானம்? வெறுமனே என்னைக் 'கோட்டா' பண்ண வேண்டுமென்று ...."

"இப்படிப் பேசுகிறேன் என்று நினைக்காதே அண்ணா. நீ சிறத்தை

Telegrams: COOPFIRE. Telephone: 4361.

The Co-operative Fire & General Insurance Society Ltd.,

MADRAS-1.

President: Sri. T. M. CHINNAYYA PILLAI M. A., B. L.

Transacts

Fire Insurance of all description and
Motor Vehicles Insurance.
For Particulars—Apply to:—

P. SHUNMUGAM, B. A.,

POST BOX NO. 1249 MADRAS-1

சினிமா சிலைடுகள் செய்வதற்கு
சிறந்த இடம்
மோஹன் சித்ர சாலா
64 A கீழாவணிமூல வீதி மதுரை

—"ராஜா"

பார்த்தாய். அமைப்பைப் பார்த்தாய். அழகைப் பார்த்தாய். ஆனால் அவளது முகத்தில் பரவிக்கிடந்த சோகத்தைக் கண்டாயா என்று தான் கேட்கிறேன்?"

"உ......ம்......என்ன?"

"தாங்களாகவே வாழ்வின் இன்பத்திற்கு துணைவனைத் தேர்ந்தெடுக்கும் உரிமை பெண்ணுக்குக் கிடைக்கிறவரை இது போன்ற கட்டத்தில் பெண்ணின் முகம் எப்படி இருக்கிறது என்பதை அவசியம் கவனிக்க வேண்டும்.............கூடிய மட்டும் நேருக்கு நேர் பார்த்து பெண்ணுக்கு பெண் விபரம் அறிவதும் நலம்."

"அப்பாடி! இந்த பெரிய தத்துவத்தை பெண்களின் உரிமைப் போராட்ட வெற்றி என்று நீ கண்டு பிடித்து விட்டாயாக்கும்..........."

"கிடையாது அண்ணா கிடையாது. இது நான் சொன்னதுதான் என்றாலும் படித்தது சீன ஆசிரியை **"ஜேட் ஸ்நோவாங்"** எழுதிய **"ஆசிய நாடுகளில் திருமண முறைகள்"** என்ற புத்தகத்தில். தெரிந்ததா?"

"ரொம்ப சரி ஞானம். என்றாலும் புது ஆட்கள் என்றதால் கூச்சமும் பயமும் இருந்திருக்கலாம் அல்லவா? நான் என்னமோ அப்படித்தான் நினைக்கிறேன்."

"உன் ஆசைக் கோளாறு அப்படியிருக்கலாம். அது தப்பில்லை. அறிவுப்பிரச்சாரத்தில் முன் செல்லும் நாம் — அறிஞர்களால் வழி நடத்தப்படும் நாம் — சீர்திருத்தத் துறையில் செயல் புரியும் நாம் — முன்னேற்ற முழக்கமிடும் நாம் — முன் மாதிரியாக எதிலும் யாருக்கும் இருக்க துடிதுடிக்கிற நாம் — இதில் நன்றாக நாட்டம் வைத்து உண்மையை அறிந்தே அடுத்த வீட்டிற்கு அடி எடுத்து வைக்க வேண்டும். தெரிந்ததா?"

x x x

அழுதாலும் அலறினாலும் — கொதித்தாலும் கோபித்தாலும் — சினந்தாலும் சீறினாலும் — தான் பெற்று வளர்த்த பெண்ணை லட்சியம் செய்தால், குடும்பத்தலைவன் — பெற்றவன் — பெரியவன் — என்ப

கடவுளைப்பற்றி :

"கடவுள் பெண்ணை கடைசியாகத் தான் படைத்தார். இதன் நோக்கம் ஆண்மகனைப் படைக்கும்போது தமக்கு புத்தி போதாமல் போய் விட்டதே என்ற கவலை தான்."

— "டேன்பென்னெட்."

"கடவுளின் இடத்தை இப்போது அணு குண்டு கைப்பற்றி விட்டது. கடவுளுக்குப் பயப்படுவதை விட்டு விட்டு எல்லா நாடுகளும் அணு குண்டிற்கே அஞ்சுகின்றன."

— "ராஜாஜி."

"உலகையும் உயிரினத்தையும் கடவுள் படைத்தார் என்று கூறுகிற பொழுது, கடவுள் உண்டான வரலாற்றையும் அதற்கான ஆதியையும் நாம் கூறவேண்டியதாகவே இருக்கிறது."

— "திமோசேன்கோல்."

— தமிழ்த்தென்றல்

வைகளுக்கு உண்டான மதிப்பு என்னாவது?

"ஏதோ சிறு வயதில் பழக்கம். சொந்தம். இதற்காக வாழ்க்கை பூராவும் முட்டி தட்டும் 'கிளார்க்' வேலையில் கிடந்து சாவுகிற "மூர்த்திக்கு" கொடுத்தால், பிறகு காலம் முழுவதும் நல்லதுகெட்டது எல்லாம் நானே தானே சுமந்துதீரவேண்டும்" சிவசங்கரரின் நினைப்பு இது தான். முடிவும் அப்படித்தான்.

இதனால் தான், உயர்ந்த இடத்திலிருந்து — செல்வந்தர் வீட்டிலிருந்து — கிராக்கி என்றவுடன் ஆயிரத்திற்கு நகை ஆயிரம் ரொக்கம் என்பதற்கும் சம்மதித்து விட்டார்.

திருமண ஏற்பாடுகள் தடபுடலாக நடந்தன.

x x x

நலிந்தவர்களே நாளும் கிழமையும் வேண்டுமென்று நாட்டம் வைக்கிறபொழுது, நடுத்தர வகுப்பார் இதில் நம்பிக்கையில்லாமல் எப்படியிருப்பார்கள்?

அந்த நாளும் வந்தது கிழமையையும் சேர்த்திழைத்து இழுத்தவாறே.

மணவறைக்கு பெண் வந்துவிட்டாள். மாப்பிள்ளையோ பெண் வீட்டிற்கு வந்து விட்டான். ஆனால்...... "கச முச"வென்று அவர்கள் கூடிக் கூடிப் பேசுவதைப் பார்த்தால்...... இது எல்லாவற்றையும் விட

"மூர்த்தி" வந்து '**மாப்பிள்ளைத் தோழனாக**' வந்திருந்தது தான் பெரிய ஆச்சரியமாக இருந்தது சிவசங்கரருக்கு.

அவரைப் பொறுத்த வரை அவர் வந்து அழையா விருந்து தான்!

"ரொக்கத்தை இப்போதே எண்ணிவிட வேண்டும்" மாப்பிள்ளை இப்படி அடம் பிடிக்கிறான் ஒரேயடியாக. பேச்சு வெளிப்படையாகவே வந்து விட்டது இப்பொழுது.

நாகரிகத்தைக் காப்பாற்றுகிற — சீர்திருத்தம் சீர்திருத்தம் என்று சிங்காரம் பேசுகிற — செம்மல்களே இப்படி கிளியாட்டம் பெண் கிடைக்கிறபோது பணத்தைப் பெரிதுஎன்று நாடகமாடினால் பெண்களைப் பெற்றவர்கள் தலையில் துண்டை போட்டுக் கொண்டு போக வேண்டியதுதான். வேறு செய்வதற்கு என்ன இருக்கிறது?

அறிவைப்பற்றி :

"அறிய வேண்டுமென்ற ஆவலாலும் உணர்வாலும் தான் மனிதன் மிருகத்தினிடமிருந்து வேறுபடுகிறான்."

— "அரிஸ்டாடில்."

"இயற்கையின் வசதிகளை தனது மகிழ்ச்சிக்கு உபயோகிக்கும் திறமையை மனிதனுக்கு அளித்தது தான் அறிவு."

— "பெர்ட்ராண்ட் ரசல்."

"அறிந்து கொண்டதே அறிவு. அதற்கு வழியும் வலுவும் கொடுப்பது புத்தி."

— "கார்டினல் நியூமென்."

— தமிழ்த்தென்றல்

என்னென்னமோ நியாயங்கள் — கெஞ்சுதல்கள் — ஒரே வாரத் தவணை — வேண்டுதல்கள் — எதும் எறவில்லை மாப்பிள்ளை வீட்டாரிடம். இதில் மாப்பிள்ளையின் தங்கை 'ஞானம்' வெடுக்கு வெடுக்கென்று பேசியது தான் சிவசங்கரருக்கு ஒரே எரிச்சலாகப் பற்றிக் கொண்டது.

"பணத்திற்காக திருமணம் செய்கிற இவர்கள் சம்பந்தம் எனக்கு வேண்டவே வேண்டாம். நான் உறுதியாக பணம் கிடைக்கும் என்று எதிர்பார்த்திருந்த பண்ணையார் எதிர் பாராமல் ஏற்பட்ட 'புயலை'க் காரணமாகக் காட்டி அடுத்த வாரம் தருவதாகக் கூறி விட்டார். இதை நம்பவில்லை மாப்பிள்ளை வீட்டார்" என்று வேகம் வேகமாகப் பேசியவர் "ஏய் மூர்த்தி! இங்கே வா. நீ தான் மாப்பிள்ளை. உனக்கே சரோஜாவை கட்டிக்கொடுக்கிறேன்" என்றார்.

ஆவேசம் அந்துக்கொண்ட அற்புதம் இப்படி!

என்னே ஆச்சரியம்! கூடியிருந்த வாலிபக் கூட்டம் கைதட்டி 'சட சட' வென்று பொரிந்து தள்ளி விட்டது. இதில் மாப்பிள்ளை சாமியப்பனும் சேர்ந்து கைதட்டுகிறானே! அவனுக்கு என்ன கிறுக்கா?

குடு குடு வென்று வந்த மூர்த்தி மாலையை மாற்றி மோதிரத்தை மாற்றி.........சரோஜாவை கைப்பிடித்துக் கொண்டான்.

ஆதவனைக் கண்ட "ஸ்ரீய காந்தம்" அகன்று மலர்ந்து அழகு காட்டியது!

மாப்பிள்ளைத் தோழன் — அது தான் இப்போது மாப்பிள்ளையாகி விட்ட — மூர்த்தியை பாராட்ட "ஞானம்" எழுந்தாள். பேசினாள்.

"சரோசா முதல் திருமண ஏற்பாட்டை விரும்பவில்லை என்பதை நாங்கள் பெண்பார்க்கப் போன அன்றே அவளது முக வாட்டத்திலிருந்து கண்டேன். எனது அண்ணனிடம் இதைக் கூறினேன். சரோஜாவைவிட்டுக் கூட்டி வந்தேன். பேசினேன்.

"தன்னுடைய 'காதலை' ஒளிவு மறைவின்றி கூறினாள். "என் வாழ்வு மூர்த்தியுடன் இணைய வேண்டும். இல்லாவிட்டால் சாவே எனக்குக் கதி" என்று பிரலாபித்தாள்.

"உடனே "மூர்த்தி"க்கு போன் செய்து அவர் செயல் புரிகிற ஆபிஸிலிருந்து வரும்படி கூறினேன்.

மனதைப்பற்றி:

"மனம், மனச்சாட்சி இவைகளை காட்டி எந்த பலவானையும் மிரட்டி விடலாம்."

— "ஷேக்ஸ்பியர்."

"அறிவிற்கு மற்றொரு பெயர் மனம்."

— "லெனின்,"

"அறிந்தவற்றைக் கொண்டு புத்தியில் நினைத்து முடிவாக ஏற்படுகிற உணர்விற்கே மனம் என்று கூறிக் கொள்கிறேம்."

— "ஜான் ரஸ்கின்."

— தமிழ்த்தென்றல்

முகப்பரு, சேத்துப்புண், சொரிசிரங்கு, கரப்பான் முதலியவைகளுக்கு
கைகண்ட நிவாரணி
"சோஹல்"
சகல சருமரோக களிம்பு
* * * * * *
குழந்தைகளுக்கு ஏற்படும் மாந்தம், அஜீர்ணம், வயிற்றோட்டம் முதலிய வைகளைப் போக்கி ஆகாரத்தை சமநிலைப்படுத்தி குழந்தைகளை ஆரோக்கியத்துடன் வளர்க்கும்
ஆரென்ஸ்
கிரைப்-டில்-வாட்டர்
தயாரிப்பாளர்கள்:
"ராஜம்" பாரத் டிரக்ஹௌஸ், மதுரை.

போட்டோ மார்க்
சந்தனாதித் தைலம்
எங்களிடம் அநேகவித மூலிகையினால் தயார்செய்யப்பட்ட சந்தனாதி, அரைக்கீரைத்தைலமும், ஹேர் ஆயில்களும், வாரம் இரு முறை ஸ்நானம் செய்தால் கண் எரிச்சல், கண் மங்கல், கண்ணீர் வடிதல், சரீரத்தில் உஷ்ணம் முதலிய வியாதிகளை நீக்கி கூந்தலை வளரச்செய்யும்.
போன்றுவிலாஸ் ரிஜிஸ்டர்டு யுபயோகியுங்கள்.
Pro: V. M. சேர்மச்சாமி நாடார்,
எண்ணெய்க் கடை,
M. S. பட்டணம் பொடி ஏஜண்டு,
ஷாப் வியாபாரம், தெப்பத்திற்கு மேல்புறம், விருதுநகர்.

— தமிழ்த்தென்றல்

"அண்ணாவைக் கலந்தேன். சீர்திருத்தம் பேசுகிற நாம் முன்மாதிரியாக நடக்கவேண்டும் என்று போராடினேன். எல்லாரும் கலந்து பேசித் திட்டமிட்டோம். செயலாற்றினோம்.

"மாமா பணம் கேட்டிருந்த பண்ணையாரைப் பார்த்து விவரம் கூறி கெஞ்சினோம். கூத்தாடினோம். ஒரு வாரம் கழித்து தருவதாகக் கூறி விடுகிறேன் என்றார்.

"மணவறையில் பணத்தைப் பெரிது என்று நாடகமாடி நாய்கள் வலியுறுத்த வலியுறுத்த கோபம் கரை உடைத்து வெள்ளமானது. உடனே உறவு என்று உரிமை பாராட்டினார். மூர்த்தியை அழைத்து 'மாற்று மாலையை' என்று கூறி விட்டார். நாங்கள் எதிர் பார்த்தது இதைத் தான். மகிழ்ச்சி அடைகிறோம்.

"மூர்த்தி எங்களுடன் பிறவா விட்டாலும் அவரும் எங்கள் சகோதரர் தான். இளவயதில் இன்பம் மிதக்க துடிதுடித்த சரோவின் ஆசையை — மனங்கலந்த மூர்த்தியின் காதலை — நாங்கள் பேணி விட்டோம். அவர்களது காதல் வாழ்வு கனிவு பெறட்டும். பெண் இனத்தின் இந்த வெற்றிக்கு உதவிய பகுத்தறிவு வாலிபர் பலருக்கும் எங்கள் நன்றி உரித்தாகுக."

பெரியவர் சிவசங்கரர் பிரமித்து நின்றார் பெருமாள் கோவில் கொடி மரத்துக் கம்பம் போல.

"காலம் மாறி வருகிறது. இனி சின்னதுகள் விஷயத்தில், எடுத்துக் கூறி — கலந்து பேசி — காரியத்தை முடிப்பது தான் நலம்" என்று அவரது உள் உணர்வு விவரம் கூறிய தோ என்னமோ அவராகவே பெருமூச்சு விட்டபடி தலையை ஒரு ஆட்டு ஆட்டிக் கொண்டார்.

கனைத்துக் கொண்டார். மகளையும் மாப்பிள்ளையையும் வாழ்த்தினார். சமுதாய சீர்திருத்தச் சிற்பிகளான ஞானத்தையும் சாமியப்பனையும் பாராட்டினார்.

ஞானத்தின் அண்ணன் சாமியப்பன் இப்பொழுது மூர்த்திக்கு மாப்பிள்ளைத் தோழன்!

சீர்திருத்தம் பற்றி :

"மனித வாழ்வில் — நாட்டின் முன்னேற்றத்தில் — நன்மையும் சீர்திருத்தமும் வேண்டுமென்றால் அதில் பெண்களும் சேர்ந்தவர்கள் தான்."

துருக்கியத்தளபதி — "கமால்பாஷா."

"சீர்திருத்தம் என்று நாம் எவ்வளவோ பேசுகிறோம் இன்று. ஆனால் இவைகளை யெல்லாம் ஆரியர்கள் பின்பற்றி நடந்து விட்டார்கள் வெகு காலத்திற்கு முன்பே."

திராவிடத்தளபதி — "அறிஞர் அண்ணா."

"தனி மனிதனின் உரிமை, மதிப்பு, திறமை இவைகளைப் பற்றி பிரமாதமாக பேசுகிறவர்கள் தங்களிடையே பசியால் பரதவிக்கும் ஆயிரம் ஆயிரம் மக்களை மறந்தே விடுகின்றனர். இதில் ஏற்படுகிற சீர்திருத்தமே மனித வர்க்கத்தின் உடனடித் தேவையாகும்."

சோவியத்தளபதி — "மார்ஷல் ஸ்டாலின்."

— தமிழ்த்தென்றல்

அறிஞர்களின் மனச்சாட்சி

(தென்னாப்பிரிகா டர்பன் திரு. ச. மு. பிள்ளை அவர்கள்)

உலகத்திலே மனிதர்களை விலைக்கு வாங்கி விடலாம். விலைக்கு என்றால் அவர்கள் உடலையா? ஆம். அது மட்டுமில்லை; அவர்களுடைய மனச் சாட்சியைக் கூட. ஆனால் மனச் சாட்சியைப் பணத்திற்கு விற்கிறவர்கள் மனிதர்களா, என்பது தான் கேள்வி.

மனிதனுக்குத் தரித்திரம், காலா பக்கங்களிலும் பிதுங்கித் தின்னலாம். யமன் அவனுடைய வீட்டு வாயலில் இருந்து கொண்டு உள்ளே எட்டி எட்டிப் பார்த்துக் கொண்டிருக்கலாம். நோய் பல உருவங்களெடுத்து அவனைச் சித்திரவதை செய்யலாம், உலகமெல்லாம் ஒன்று சேர்ந்து கொண்டு, ஒரே குரலில் அவனைப் பரிகசிக்கலாம். அரசாங்கத்தின் அதிருப்திக்கு அவன் இரையாகலாம். அவன் தேகத்தை இரும்புச் சங்கிலிகள், பல வருடங்களாக இறுக்கிப் பிடித்துக் கொண்டிருக்கலாம்.

ஆனால், அவன் மனச் சாட்சியை மட்டும் எவனும் விலை கொடுத்து வாங்கி விட முடியாது. அப்படிப்பட்டவன் தான் மனிதன். படைப்பில் அவனுக்கு முதலிடம் உண்டு.

சாக்கடையிலே அவன் வாழ்வு; ஆனால் அவனுடைய ஆத்மா நிர்மலமான வானத்திலே பவனி கொண்டிருக்கிறது. உடலெல்லாம் ஒரே அழுக்கு; ஆனால் உள்ளமோ பனிக்கட்டி போல் சுத்தமாயிருக்கிறது.

இந்த மாதிரியான காட்சிகளை எத்தனையோ பேருடைய வாழ்க்கையில் பார்க்கிறோம். அவர்கள், தரித்திர நாராயணனைக் கண்டு பயந்து ஓடவில்லை. அவனோடு போராடினார்கள். செல்வத்தைக் கண்டு மயங்கவில்லை; அதனைக் காலால் உதறித் தள்ளக் கூடிய புழுதி மண் போல் கருதியிருக்கிறார்கள்.

"சோக்ரதஸ்" (சாக்ரட்டீஸ்) கிரீஸ் தேசத்தில் இரண்டாயிரத்து நானூறு வருடங்களுக்கு முன்னே வாழ்ந்த பெரிய ஞானி. தரித்திர வாழ்க்கை; பொல்லாத மனைவி. இல்லானை இல்லாளும் வேண்டா

— தமிழ்த்தென்றல்

ளல்லவா? ஆனாலும் அவன் இளைஞர்களுக்குத் தன் மனச் சாட்சிப்படி நல்லுபதேசங்களைச் செய்துகொண்டு வந்தான். கடைசியில் அவன் மீது அரசாங்கத்தார் குற்றஞ் சாட்டி மரண தண்டனை விதித்தனர். கொஞ்சமாவது மனஞ் சலித்தானா? விஷத்தை வாங்கி அப்படியே குடித்து விட்டான். அப்பொழுது கூட சிஷ்யர்களுக்கு நல்ல உபதேசங்களைச் செய்வதாகிய கடமையைச் செய்து கொண்டு தான் இருந்தான்.

"போஷியன்" என்ற ஒரு கிரேக்க சேனாதிபதி; சுத்த வீரன்; தூர திருஷ்டி படைத்தவன். மகா அலெக்ஸாந்தர் என்பவன், இவனைத் தன் கட்சிக்கு இழுத்துக்கொள்ளப் பார்த்தான். ஏராளமான செல்வத்தைக் கொடுப்பதாகச் சொன்னான். 'ஆசியா கண்டத்தில் நான்கு பெரிய நகரங்களை ஜாகிராகக் கொடுக்கிறேன்' என்றான். இந்த ஆசை வார்த்தைகளுக்கெல்லாம், "போஷியன்" என்ன பதில்சொன்னான் தெரியுமா? **'அலெக்ஸாந்தர் உண்மையிலேயே என்னை மதிப்பதாயிருந்தால், என்னுடைய மனச் சாட்சி என்னிடத்திலேயே இருக்கச் செய்யட்டும்'** என்றான்.

"ஜான்ஸன்" என்ற ஆங்கிலப் புலவனைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? இவன் பரம ஏழை. வயிற்றுச் சோற்றுக்காக எத்தனையோ முறை அலைந்து திரிந்திருக்கிறான். இப்படிப்பட்ட கஷ்டமான நிலையிலுங்கூட தன்னை அண்டியவர்களுக்கு உபகாரஞ் செய்வதில் சிறிது கூடப் பின் வாங்க மாட்டான். கிழிந்த சட்டையைப் போட்டுக் கொண்டிருப்பான். குளிரோ நடுக்கும். தன் சட்டைப் பையில் ஏதேனும் காசுகள் வைத்திருந்தால், அவற்றை மற்றவர்களுக்குத் தாராளமாக வழங்கி விடுவான். இவ்வளவு கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தும், பணத்துக்காக இவன் ஆசைப்பட்டதே கிடையாது.

ஒரு சமயம் இவன் நோயினால் மிகவும் அவதிப்பட்டுக் கொண்டிருந்தான். கையிலோ ஒரு காசு கூட இல்லை. அப்பொழுது இவனுடைய புலமையில் மதிப்பு வைத்திருந்த **மூன்றாவது ஜார்ஜ் மன்னன்**, இவனுடைய உபயோகத்திற்கென்று சொற்பத் தொகையை ஒரு ஆளிடம் அனுப்பி வைத்தான். "ஜான்ஸன்" பணத்தைத் தூதனிடமே திருப்பிக் கொடுத்து விட்டு, **"நான் ஒரு குறுகிய சந்தில் வசிக்கிறேன் என்பதற்காக இந்தப் பணத்தை அரசன் அனுப்பினான் போலும்; அவனுடைய ஆத்மா தான் குறுகிய சந்திலே வசிக்கிறது என்று போய்ச் சொல்"** என்று சொல்லியனுப்பினான்.

"கோல்ட்ஸ்மித்" என்பவன் மற்றோர் ஆங்கிலப் புலவன். வறுமையின் ஆழத்தை நன்றாகக் கண்டு அநுபவித்தவன். பெரிய கவிஞன். புல்லாங்குழல் வாசித்துக் கொண்டே ஐரோப்பா முழுவதும் காலால் நடந்து சென்று தன் வயிற்றை நிரப்பிக் கொள்ள வேண்டிய நிலையில் இருந்தான். குடிசையிலேயும், மைதானத்திலேயும் இவன் படுத்துக் கழித்த நாட்கள் பல. நடிகனாக இருந்தான். பெரிய மனிதர் வீட்டில் சேவகம் புரிந்தான்; வைத்தியனாக வேலை பார்த்தான்; ஆனால் தரித்திரம் மட்டும் இவனை விடவேயில்லை. பட்டினி என்பது இவனுக்குச் சர்வ சாதாரணம். கடைசியில், பிழைப்புக்கு வேறு வழியில்லாத நிலைமையில், புத்தகம் எழுதத் தொடங்கினான். மேலே கூறப்பட்ட "ஜான்ஸன்" என்ற புலவனும் இவனும் நெருங்கிய சிநேகிதர்கள். ஒரு சமயம் "கோல்ட்ஸ்மித்திட"மிருந்து, "ஜான்ஸனுக்கு" ஒரு சீட்டு வந்தது. **'நான் ரொம்பக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறேன்; உடனே வந்து எனக்கு உதவி செய்'** என்றது அச் சீட்டு.

"ஜான்ஸன்" ஓடினான்; பார்த்தான். "கோல்ட்ஸ்மித்" எங்கே? சிறையிலே. ஏன்? வீட்டு வாடகை கொடுக்கவில்லை. அதற்காக வீட்டுக்காரி, அவனைச் சிறையிலே அடைத்து விட்டாள். "கோல்ட்ஸ்மித்தின்" வீட்டிலே ஒன்றுமில்லை. அவன் எழுதி வைத்திருந்த கையெழுத்துப் பிரதி ஒன்று தான் இருந்தது. இதை "ஜான்ஸன்" புரட்டிப் பார்த்தான். மிக அழகான நூல் என்று பட்டது. உடனே ஒரு பிரசுரகர்த்தனிடம் அதனை எடுத்துச் சென்று கொடுத்தான். அறுபது பவுன் கிடைத்தது. அதைக்கொண்டு வீட்டுக் கடனை அடைப்பித்தான். இந்தக் கையெழுத்துப் பிரதி தான் **'விகர் ஆப் வேக்பீல்ட்'** என்ற பிரபல நூல்.

இப்படி வாழ் நாள் முழுவதும் வறுமையிலே வாழ்ந்த போதிலும் — இறக்கும்போதுகூட "கோல்ட்ஸ்மித்" கடனாளியாகவே இறந்தான். இவனைப் பணம் மயக்கிவிட வில்லை. இவன் காலத்தில் இங்கிலாந்தில் அரசியல் கட்சிகளின் பிரசாரம் மிக அதிகமாயிருந்தது. **"ஸர் ராபர்ட் வால் போல்"** என்பவன், ஆயிரக்கணக்கான பணத்தைச் செலவழித்து, துண்டுப் பிரசுரங்கள் மூலமாகவும் பத்திரிகைகள் வாயிலாகவும் எதிர்க் கட்சியினரைத் தாக்கிப் பிரசாரம் நடத்தி வந்தான். இந்த வேலைக்கு "கோல்ட்ஸ்மித்தை" உபயோகித்துக் கொள்ள வேண்டுமென்பது அவன் ஆவல். "கோல்ட்ஸ்மித்" நல்ல எழுத்தாளனல்லவா? "டாக்டர் ஸ்காட்" என்பவனை, "கோல்ட்ஸ்மித்திடம்" அனுப்பி, பணத்துக்கு எழுத முடியுமா வென்று கேட்டு வரச் சொன்னான். அப்பொழுது "கோல்ட்ஸ்மித்" பரம சங்கடமான வாழ்க்கையை நடத்திக் கொண்டு வந்தான். "டாக்டர் ஸ்காட்", இவனை அணுகி விஷயத்தைத் தெரிவித்ததும், **'என்னுடைய தேவைகளுக்கு வேண்டிய அளவு சம்பாதித்துக் கொள்ள எனக்குத் தெரியும். உன்னுடைய உதவி தேவையில்லை'** என்று கண்டிப்பாகச் சொல்லி யனுப்பி விட்டான்.

இப்படி எத்தனையோ உதாரணங்களை வரலாற்றிலிருந்து நாம் எடுத்துக் காட்டலாம். பணத்திற்காக மனச் சாட்சியை விற்கிறவர்கள் மனிதர்களாக மாட்டார்கள்.

அறிஞர்கள் வரிசையில் அப்படி நாம் யாரையும் பார்க்கவே முடியாது.

துப்பறியும் பாதையிலே:

பூட்டிய வீட்டிற்குள் நுழைந்த..........!

ஆதாரம்: "பிரையான் மார்கன்"

கதை: "ராமி"

"காலம் கெட்டுப் போன அழகு ரொம்ப ரொம்பமோசமாய்த் தான் இருக்கு துரை. நீயும் பாரு. இந்தக்காலத்திலே யாராவதுபெரும் பணக்காரராக இருந்து, குடும்பம் குழந்தை குட்டியில்லாமல் போய்... ...."

"திடீரென்று ஒருநாள் வியாதியில்லாமல் மண்டையைப் போட்டால், போலீசார் காலம் காலமாக அவர்கள் காப்பாற்றி வளர்த்த உடலைக் கூறு போட்டுப் பார்க்க "போஸ்ட் மார்ட்டத்திற்கு" அனுப்பி விடுகிறார்கள். இதில் ஒன்றும் தப்பில்லையே சேகர்!"

"இல்லை தான். என்றாலும் சந்தேகப்பட இடமிருக்கிறது என்பதற்காக......................"

"சந்தேகப்படுவதும் விசாரிப்பதும் அதிகாரிகள் கடமை. இதில் போய் குறுக்கே நின்றால், "வழி மறைத்திருக்குதே மலை போல்......" என்று நந்தனார் கீர்த்தனை பாடமாட்டார்கள் சேகர் அதிகாரிகள். உன்னுடன் பழக்கம்.............நண்பன் என்பதற்காக............"

"மட்டும் நான் மூர்த்தியைக் குற்றவாளியில்லை யென்று கூறவில்லை துரை. உத்தமன் — உயர்ந்த பண்பினன் — ஒதுங்கி வாழ்ந்தவன் — ஊரில் எது நடந்தாலும் அவனுக்கு அது பற்றி சிந்தனையில்லை — தானுண்டு தன் படிப்பு உண்டு — என்றிருப்பவனை..........."

"அடடா! பாரு பாரு சேகர்! நீ என்ன இப்படி சிறு பிள்ளை மாதிரி அர்த்தமில்லாமல் அடிக்கடித்துப்பேசுகிறாய். சந்தேகப்படக் காரணம் இருக்கிறது. இடம் இருக்கிறது. என்பதால் தான் இன்ஸ்பெக்டர் ராம் அவனைச் சந்தேகிக்கிறார். இறந்துபட்ட இரத்தினவேலருக்கு இவன் உறவினன். இவன் படித்து நல்ல நிலைமைக்கு வரவேண்டுமென்று அவர் கருதினாலும், மேற்கத்தியநாடுகளுக்கெல்லாம் போய் விவசாய நுண்ணறிவு பெற விரும்பியதை ஏற்றுக் கொள்ளாமலிருந்திருக்கிறார். "நம் நாட்டு முறைகளை வைத்தே நீ எனக்குப் பிற்காலத்தில் பண்ணையைக் கவனித்தால் போதும். நான் தான் விவசாயிகளை அவர்களது

உடல் உழைப்பை முதலாகவும் பங்கு போலவும் வைத்துக்கூட்டுறவு முறையில்தானே நடத்திவருகிறேன். இந்த உயர்வே காலம் காலத்திற்குப் போதும்" என்று எதிர்த்திருக்கிறார். இப்படிப்பட்டகாரணங்களால்தனது மாமாவை இவன் சுத்த "கட்டுப் பெட்டி" என்று வெளிப்படையாக பேசி வந்திருக்கிறான்."

"ஆமாம் துரை ஆமாம்! அப்படி பேசியதற்கு சாட்சி இருக்கிறது. "அவர் ஒழிந்தால் தான் எனக்குக் காலம்" என்று கூறினான் என சாட்சியம் இருக்கிறது. இதையெல்லாம் நீ வந்தா கூற வேண்டும்? அதற்குத் தான் போலீசார் இருக்கவே இருக்கிறார்களே! இப்பொழுது நான் கேட்கப் போவது.........."

"அப்படி யென்றால் நீ ஏன் பேசப் போகிறாய்? நான் சொல்ல வேண்டியது. நீ கேட்க வேண்டியது ...."

"இல்லையே துரை! நான் கேட்பது என்ன வென்று சொல்ல வேண்டாமா?"

"அப்படியானால் 'நான் சொல்லப் போகிறேன்' என்று சொல்லி, அதை விட்டுவிட்டு 'நான்கேட்கப்போகிறேன்' என்றால்...............!"

"சரியாய்ப் போச்சு! எடுத்ததற்கெல்லாம் கேலி தானா உனக்கு? எல்லாம் உனக்கும் சிநேகிதம் இருந்து அவனுக்கு ஏதாவது வந்தா தெரியும் உன் பாடு அப்போது?"

"ஐய்யயே! நீ என்ன இப்படி ஒரேயடியாய்ச் சடைத்துப் புளித்துப் போகிறாய்? இருக்கிற நிலவரம் இப்படி என்று சொன்னேன். இல்லை நீ வந்து............"

"கட்டாயமென்று உத்தரவிடுகிறேன். கண்டிப்பாக நாம் இதில் போலீசாருக்கு நேர் விரோதமென்றாலும் செயலாற்றியே தீர வேண்டும். மூர்த்தியே குற்றவாளி என்று நம் விசாரணையில் வந்தாலும் பரவாயில்லை. எனக்கு என்னமோ அவ்வளவு நம்பிக்கை இருக்கிறது அவன் மீது. நான் உன்னிடம் சொல்வதெல்லாம்..............."

"போலீசாருக்கு விரோதமாக — வழக்கத்திற்கு மாறாக — இதில் எதிர்க்கட்சி ஆடவேண்டும். அவ்வளவு தானே!"

"ஆமாம் துரை! எதிர்க் கட்சி என்றால் நியாயத்திற்கு அல்ல — நேர்மைக்கு அல்ல — நிரபராதிக்கு

அல்ல — சந்தர்ப்பத்திற்கும் — சூழ்நிலைக்கும் — வெறும் சட்ட ஞானம் பேசுகிற அதிகார வர்க்கத்திற்கும். தெரிந்ததா?"

"நீ உட்கார்ந்திருக்கிறது அப்போதே எனக்குத் தெரிந்து தானே இருக்கிறது. நீ பேசியது தான் எனக்கு இப்போது கேட்டது. போதுமா?"

"போதும் துரை போதும். இதோடு பேச்சும் போதும். இனி "தன்னைக் கண்டது பாறை கண்டது" என்றிருக்க வேண்டும், நம் அறிவின் ஆக்கம் — ஆற்றல் — அனுபவம் எல்லாம்."

X X X

உண்மையிலேயே துப்பறியும் துரைக்கு இதில் சந்தேகப் பிரியமே இல்லை தான். என்றாலும் தன்னுடன் இந்த துப்பறியும் பணியில் பல வருடங்கள் துணையாக இருந்து செயலாற்றி வருகிற நண்பன் இவ்வளவு தூரம் வலியுறுத்துகிறபொழுது மேலும் எப்படித் தான் அடம்பிடிப்பது?

இத்துடன் மற்றொரு உணர்வும் துரையின் அறிவிலே தோன்றி உருவகம் பெற்றது. வெறுமனே நண்பன் — பழக்கப்பட்டவன் என்பதற்காக மட்டும் இப்படி "விடாக்கண்டன்" வேடம் போட மாட்டான் சேகர் என்பதே அது.

ஆனால் எப்படி எப்படியோ மண்டையைப் போட்டு உருட்டி உருட்டி

பார்த்தாலும் மூர்த்திக்கு ஆதரவாக கொலை நடந்த அன்றிரவு அவன் கல்லூரி ஹாஸ்டலில் இருந்தான் என்பது ஒரு சாதகமாக இருந்ததும் தெரிந்தது.

இதைக்கூட போலீசார் மனம் வைத்தால் ஒரே ஒரு சாட்சியை விட்டு அவனை சினிமாவில் இரண்டாவது ஆட்டத்தில் கண்டதாக நிரூபணம் செய்து விட்டாலும் விடலாம் அல்லவா?

அப்படி அவர்கள் செய்தாலும் மற்றொரு வசதி மூர்த்திக்கு இருக்கவே இருந்தது. உட்புறம் நன்றாகப் பூட்டப்பட்டிருந்த அறைக்குள் தானே அவர் இறந்து கிடந்தது.

ஆகவே வெறுமனே மனத்தாங்கல் இருந்தது என்ற காரணத்தை வைத்து மட்டும் குற்றவாளி மூர்த்தி தான் என்று எப்படி சாதித்து விட முடியும்? இப்படியொரு நம்பிக்கை இருந்தாலும் இதிலும்கூட மற்றொரு மாதிரி போலீசார் நினைத்தால் பல

— தமிழ்த்தென்றல்

மதுரை
"நாகலிங்கம் பவான்"
வழங்கும்
பலரக ஊறுகாய்கள்
சாம்பிள் பாக்கெட் 1-க்கு பைசா 6.
எங்கும் கிடைக்கும். இதையே கேளுங்கள்.
சுத்தம், சுகவழி, மணம், குணம், ருசி நிறைந்தவை.
ஏஜண்டுகள் தேவை.
தயாரிப்பாளர்கள்:—
நாகலிங்கம் பவான்
ஊறுகாய் உற்பத்தி நிலையம்,
தெற்குக் காவல் கூடத்தெரு, : : மதுரை.
"ராஜம்"

ஸ்தாபிதம் "1938" ரிஜிஸ்டர் நம்பர்: 85686 தந்தி: "சில்வர்"
காபி மிகவும் உணர்ச்சிகரமாக இருக்கிறதென்றால் அது "கிருஷ்ணா" காபி பவுடரில் தயாரித்ததாகத் தான் இருக்கும்.
நீங்கள் உபயோகிக்கிறீர்களா?
இன்றே உங்கள் வியாபாரிகளிடம் கேளுங்கள்
"கிருஷ்ணா காபி பவுடர்"
என்று.
தயாரிப்பாளர்கள்:—
கிருஷ்ணா காபி & டீ ஒர்க்ஸ்,
டவுன்ஹால் ரோடு, மதுரை.
கிளை:- புதுக்கோட்டை.
— "ராஜம்."

— தமிழ்த்தென்றல்

"ஏன்? எப்படியோ காரியம் முடிந்துவிட்டது. பத்து நாள் முன் பின்நடக்கட்டுமே. ஊருக்குப் போய் விட்டு பின்னால் அங்கு போகிறது தானே."

துரை சர்வ சாதாரணமாகப் பேசினார் இப்படி.

"மிஸ்டர் தாங்கள் கூறுவது ஒருவகையில் பொருத்தமாகத்தான் இருக்கிறது. என்றாலும் விசாக் அன்பர் பெரிய தொழில் அதிபராக இருப்பதால், போய் பேசுகிறவரும் தகுதியுடையவராக இருக்கவேண்டாமா? உலகம் வெளிமயக்கில் தானே சிரத்தை காட்டுகிறது......"

"ஆமாம் ஆமாம்! புரபசர் போனால் மிகவும் பொருத்தமாக இருக்கும். இதுதான் நல்லது என்று ...." சேகர் முதல் 'ரெங்ககிரி' யின் பிரரேபணைக்கு உருவம் கொடுத்தான்.

"என்றாலும் இதைவிட தங்கள் நண்பர் துரை போனாலும் சரியாகத் தான் இருக்கும்."

ஆனால் இதை துரை ஆதரிப்பதாக இல்லை. "எப்படியும் அன்பர் புரபசர் போய்வரட்டும்" என்றான்.

எல்லோரும் வலியுறுத்துகிற பொழுது புரபசர் ஒரேயடியாக தட்டிக்கழித்துவிட முடியுமா என்ன? அவரும் அன்றே விசாகப்பட்டணம் கிளம்புவதாக ஒப்பிக்கொண்டார்.

ஒருவருக்கொருவர் அன்பு மொழிகளால் வழியனுப்பிக்கொண்டனர்.

தனது சேகரிப்பான கலைப் பொருள்களையும் விஞ்ஞானப்பொறிகளையும் ஓய்வு நேரத்தில் வந்து பார்த்து ரசிக்கும்படியும் அவர்களது கருத்துரைகளை தெரிவித்து தன்னை உற்சாகப் படுத்தும்படியும் புரபசர் துப்பறியும் அன்பர்கள் துரையையும் சேகரையும் கேட்டுக் கொண்டார்.

X X X

அந்தி நேரத்தின் செவ்வொளி மெல்ல மெல்ல வெளிறி வானத்தே அதுபூத்தயிடமே தெரியாமல்மறைய தொடங்கியது. சேகருக்கு அன்று என்னமோ ஒரே சோம்பல் பொழுதாகவே இருந்ததாகநினைப்பு. ஆனால் துரையைப் பொறுத்தவரை அப்படிச் சொல்லி விட முடியாது.

ஏதோ கோமாளித்தனமாக அந்த ஆந்திரவாடு வந்தாலும் ஒரு வகையில் காரியம் முடிந்தது பற்றி மகிழ்ச்சி தான் என்றாலும், அவன் ஏன் அப்படி ஏதோ பெரிய சிக்கலை ஆராய்வது போல் 'உம்' என்று

> **புகழைப் பற்றி :**
>
> புகழ் வீரச்செயல்களின் நறுமணம். —சாக்ரட்டீஸ்.
>
> தன்னலமற்ற செயலே புகழுக்கு முதற்படி.
> —பிளாட்டோ.
>
> புகழ் நீ எடுத்துக்கொண்டது. பண்பு நீ கொடுப்பது.
> —பயார்டு டெயிலர்.

— தமிழ்த்தென்றல்

இருக்கிறான்என்பதுசேகருக்குவிளங்காமல் இருந்தது.

எந்த பேச்சையாவது இழுத்துப் போட்டுக் கொண்டு நச்சரித்து விடும் துரை இப்படி ஒரே மௌன மேதையாக இருந்தால் இன்னும் குறைப் பொழுது என்னவது?

"அது சரி துரை! இப்படி வெத்து பொழுது போக்குவதற்கு அப்படியே புரபசர் வீட்டுப் பக்கம் போய் வந்தால் என்ன? கலைப் பொருள்களை பார்த்த மாதிரியாகவுமிருக்குமில்லையா?" என்றான். "நானும் அதைத் தான் யோசித்துக் கொண்டிருக்கிறேன். சரி. கிளம்பலாம்" இப்படிக் கூறிய துரை மேலும் தாமதிக்கவில்லை.

அவர்கள் இருவரும் புரபசர் வீட்டை நெருங்குகிற பொழுது வேலையாள் கடை வீதிக்குக்கிளம்பி கொண்டிருந்தான்.

கலைப்பொருள்களையும் விஞ்ஞானப் பொறிகளையும் காண இவர்கள் வந்திருப்பதைக் கேட்டவுடன் எல்லாவற்றையும் சுற்றிப் பார்க்கும்படிக் கேட்டுக் கொண்டான். அவனும் தங்கி விட்டான் அங்கேயே.

சிற்பப் பகுதி, புத்தக அரங்கம், சித்திரச்சாலை, இப்படியாக ஒவ்வொரு பகுதியாகப் பார்த்து வந்தனர்.

விஞ்ஞானப் பொறிகள் உள்ள பகுதி தான் மிக மிக பிரமிக்கத்தக்கதாய் அமைக்கப்பட்டிருந்தது.

"மிகமிக அபாரமான........." பேசிய சேகரின் வாய் வார்த்தை முடியவில்லை. காலடியில் ஏதோ நறுக்கென்ற ஓசை கிளம்பி எதிரொலித்தது. அதேசமயம் அவர்களுக்கு வலது பக்கத்தில் கண்ணாடி பீரோவிற்குள் நிறுத்தப்பட்டிருந்த முழு மனித எலும்புக்கூடு 'மடமட' வென்று ஆடியது.

வேலையாள் 'கீச்' என ஒரே கத்துக் கத்திவிட்டான். சேகருக்கு வியர்த்துக் கொட்டியது. பின்னிட்டு நகர்த்தான். மீண்டும் அதே ஓசை. எலும்புக்கூடு இத்தடவை வேகப்பட்ட ஆட்டம் போட்டு விட்டது.

துரை ஏதோ நினைத்தவனாய் விருட்டென்று சேகரை நின்ற இடத்திலிருந்து நகர்த்தி விட்டு தரையில் காலை வைத்தான்.

தரையோடு தரையாக அங்கே ஓர் பொத்தான். இங்கே பொத்தான் அமுக்கப்பட்டவுடன் எலும்புக்கூடு ஆடுகிறது.

ஏதோ மர்மம்! எச்சரிக்கை செய்வதற்காக இந்த ஏற்பாடு!

"களவாணித்தனம் இருக்கிறது. புரபசர் ஊருக்குப் போகவில்லை. ஏதோ சூது. துரை நாம் நன்றாகச் சிக்கிக்கொண்டோம்" கதறிவிட்டான் சேகர்.

துரையோ தனது இடும்பைத் தடவிப்பார்த்துக் கொண்டான். வேலைக்காரனை விழித்துநோக்கினான் "உள்ளதைச் சொல்கிறாயா? இல்லை ...."

— தமிழ்த்தென்றல்

ஆனாலும் சேகர் விட்டு விட வில்லை, இரத்தினவேலரிடம் இரண்டு வாரங்களுக்கு முன்னர் பரமசிவம் முன்னூறு ரூபாய் கைக்கடன் வாங்கி யிருந்தது டைரியிலிருந்து தெரிந்ததால்,

"வாங்கிய பணத்தை கொடுக்க முடியவில்லை. ஆளையே ஒழித்து விட்டால், கைக்கடன் என்பதால் ரிக்கார்டு என்ன இருக்குமென்று பழி பாவத்தில் இறங்கி யிருக்கிறான் பாவி." இது சேகரின் சாதனை.

இந்த அனுமானத்தை இன்ஸ் பெக்டர் ராம் ஏற்றுக் கொள்ள மறுக்கவில்லை. பரமசிவத்தின்மகன் குமாரரும் கைது செய்யப்பட்டான்.

சாவியைச் சோதனை செய்த மின்சார இலாகா நிபுணர் அதில் மின்சாரம் எல்லை கடந்த அளவிற் குப் பாய்ந்திருக்கிறது என்பதைக் கண்டு பிடித்து விட்டார். சுவரில் அடிக்கப்பட்டிருந்த ஆணியைப் போல பல சோதனையில் பரமசிவத் தின் வீட்டில் கிடைத்தன.

இனி என்ன? அப்பனும் மக னும் சதிக்கும் கொலைக் குற்றத்திற் கும் கூண்டில் ஏற்றப்பட்டனர்.

"கொலை புரிவதற்கான அவசி யமும் நிர்ப்பந்தமும் ஏற்பட கார ணங்கள் கடன் வாங்கியதும் அதை கொடுக்க முடியாமல் போனதும் தான். கதவைப் பூட்டிய பின்னர் சாவியை (செம்பு) அதிலே வைத்து விடும் பழக்கமிருப்பது தெரிந்ததால் வெளிப்புறத்திலிருந்து வயர் மூல மாக மின்சாரத்தை பாய வழி வகுத்து விட்டனர். இறந்தவரின் வீடு மின்சார வசதி பெற்றிருந்ததால் இணைப்பு சிறிதே பொழுதில் எடுத் துக் கொள்ள வசதியாக இருந்தது.

"திடீரெனக் கதவைத் தட்டிக் கூப்பிட்டவுடன் படுத்திருந்தவர் யார் என்பதை அறிய வேகமாக வந்து சாவியைத் திருப்ப முயன்ற வுடன் மின்சார அதிர்ச்சியால் தாக் குண்டு வீழ்ந்தார்.

"வயர்களை அவசரம் அவசர மாக அப்புறப்படுத்தியதில் ஒரு ஆணியைப் பிடுங்கச் சிரமமாயிருந் ததால், அதை சுவரோடு தட்டி அமுக்கி விட்டனர். இது தான் தப்புத் துலங்கிய கதை."

ஆணியும் செம்புச் சாவியும் கடன் வாங்கியதும் குமார் மின்சார இலாகாவில் வேலை பார்த்ததும் சேர்ந்து சேகரை சிந்திக்க வைத்து உண்மையான குற்றவாளிகளைக் கண்டு பிடிக்க வழி வகுத்து விட்ட தல்லவா?

நண்பன் மூர்த்தி தப்பி விட்டான்.

சேகரின் நுண்ணறிவை துரை — ராம் — மூர்த்தி — இவர்கள் மட்டுமென்ன, நாமும் பாராட்ட வேண்டிய வர்களாகத் தான் இருக் கிறோம்.

— தமிழ்த்தென்றல்



அறிவின் ஆக்கம்:

ஒரே புகையாய்ப் போச்சு!

ஆசு: "பாம்பே கிராணிகல்." பதுமை: "சேகர்."

சாட்சியத்தை வைத்தே கிரிமினல். நேருக்கு நேராகப் பார்த்ததாகச் சாட்சியம் இருந்தால் போதும். முடிவு தண்டனை தான்.

பண்ணைக்கும் குடிமக்களுக்கும் தகராறு. துப்பாக்கிப் பிரயோகம் நடந்து விட்டது. இருவர் மாண்டனர். போலீசு விசாரணை. பறவைகளை வேட்டையாட துப்பாக்கி வைத்திருந்த தொண்டுக் கிழவர் "துர்க்கலாலுக்கு", குடிமக்கள் கட்சியில் அனுதாபமிருந்தது, பெரிய அனுசரணையாகப் போய் விட்டது அதிகாரிகளுக்கு.

குற்றவாளிக் கூண்டிலே ஏற்றப்பட்டு விட்டார். அமதாபாத் செஷன்ஸ் கோர்ட்டில் விசாரணை.

"சம்பவத்தை'க் கண்கொண்டு பார்த்தேன். சுட்டதை நேருக்கு நேர் பார்த்தேன்." இவ்வாறு சாட்சியம் கூறப்பட்டு விட்டதே! இனி என்ன நபிக்கை இருக்க முடியும்?

இந்தத் தொண்டுக்கிழவர் துளியும் நடுங்கவில்லை. தாடியைத் தடவிக் கொண்டார். பண்டையைச் சொரிந்து கொண்டார். தனக்காக வாதாட இருந்த வக்கீலை பேசாமலிருக்கும்படி வேண்டிக் கொண்டார். தானே குறுக்குக் கேள்விகளைப் போட்டார் இவ்வாறாக:

"நான் சுட்டதை நேரில் பார்த்தாய் அல்லவா?"

"ஆமாம்....................."

"சரி. அப்போது முன் நிலாக்காலம். நிலவு அடைந்து கொண்டிருந்தது. இல்லையா?"

"ஆமாம்.................."

"நான் சுட்டதைப் பார்த்தாய். அது எப்படி இருந்தது?"

"சத்தம் கேட்டது. **ஒரே புகையாய்ப் போச்சு.........**"

பகலில் துப்பாக்கிச் சுட்டதை மட்டும் பார்த்திருந்த அந்தக் கள்ளச் சாட்சி வெறும் மரமட்டையாகப் பதில்கூறி விட்டது. நேரில் பார்த்திருந்தால் அல்லவா இருள் கவிந்த பின் துப்பாக்கியின் வாயில் தீச்சுடர் கிளம்புவதைக் கண்டிருப்பான்?

விடுதலை

அனுபவத்தால் அரும்பி — அறிவின் ஆக்கத்தால் மலர்ந்து — அரை நொடியில் சட்டென்று வழி காட்டி மணமணத்த — அந்த அறிவின் அரசன் — தொண்டுக் கிழவர் — தம் நுண்ணறிவின் மாண்பை யார் தான் போற்றாமலிருக்க முடியும்?

— தமிழ்த்தென்றல்

"இருத்தல் வேண்டுவோன் இரும்பைத் தின்னு.
போகம் வேண்டுவோன் பொன்னைத் தின்னு."

— ஆன்றோர்வாக்கு.

தங்கமும் இரும்பும் சேர்த்து தயாரித்துள்ள

எமது

"அயத்தங்கபஸ்பத்தை"

தாது புஷ்டிக்கு நிகரற்ற

நவசக்தி லேகியத்துடன்

சாப்பிட்டால் இல்வாழ்க்கையில் அற்புத

சுகம் பெறுவீர்கள்.

மேலும், வெள்ளை வெட்டை, மேக வியாதிகள்

முதலிய ஆயிரக்கணக்கான வியாதிகள்

நிருவதுடன் இழந்த தாதை மீண்டும் பெறலாம்.

குணத்திற்கு உத்திரவாதமளிக்கப்படும்.

20 நாள் மருந்தின் விலை ரு. 10.

தபால் செலவு தனி.

இதர ஆலோசனைகளுக்கு:—

"தி ஆர்யா பார்மஸி"

114, யானைக்கல், மதுரை.

— "ராஜம்"

— தமிழ்த்தென்றல்

மொழியாராய்ச்சி

வித்துவான் ந. சேதுரகுநாதன்

123. அவிசு. அவி என்பது அவிக்கப்படும் உணவுகள் எல்லா வற்றினையும் குறிக்கும் பொதுப் பெயர். அவியல் என்பது அவற்றுள் ஒன்றிற்கு உரிய பெயராக வழங்கு வதனை எல்லோரும் நன்கு அறிவர்.

"அவிசொரிந்து ஆயிரம் வேட்
டலின் ஒன்றன்
உயிர்செகுத்து உண்ணாமை
நன்று" என்றும்

"செவியுணவிற் கேள்வி யுடை
யார் அவியுணவின்
ஆன்றாரோ டொப்பர் நிலத்து"

என்றும் ஆசிரியர் திருவள்ளுவர் அவி என்ற சொல்லினை வழங்கியுள் ளனர்.

'அவிச் சுவையின்றிக் கவிச் சுவை தெரியீர்' என்று ஔவையார் அருளினர். 'போற்று அவி காட்டி னோமே' என்பது தேவாரம். இவ்வாறு வழங்கும் அவி என்ற சொல்லையே வடமொழியாளர் 'அவிஸ்' என்று மாற்றி வழங்கியுள்ளனர். வேள்வி யில் வழங்கும் படையல்களுக்கும் நெருப்பிலிடும் பொருள்களுக்கும் அவிசு என்று பெயர் வழங்கினர். அவிர்ப்பாகம் எனவும் அது பின்பு வழங்கப்பட்டது.

124. ஆபத்து. பண்டைக் காலத்தில் மக்களுக்குச் செல்வ மென்றால் மாடுகள் தான் செல்வம். மாடு என்பதே செல்வத்தைக் குறிக் கும் பெயராகவும் தமிழில் அமைந்து விட்டது.

"வைப்பு மாடென்றும் மாணிக்
கத்து ஒளி என்றும்" என்றும்

"கேடில் விழுச்செல்வங் கல்வி
ஒருவற்கு
மாடல்ல மற்றயவை" என்றும்

வழங்குதல் அதற்குச் சான்றாகும். அத்தகைய மாடுகளும் பசுக்களைச் சிறந்த செல்வமாகப் போற்றிக் காத்து ஒழுகுதல் பண்டை மக்க ளின் வழக்கு. ஆதலால் போர் தொடங்குவதற்கு முன்பு பகைவ ருடைய நாட்டிலுள்ள ஆனிரை யைக் களவிற் கவர்ந்து வந்து காப் பது அரசரின் கடமையாயிற்று. அவ்வாறு ஆனிரையைக் கவர்வது 'ஆகோள்' என்று சொல்லப்படும். அது ஒரு நாட்டுச் செல்வத்தையிழப் பதற்கும் உயிரையிழப்பதற்கும் காரணமாகிய பெரிய இடையூற் றினை முன்பு அறிவிப்பதாக இருக் கின்றது. தனிப்பட்ட ஒருவனின் மாடுகளைப் பிறர் கவர்ந்து சென் றாலும் அதுவும் அவனுக்குப் பெரிய இடையூறு தான். ஆகவே இடை யூறு, துன்பம், நெருக்கடி, கேடு என்ற பொருள் தரும்படியாக, 'ஆ' என்ற பசுவினைப் பகைவர் பற்றிக் கொண்டு செல்லுதல் என்ற தொழி லிலிருந்து 'ஆபத்து' என்ற சொல் லைப் படைத்து வடமொழியாளர் அமைத்துக் கொண்டனர் என்க. ஆ என்பது ஆன்மாவாகிய உயிரினை யும் குறிக்குமாதலால் உயிரினைப் பற்றிக்கொண்டுபோதற்குத் துணிந்து நிற்கும் கூற்றுவன் முதலிய இடை யூறுகளையும் ஆபத்து என்று கூற லாம். ஆகவே இவ்வாறு 'ஆ' 'பற்று' என்ற இரண்டனடியாக ஆபத்து என்ற சொல் ஆக்கப்பட்டது என்க.

— தமிழ்த்தென்றல்

125. ஆனந்தம். ஆன் என்பது பசு. நந்துதல் என்பது நந்தம் என்று ஆயிற்று, விரும்புதல் என்பது விருப் பம் என்று ஆதல் போல என்க. நந்தம் என்ற சொல் இரண்டு பொருள் பயக்கும். பெருகுதல், அழிதல் ஆகிய இருபொருள் குறித்து இலக்கிய வழக்கில் வழங்குகின் றனர். "கயம் நந்திக் கவின்பெற" என்ற இடத்திலும்,

"பெரியவர் கேண்மை பிறை
போல நாளும்
வரிசை வரிசையாய் நந்தும்"

என்ற இடத்திலும் பெருக்கங்குறித்தது. 'நத்தம் போற் கேடும்' என்ற திருக்குறளில் 'நந்து' என்பது அம் என்ற ஈறு பெற்று வலித்து 'நத்தம்' என்று ஆகிப் பெருக்கம், ஆக்கம் என்ற பொருள் பயந்து நின்றது. 'நந்துந் தொழில் புரிந்தார் நாடு' என்ற இடத்து நந்து தல் என்பது அழிதல், கேடு என்ற பொருள் தந்து நின்றது.

ஆன் என்ற பசுவிலிருந்து பெருகும் பாலும் ஆனாகிய உயிரின் கட்டற்ற பெருக்க நிலையும் இன்பம் பயக்கும் தன்மை பெற்றிருதலால் ஆனந்தம் என்பது இன்பம் என்ற பொருளில் வழங்கும்படி ஆக்கப் பட்ட சொல். ஆனந்தம் என்பது பசுவின்கேடு, உயிரின் கேடு என்ற பொருளும் பயக்கும். ஆதலால் ஆனந்தம் என்பதற்குச் சாக்காடு

சீடி பிளாக் மேக்கர்ஸ்
போட்டோ, லைன்
3 கலர் பிளாக்குகள் செய்யுமிடம்.
11, அந்திக்கடை பொட்டல், மதுரை.

— தமிழ்த்தென்றல்

என்ற பொருள் கொண்டு 'மூதானந்தம்' என்பதைப் பெரிய சாக்காடு என்ற பொருள் படவும் வழங்கியுள்ளனர். ஆனந்தக்குற்றம் என்ற ஒரு குற்றமும் உண்டு. ஆகலால் 'ஆன்' 'நந்துதல்' என்ற இரண்டு சொற்களினடியாகப் படைக்கப்பட்ட சொல்லே ஆனந்தம் என்பது தேற்றம்.

126. நாசம். நைதல் என்பது நல்ல தமிழ்ச்சொல் என்பதனை யாவரும் நன்கு அறிவர். அதுநய்தல், நசுங்குதல் எனவும் மாறி வழங்குகின்றது. அதுவே முதனிலை நீண்ட தொழிற்பெயராகிக், 'கெடுதல்' என்பது கேடு என்று ஆயினாற் போன்று 'நாசம்' என்றுமிற்று. நசுங்குதலின் முதனிலை நீட்டமே 'நாசம்' என்பது. இதுவும் அவ்வாறு ஆக்கிய சொல்லே என்க.

127. ஆசை. ஆசு என்பது பற்று. தங்க நகையின் ஒரு ஓரத்துடன் மற்றொரு பாகத்தை இசைப்பதற்குப் பற்றுசிடுதல் என்று கூறுவதும், வெண்பாவின் தனிச்சீரினை இசைக்கும் அசையை ஆசு என்று வழங்குவதும், வில்வண்டியில் மேற்கூட்டில் வளைத்து அமைக்கும் வளை மரத்தை ஆசு என்று வழங்குவதும் இயல்பு.

"ஆசாகு எந்தை யாண்டுளன் கொல்லோ?" என்ற ஔவையார் பாடலில் ஆசு என்பது பற்றுக்கோடு என்ற பொருள் பயந்து நின்றவாறு காண்க. ஆகவே ஒரு பொருளின் மேல் வைக்கின்ற பற்றுதலுக்கு ஆசு என்பதனடியாக 'ஆசா' என்றும் 'ஆசை' என்றும் சொற்கள் அமைத்து வழங்கினர் என்க.

(தொடரும்)

பேபி காப்பி ருசிகரமானது விருதுநகர்.

அசல் புஷ்பராகங்கள் கிடைக்குமிடம் :-

சிவ. ப. ராஜரத்தின நாடார் & பிரதர்ஸ்,

இரத்தின வியாபாரம், விருதுநகர்.

பிராஞ்சுகள்:- மதுரை & தூத்துக்குடி.

ஆர்டருக்கு கிராண்டியுடன் நகைகள் செய்து தரக்கூடும்.

—தமிழ்த்தென்றல்

திரை உலகு:— கருத்துரை

அவர் இண்டியாவின்

"என் வீடு"

—: ராஜம் :—

வீடு—அதன் மீது பற்றுதல். மனைவி மக்கள்—அவர்கள்பால் பாசம். பணி—அவ்வழியே பொறுப்பு. பணம்—அதிலே நாணயம்.

இப்படி இல்லற நற்பண்புகளை அறிந்து நடக்கஉத்தமன்கூட அந்தப் பொல்லாத விநாடி நேர இன்பத்திற்காக — ஒரே இரவில் — தானாகவே ஓடோடி படுபாதாளத்தில் வீழ்ந்து விடுகிறான்.

உணர்வு வருகிறது. இனி என்ன பயன்? அவன் எங்கோ கிடுகிடு பள்ளத்தில். வீடும் குடும்பமும் மற்றொரு கோணத்தில் — உச்சி முகட்டில்.

தன் வீடும் குடும்பமும் நல்ல நிலையில் இருக்கட்டும் — வாழட்டும் — என்று ஒதுங்கி விடுகிறான், மூவிசி பல் தோட்டியோடு தோட்டியாக.

உத்தியோகத் துறையில் வில்லனாக வந்தவன், விதைத்த விதைக்கு பயன் அறுக்க வேண்டுமல்லவா? கதை ஒரு சுற்றுச் சுற்றி வீட்டிற்கு உடையவனை வீட்டிற்கே கொண்டு வந்து சேர்த்து விடுகிறது.

— தமிழ்த்தென்றல்

இது தான் கதை.

முன்மாதிரியான இல்லற வாழ்வைப் பற்றி குணச்சித்ர நடிகர் நாகையாவின் உயரிய சிந்தனையில் ஏற்பட்ட உணர்வின் உருவகமே இது. உயர்ந்த பண்புகளைச் சித்தரிக்கும் சிறந்த சித்திரம்.

கதைக்கு "சுதேசமித்திரன்" துணை ஆசிரியர் "சாண்டில்யன்" வசனம் அமைத்துள்ளார். எளிய நடை. உயர்ந்த கருத்துக்களைப் பூடகமாகவே பொதித்து வைத்து விட்டதால் சாதாரண மக்களால் ரசிக்க முடியாமல் போய் விட்டது.

கர்னாடக இசையின் மேன்மையைச் சுடர் விடச்செய்யும் சரவிளக்காகவே இப்படத்தின் இசை அமைப்பு இனிமை தருகிறது. எம். எல். வசந்த குமாரியின் வனக்குயிலோசை கேட்போரின் உணர்வைத் தாலாட்டுகின்றது. "கொஞ்சும் மொழி மைந்தர்களே" நம் சிந்தனையின் சிறகுகளைத் தடவி விடுகிறது.

எல்லா இடங்களிலும் நாகையாவின் நடிப்பு அபாரம். தங்கம் காலு

மற்போன இடம் — தனது மைந்தர்களின் இசை அரங்கில் அந்த "கொஞ்சும் மொழி......." பாடலில் உருகும் கட்டம் — தன் மைந்தர்களிடமே தன்னை வெளிப்படுத்த முடியாமல் திணறுமிடம் — "லீலா தன பால் பிலிம் கம்பெனிக்குள்" ஓடோடிச் சென்று வீரத்துடன் தனபாலை எதிர்க்கும் பாகம் — இந்தனையிலும் அவர் நடிக்கவே இல்லை.

நடந்தது நடந்தபடியே நடந்திருக்கிறார்.

வில்லன் டி. எஸ். பாலையாவின் நடிப்பு எல்லாக் கட்டங்களிலும் மிக மிகப் பொருத்தம்.

வீட்டில் பெண்கள் பேண வேண்டிய பொறுப்பு — அடக்கம் — கடமை — செல்லமான கண்டிப்பு — இவைகளில் உணர்வுடனும் லாவகமாகவும் டி. ஆர். ராஜகுமாரி நடித்திருக்கிறார்.

வித்யாவதி, கிரிஜா, கோபால கிருஷ்ணன் முதலியோர் தங்கள் பாகங்களில் நன்கு நடித்துள்ளனர்.

உணர்ச்சி வயப்படும் இளம் மனமுடையோர்களையும் சிறப்பாக பெண்களையும் உண்மையில் அநேக கட்டங்கள் மனம் கசிந்துருகும்படி செய்து விடுகின்றன. அதேபொழுது சிறந்த—உயரிய— அறம் மிகுந்த — பண்புகளையும் சிந்தனைத்திடலில் விதைத்துவிடுகின்றது.

குடும்பத்தோடு பார்க்கவேண்டிய உயர்ந்த — இல்லறக் கருத்தை விளக்கும் சிறந்த படம் "என் வீடு."



தேவை

எங்களுடைய வான்மதி காப்பி வில்லையை விற்பனை செய்ய டிபாசிட் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை.

சங்கரன் காபி & உ ர்க்ஸ், விருதுநகர்.

— தமிழ்த்தென்றல்

அமெரிக்க அரசியல் வாழ்வை சிறப்பிக்கும் பெண்கள்.

"44 மாநிலங்களின் சட்ட சபைகளில் தற்பொழுது 285 பெண்கள் பிரதிநிதிகளாக இருக்கின்றனர். கடந்த ஆண்டை விட இவ்வருடம் 49 அங்கத்தினர்கள் அதிகம். 197 பெண்கள் குடியரசு கட்சியைச் சேர்ந்தவர்கள். "வெர்மாண்டு" ராஜ்யத்தின் கீழ்ச் சட்ட சபைக்குத் தலைவராக திருமதி கன்சூலின் டேவி தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்."

அமெரிக்காவின் அரசியல்வாழ்வில் பெண்கள் பங்கு எவ்வளவு என்று குடியரசு தேசீய கட்சியின் பெண்கள் பகுதி அண்மையில் ஆய்வு செய்தது பற்றிய முடிவை அதன் தலைவி மிஸ் பெத்தா எம். அட்கின்ஸ் தெரிவிப்பதில் இவ்வாறு புள்ளிவிவரம் காட்டுகின்றார்.

காளிமார்க் சோடாகலர்

விருதுநகர்: திருநெல்வேலி: மதுரை.

புரோட்டா & பிரியாணிகளுக்குச் சிறந்த இடம்

ராம விலாஸ் காபி அன் சாப்பாடு ஹோட்டல்

ராமமூர்த்தி ரோடு, விருதுநகர்.

உரிமையாளர் :— T. ராம நாடார்.

— தமிழ்த்தென்றல்

ஆல் இந்தியா காம்பெடிஷன்ஸ்

H. O. கோயமுத்தூர்.

தமிழ் நாட்டில் தமிழர்களால் நடத்தப்படும்

மாபெரும் ஆங்கில — தமிழ் குறுக்கு வார்த்தை

போட்டி ஸ்தாபனம்

ஆல் இந்தியா காம்பெடிஷன்ஸ்

ஒன்றே.

இந்த வாரப் போட்டியில் நீங்கள் கலந்து கொண்டீர்களா?

இன்றே கலந்து கொள்ளுங்கள்.

மாதம் சராசரி ரூபாய் 50,000-க்கு மேல்

ரொக்கமாகப் பரிசளிக்கிறது.

விருதுநகர் டிப்போ:—

ரயில்வே பீடர் ரோடு.

59, டவுன்ஹால் ரோடு.

பிராஞ்ச் மானேஜர்:—

K. R. சந்திரன்.

209357

“ராஜம்”

தமிழ் நாட்டுச் செல்வச் சிறுவர்களுக்கு

திடகாத்திரமளிக்கும் சிறந்த உணவு

எங்கள்

ராஜா பார்லி பிஸ்கட்

ஸ்தாபிதம்: ASP தயாரிப்பு 1926

தென் குமரி எல்லைமுதல் திருவெங்கடப் பதியாம்

செந்தமிழ் நாடெங்கிலுமே சிறுவர் முதல் முதியோர்வரை

தேன் உணவு நம் ராஜாபார்லியோடு குல்கோஸ் கேக்கும்

தேவா அமுதமென உட்கொண்டு மகிழுகிறார்.

ராஜா பிஸ்கட் கம்பெனி,

115, திண்டுக்கல் ரோடு, மதுரை.

கிளை:- 2, காலேஜ் ஹவுஸ், டவுன் ஹால் ரோடு.

திரு L. V. ஷண்முகம் பிள்ளை.

விருதுநகர் கிளை ஏஜண்ட்:

A. ராமகிருஷ்ணன், 7/321, தெப்பம் மேல் பஜார்.